REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

www.thinakaran.lk

/ Thinakaran.lk / ThinakaranLK

2023 மார்ச் 16 வியாழக்கிழமை

# தினகரன்

THINAKARAN தினகரன்

1932 - 2022

வரு. 91 இல. 64 | Thursday 16, March, 2023 | 12பக்கங்கள் | 50/-







## உள்ளூராட்சி நிறுவனங்களின் நிர்வாகங்கள் ஆணையாளரின் கீழ்

### பிரதமர் தினேஸ் ஆளுநர்களுக்கு விளக்கம்

(லோரன்ஸ் செல்வநாயகம்)

உள்ளூராட்சி சபை நிறுவனங்கள் விசேட ஆணையாளரின் கீழ் முன்னெடுக்கவேண்டிய செயற்பாடுகள் தொடர்பில், பிரதமர் தினேஷ் குணவர்த்தன சகல ஆளுநர்களுக்கும் விளக்கமளித்துள்ளார். எதிர்வரும் (19) ஆம் திகதிக்குள் வாகனங்கள், வளங்களை மீள ஒப்படைக்க வேண்டுமெனவும் அறிவுறுத்தியுள்ளார்.

உள்ளூராட்சி சபை நிறுவனங்களை விசேட ஆணையாளரின் நிர்வாகத்தின் கீழ் கொண்டு


06

## இலங்கை கடன் மறுசீரமைப்புக்கு மேலும் 04 நாடுகள் ஒத்துழைப்பு

### அமைச்சர் அலி சப்ரி டுவிட்டரில் நன்றி தெரிவிப்பு

இலங்கைக்கு வழங்கப்பட்ட கடன்களை மறுசீரமைக்க மேலும் நான்கு நாடுகள் விருப்பம் தெரிவித்துள்ளதாக வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

அமைச்சர் அலி சப்ரி தனது டுவிட்



டர் பக்கத்தில் இவ்வாறு பதிவிட்டுள்ளார். சவூதி

06

## பொலிஸாருக்கு சீனாவிலிருந்து சீருடைத் துணிகள் நன்கொடை



சீன அரசாங்கத்திடமிருந்து இலங்கை பொலிஸ் திணைக்களத்திற்கு நன்கொடையாகக் கிடைத்த பொலிஸ் சீருடைத் துணிகள் கிடைத்துள்ளன. இவற்றை உத்தியோகபூர்வமாக பொலிஸ் திணைக்களத்திற்கு கையளிக்கும் நிகழ்வு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் நேற்று (15) முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்றது.

06

### வங்கிகள், போக்குவரத்து, எரிபொருள் விநியோகங்கள் வழமை

# தொழிற்சங்க போராட்டத்துக்கு மத்தியிலும் நிலைமை சுமுகம்

### நிறுவனங்களின் தலைவர்கள் தெரிவிப்பு

**மக்கள் வங்கி:** 352 கிளைகளில் 330 முழுமையாக செயற்பாடு

**எரிபொருள்:** 6,600 லீற்றர் பெற்றோல், டீசலுடன் 300 பவுசர்கள் தயார்

**ரயில்வே:** ஊழியர் அர்ப்பணிப்பில் 20 சேவைகள் முன்னெடுப்பு

**இலங்கை வங்கி:** தலைமை அலுவலகம் உட்பட 265 கிளைகள் செயற்பாடு

**இ.போ.ச:** ஜே.வி.பி தவிர்ந்த 07 தொழிற்சங்கங்கள் முழு ஒத்துழைப்பு



லோரன்ஸ் செல்வநாயகம்

தொழிற்சங்கங்கள் பல நேற்று நாடு முழுவதும் நடத்திய வேலை நிறுத்தப் போராட்டங்களின் போது, ரயில், பஸ் சேவைகள், வங்கிச் சேவைகள் எரிபொருள் விநியோகம் மற்றும் விற்பனை சேவைகள் சுமுகமாக இடம்பெற்றுள்ளன.

ரயில்வே தொழிற்சங்கங்கள் சில நேற்று வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்ட போதும் பொலிஸார் மற்றும் இராணுவத்தினரின் பாதுகாப்புக்கு மத்தியில் சுமார் 15 அலுவலக ரயில் சேவைகள் நடத்தப்பட்டதாகவும், ரயில்வே திணைக்கள உயரதிகாரியொருவர் தெரிவித்தார்.

அதேவேளை இலங்கை

06

## கோட்டை முதல் மாலபே வரை இலகு ரயில் திட்டம் ஆரம்பம்

### அமைச்சரவைக்கு பத்திரம் சமர்ப்பிப்பு



கொழும்பு கோட்டையிலிருந்து மாலபே வரை, இலகு புகையிரதத் திட்டத்தை மீண்டும் ஆரம்பிக்க அரசாங்கம் தயாராகி வருகிறது. இதற்கான மாற்று முன்மொழிவுகளை பெறுவதற்காக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க அண்மையில் அமைச்சரவை பத்திரத்தை சமர்ப்பித்துள்ளார்.

கொழும்பு மற்றும் அதனை அண்மித்த பகுதிகளில் நிலவும் கடுமையான போக்குவரத்து நெரிசலுக்கு தீர்வாக, இந்த இலகு

06

## வேலைநிறுத்தம்; மொத்த தேசிய உற்பத்தியில் ரூ.46 பில்லியன் இழப்பு



வேலைநிறுத்தம் காரணமாக மொத்த தேசிய உற்பத்தியில் நாளொன்றுக்கு 46 பில்லியன் ரூபாவை நாடு இழப்பதாக நிதி இராஜாங்க அமைச்சர் கலாநிதி ரஞ்சித் சியம்பலாபிடிய தெரிவித்தார்.

வேலை நிறுத்தம் காரணமாக கல்விக்கு ஏற்படும் பாதிப்பு கணக்கிட முடியாதளவுக்கு உயர்ந்த மட்டத்தில் காணப்படுவதாகவும்

06

## மடகஸ்காரிலிருந்து தப்ப முயன்ற ஹரக்கட்டா, சலிந்து மடக்கிப்படிப்பு

### கைதிகளாக நேற்று நாட்டுக்கு வருகை

(லோரன்ஸ் செல்வநாயகம்)

பாதாள உலக குழு உறுப்பினர்களான பிரபல போதைப் பொருள் விற்பனையாளர்கள் ஹரக் கட்டா மற்றும் குடு சலிந்து ஆகியோர் நேற்று நாட்டுக்கு கொண்டு வரப்பட்டனர். குற்றப் புலனாய்வு திணைக்கள அதிகாரிகள் இவர்களை மடகஸ்காரிலிருந்து கொண்டு வந்தனர்.

ஸ்ரீலங்கன் விமான சேவை நிறுவனத்துக்கு சொந்தமான யூஎல் 142 ஆம் இலக்க விமானம் மூலம் இவர்கள் நேற்று கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

மடகஸ்காரில் கைது

06

### மக்கள் மீதுள்ள சுமையை குறைக்குமாறு

## அஸ்கிரி, மல்வத்து மகாநாயக்கர்கள் ஜனாதிபதியிடம் வேண்டுகோள்

02

### ஜனாதிபதி செயலக வேண்டுகோளையடுத்து

## வேலை நிறுத்தத்தை கைவிட அரச மருத்துவ சங்கம் தீர்மானம்

02

## தொல்பொருள் திணைக்களத்தின் கீழ் திருமலை கன்னியா வெந்நீர் ஊற்று

(றொட்டவெவ குறூப் நிருபர்)

திருகோணமலை, கன்னியா வெந்நீர் ஊற்றின் வருமான முகாமைத்துவம் மற்றும் பராமரிப்புப் பணிகள் தொல்பொருள் திணைக்களத்தின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளதாக தொல்பொருள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்துக்களின் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடமாக போற்றப்பட்ட கன்னியா வெந்நீர் ஊற்று பகுதி,



தற்போது, பௌத்த மயமாக்கல் பகுதியாக மாற்றப்பட்டு வருவதாகவும் குற்றச்சாட்டுக்கள்

06

### இடமாற்றம் அமுலிலுள்ளதால்

## 24ஆம் திகதிக்கு பின்னர் பணி நீடிக்கப்பட மாட்டாது

### ஆசிரியர்களுக்கு கல்வி அமைச்சு அறிவிப்பு

2022 ஆம் ஆண்டு நிலவரத்தின் அடிப்படையில் நியமிக்கப்பட்ட ஆசிரியர்களுக்கு ஆசிரியர் இடமாற்ற சபையினால் வழங்கப்பட்ட இடமாற்றங்கள் அமுலிலுள்ளதால், எதிர்வரும் 24ஆம் திகதிக்குப் பின்னர் பணி நீடிக்கப்பட மாட்டாதென

06

Ministry of Education

## மடகஸ்காரில் கோர விபத்து; சீனன்கோட்டை வர்த்தகர் பலி

### மேலும் 02 இலங்கையர் படுகாயம்

பேருவளை விசேட நிருபர்

மடகஸ்காரில் இடம்பெற்ற வாகன விபத்தொன்றில் பேருவளை சீனன் கோட்டையைச் சேர்ந்த இரத்தினக்கல் வர்த்தகர் ஒருவர் (14) ஸ்தலத்திலே பலியானார். அத்துடன் இதில், மேலும்

06



## போராட்டத்தில் பங்கேற்காத டாக்டர்கள், சுகாதார ஊழியர்களுக்கு அமைச்சர் பாராட்டு



(லோரன்ஸ் செல்வநாயகம்)

போராட்டத்தில் பங்கேற்காது நாட்டின் 22 மில்லியன் மக்களுக்கும் அர்ப்பணிப்புள்ள சேவையை வழங்கும் வகையில் நேற்று கடமைகளிலீடுபட்ட டாக்டர்கள் மற்றும் சுகாதாரத் துறை ஊழியர்கள் அனைவருக்கும் பாராட்டுத் தெரிவிப்பதாக சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல குறிப்பிட்டுள்ளார்.

பல்வேறு சவால்களுக்கு முகங்கொடுத்து சுகாதார சேவையானது இயல்புநிலைக்கு கொண்டுவரப்படும்

06




தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2023 மார்ச் 16 வியாழக்கிழமை
# தினகரன்
THINAKARAN
තිනකරන්

தொழுகை நேரம்
சுபஹ் - 05.03
லுஹர் - 12.21
அஸர் - 03.35
மஃரிப் - 06.22
இஷா - 07.31

இன்றைய சுபதினம்
சுபகிருது வருடம் பங்குனி 02
ராகுகாலம் : பகல் : 1.30 - 3.00வரை
சுபநேரம் : காலை : 10.30 - 12.00வரை
யோகம்: சித்தயோகம்
திதி: சஷ்டி

## தவக்கால சிந்தனை



## குற்றம் கண்டுபிடிப்போரிடமிருந்து எச்சரிக்கை அவசியம்

(லூக்கா 11: 14 – 23)

தவக்காலத்தில் மூன்றாம் வாரத்தில் பயணிக்கின்றோம். இன்றைய வாசகம் நமது வாழ்வுக்கான சிறந்த படிப்பினையாக அமைகின்றது.

இயேசுவின் பணிக்காலத்தில் அவரது பொதுப்பணியில் குற்றம் கண்டுபிடிப்பதற்காகவே ஒரு கூட்டம் ஓயாது அலைந்துதிரிந்து கொண்டிருந்தது.

அவர் செய்கின்ற எல்லாச் செயல்களிலும் எத்தகைய குற்றத்தை கண்டுபிடிக்கலாம் என்பதிலேயே அவர்களது எண்ணமும், சிந்தையும் நிலையாக நிலைகொண்டிருந்தது.

இயேசு நன்மை செய்தாலும் அவர்கள் அதனை குற்றமாகவே நோக்கினார்கள். அதனால் இயேசுவின் நற்செயல்களை அவர்களால் இனம் கண்டுகொள்ள முடியாமற் போனது.

அதுமட்டுமல்லாது இயேசுவின் நற்செயல்களைப் பார்த்து அவரைப் பின்பற்றத் தொடங்கிய மக்களையும் அவரைப் பின்தொடரவிடாது தடுக்கவும் செய்தார்கள்.

வைக்கற் பட்டறை நாய்கள் போல தாங்களும் பலனைப்பெறாது அதனைப்பெற இயேசுவை நாடிய மக்களையும் தடுத்தார்கள்.

இன்றைய நற்செய்தியில் இயேசு: 'என்னோடு இராதவர் எனக்கு எதிராக இருக்கிறார்'என்பதனூடாக இயேசு தமது பணியினை அநீதியான முறையில் எதிர்த்தவர்களைக்குறித்து எச்சரிக்கின்றார்.

இன்றைய கிறிஸ்தவ நம்பிக்கை வாழ்விலும் நற்செய்தி விழுமியங்களை ஏற்கத் தவறுவோர் தாமும் அப்பாதையிலிருந்து விலகுவது மட்டுமல்லாது அடுத்தவரையும் அத்தகைய பாதையில் தள்ளமுனைவது வேதனையளிக்கின்றது.

எம் ஒவ்வொருவரது வாழ்க்கையிலும் அவ்வாறானவர்கள் குறித்து மிகுந்த அவதானத்துடன் செயற்படுவதுடன், அத்தகைய பாதையிலிருந்து விலகி நடக்கவும் தவக்காலம் எமக்கு அழைப்பு விடுக்கின்றது.

அருட்தந்தை நவாஜி...

உள்நாட்டு உற்பத்தி SENARO GN 125

# ஜனாதிபதி அலுவலக பாவனைக்கு மோட்டார் சைக்கிள்கள் கையளிப்பு

கைத்தொழில் அமைச்சினால் அறிமுகப்படுத்தப்பட்ட இலங்கையில் வாகன உற்பத்தி, ஒன்றிணைத்தல் மற்றும் உதிரிப்பாக உற்பத்திக்கான நிலையான செயற்பாட்டு நடைமுறையின் (SOP) பிரகாரம், உற்பத்தியை ஆரம்பித்த செனாரோ (SENARO GN 125) புதிய மோட்டார் சைக்கிள்களை ஜனாதிபதி அலுவலகத்துக்கு கையளிக்கும் நிகழ்வு (15) நடைபெற்றது.

செனாரோ மோட்டார் நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் ரொஷான வடுகேவின இந்நிலையத்தை திறந்து வைத்தார்.

மேலும், இது தொடர்பான ஆவணங்களும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க விடம் உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்டன.

இலங்கை வங்கியின் முழுமையான நிதிப் பங்களிப்புடன் செனாரோ மோட்டார் தனியார் நிறுவனம் அமைக்கப்பட்டுள்ளது.

யக்கல பிரதேசத்தில் அமைக்கப்பட்டுள்ள இத்தொழிற்சாலையூடாக

உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட உதிரி பாகங்கள் மூலம் 35% பெறுமதி கூட்டப்பட்டு இந்த SENARO GN 125 மோட்டார் சைக்கிளை உற்பத்தி செய்யப்படுகின்றது. இந்த பெறுமதி சேர்த்தலை விரைவில் 50% ஆக உயர்த்துவது அவர்களின் எதிர்பார்ப்பாகும்.




உயிர் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு

## 'குடு சலிந்து' வின் தாயார் நீதிமன்றில் மனு தாக்கல்

லோரன்ஸ் செல்வநாயகம்

மடகஸ்காரில் கைது செய்யப்பட்டு நேற்று நாட்டுக்கு அழைத்து வரப்பட்டுள்ள பிரபல போதைப்பொருள் வர்த்தகரான 'குடு சலிந்து' என்ற நபர் நீதிமன்றத்தில் மனுவொன்றை தாக்கல் செய்துள்ளார். தமது உயிர் பாதுகாப்பை உறுதிப்படுத்தக்கோரி தாக்கல் செய்யப் பட்டிருந்த மேற்படி 06

ஜனாதிபதி செயலகத்தின் வேண்டுகோளையடுத்து

## வேலை நிறுத்தத்தை கைவிட அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தீர்மானம்

(லோரன்ஸ் செல்வநாயகம்)

நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் வேலைநிறுத்தப் போராட்டத்தை இன்றுமுதல் (16) தற்காலிகமாக இடைநிறுத்தத் தீர்மானித்துள்ளதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது. அதற்கிணங்க, தற்போது நடைமுறையிலுள்ள வேலைநிறுத்தப் போராட்டத்தை, இன்று காலை 8.00 மணி முதல் தற்காலிகமாக கைவிடத் தீர்மானித்துள்ளதாகவும் அந்தச் சங்கத்தின் உயரதிகாரியொருவர் தெரிவித்துள்ளர். ஜனாதிபதி செயலகத்தினால் 06

## ஐக்கிய இராச்சிய வர்த்தகத் திட்டம் இலங்கையில் அமுல்

ஐக்கிய இராச்சியம் இலங்கையில் புதிய வர்த்தகத் திட்டத்தை ஆரம்பிக்கவுள்ளதாக கொழும்பிலுள்ள பிரிட்டன் உயர்ஸ்தானிகராலயம் தெரிவித்துள்ளது. இந்த ஆண்டு இதனை நடைமுறைப்படுத்த திட்டமிட்டுள்ளதாகவும் அந்த அறிவிப்பில் குறிப்பிடப் பட்டுள்ளது. இந்தத் திட்டத்தின் கீழ் 92% வீதமான தயாரிப்புகளுக்கு வரி விதிக்கப்படமாட்டாதெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது 06

## அறிவிப்பாளர் இர்பானின் பொன்மாலைப் பொழுது



தென்றல் எப்.எம்மின் அறிவிப்பாளரும் பொன்மாலைப் பொழுது ஏற்பாட்டாளருமான முஹம்மட் இர்பானின் தென்றல் எப்.எம்.மின் பொன்மாலைப் பொழுது Unwind இசை நிகழ்ச்சி எதிர் வரும் 19ம் திகதி ஞாயிற்றுக் கிழமை மாலை 6.00 மணிக்கு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன ஆனந்த சமரகோன் கலையகத்தில் இடம்பெறவுள்ளது.

நம் நாட்டின் முன்னணி இசைக் குழுவினரின் இசையில் முன்னணி பாடக, பாடகிகள் கலந்து சிறப்பிக்கும் இந்நிகழ்ச்சி தினகரன், வார மஞ்சரி ஊடக அனுசரனையுடன் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்ச்சிக்கான அனுமதி முற்றிலும் இலவசம். இதில் குடும்பத்தோடும் நண்பர்களோடும் கலந்துகொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அழைக்கிறார்கள்.

லண்டன், பக்கிங்ஹாம் மாளிகையில்

# பொதுநலவாய தின கொண்டாட்டங்களில் அமைச்சர் அலி சப்ரி பங்கேற்பு

வெளியுறவுத்துறை அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி, லண்டனில் நடைபெறும் பொதுநலவாய தின கொண்டாட்டங்களில் கலந்து கொண்டார்

22ஆவது பொதுநலவாய வெளியுறவு அமைச்சர்கள் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக பிரிட்டனுக்கு உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டுள்ள அமைச்சர் அலி சப்ரி, கடந்த (13) லண்டனில் பொதுநலவாய தினத்தை கொண்டாடும் பல நிகழ்ச்சிகளில் பங்கேற்றார்.

முக்கிய நிகழ்வாக வெஸ்ட்மின்ஸ்டர் அபேயில் பொதுநலவாய தின ஆராதனை இடம்பெற்றது. இதில் மன்னர் மூன்றாம் சார்ள்ஸ், ராணி மற்றும் அரச குடும்ப உறுப்பினர்கள்



கலந்து கொண்டனர். இந்த ஆராதனையின் போது, கிரேட் பிரிட்டன் மற்றும் லண்டன் பௌத்த விகாரையின் பிரதம சங்கநாயக்கர் வண. கலாநிதி போகொட சீலவிமல தேரர், பௌத்த மக்கள் சார்பாக பொதுநலவாய நாடுகளுக்கும் மக்களுக்கும் ஆசி வழங்கினார். சுதந்திரத்தின் 75ஆவது ஆண்டு நிறைவை இலங்கை கொண்டாடும் வகையில், லண்டனிலுள்ள இலங்கை உயர்ஸ்தானிகராலயம், இலங்கை கலைஞர்களான ரொஷானி அபே மற்றும் நுவான் ஹியூக் பெரேரா ஆகியோருக்கு ஆராதனை பாடல் இசை வழங்குவதற்கு ஏற்பாடு செய்திருந்தது. பொதுநலவாயத்தின் 56 நாடுகளை 06

மக்கள் மீதுள்ள சுமையை குறைக்குமாறு

## அஸ்கிரி, மல்வத்து மகாநாயக்கர்கள் ஜனாதிபதியிடம் வேண்டுகோள்

லோரன்ஸ் செல்வநாயகம்

பொருளாதார நெருக்கடியின் முழுமையான சுமையை மக்கள் மீது சுமத்துவதற்கு பதிலாக அரசாங்கத்தின் நிதியை முறையாக முகாமைத்துவம் செய்து ஊழல்களை ஒழித்து அரச வளங்கள் முறையற்ற விதத்தில் உபயோகப்படுத்துவதை தடுத்து

ஆக்கபூர்வமான தீர்வின் மூலம் மக்களுக்கான பாதிப்புகளை மட்டுப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென மல்வத்து அஸ்கிரி மகாநாயக்க தேரர்கள் ஜனாதிபதியிடம் கேட்டுக் கொண்டுள்ளனர்.

அதேவேளை மக்கள் பிரதிநிதிகள் அனுபவிக்கும் மட்டுப்படுத்தப்படாத சலுகைகளை இல்லாதொழிக்கவும் நடவடிக்கை எடுக்குமாறும் அவர்கள் 06

Capital TRUST Research (Pvt) Ltd.
A Capital TRUST Group Company
42, Sir Mohammed Macan Markar Mawatha, Colombo 3.
Hotline: 0705 666 777
WhatsApp: 0777 233 633

## Treasury Bill Rates continue to Decline and the Stock Market continues to Edge Upwards...

Daily Market Watch
15th March 2023

### Market Commentary

The stock market continued to edge upwards due to the expectation of Sri Lanka obtaining IMF Board approval on the 20th of March 2023.

Yields across 3, 6, and 12 months treasury bills saw a decline as a result of the reduction in Risk Premiums. If an investor has a taxable income in excess of Rs. 3.7 million per year and is subject to paying income tax of 36%, his effective yield net of taxes for investment in 3, 6 and 12 month treasury bills will amount to 17.88%, 17.50%, and 16.59% respectively.


### T bill Auction Summary

| Maturity | Weighted Average Yield Rate (%) | | Change from Last Week | Amount Accepted |
|---|---|---|---|---|
| | 15-Mar-23 | 08-Mar-23 | (%) | (LKR. Mn) |
| 3 months | 27.94 | 28.75 | -0.81 | 45,000 |
| 6 months | 27.34 | 27.77 | -0.43 | 20,000 |
| 12 months | 25.92 | 26.43 | -0.51 | 20,000 |


### Market Performance

| | 15.03.2023 | 14.03.2023 | %Chg. |
|---|---|---|---|
| All Share Price Index | 9,587.8 | 9,550.7 | 0.39 |
| S&P SL 20 Index | 2,810.0 | 2,791.3 | 0.67 |
| Turnover (LKR mn) | 1,625.7 | 1,459.1 | 11.4 |
| Foreign Purchases (LKR mn) | 303.0 | 182.0 | 66.5 |
| Foreign Sales (LKR mn) | 72.7 | 42.7 | 70.0 |
| Market Cap (LKR bn) | 3,983.9 | 3,962.3 | 0.5 |
| Market Cap (US$ bn) | 12.2 | 12.1 | 0.5 |
| Traded Companies | 245 | 246 | -0.4 |
| Market PER (x) | 5.1 | 5.1 | 0.6 |
| Price to Book (x) | 0.9 | 0.9 | 0.0 |
| Dividend Yield (%) | 4.0 | 4.0 | -0.5 |


### Relative Strength Index (RSI)




### Contributors to ASPI





### Turnover Breakdown




### Key Rates

| | 15.03.2023 |
|---|---|
| Prime Lending Rate (Avg. Weighted) | 22.74% |
| Fixed Deposit Rate (Avg. Weighted) | 19.23% |
| Treasury Bill Rate (364 Days) | 25.92% |
| Consumer Price Inflation - CCPI (YoY % change) | 50.60% |

### Market Benchmarks




### Largest Trades




### Corporate News

CASH DIVIDENDS

Ex-pack Corrugated Cartons PLC (PACK) - Cash dividend of LKR 0.72 per share. XD date – 22.03.2023.

Royal Ceramics Lanka PLC (RCL) - Cash dividend of LKR 2.4 per share. XD date 21.03.2023.

Lanka Walltile PLC (LWL) - Cash dividend of LKR 6.30 per share. XD date 20.03.2023.

Tea Smallholder Factories PLC (TSML) - Cash dividend of LKR 6.67 per share. XD date – 20.03.2023.

John Keells PLC (JKL) - Cash dividend of LKR 2.95 per share. XD date – 20.03.2023.

Lanka Tiles PLC (TILE) -Cash dividend of LKR 6.5 per share. XD date – 17.03.2023.

Laxapana Batteries PLC (LITE) -Cash dividend of LKR 1 per share. XD date – 16.03.2023.

Swisstek (Ceylon) PLC (PARQ) - Cash dividend of LKR 1.1 per share. XD date – 16.03.2023.

Ceylon Tobacco Ccompany PLC (CTC) - Cash dividend of LKR 30 per share. XD date – 31.03.2023.

Sampath Bank PLC (SAMP) - Cash dividend of LKR 3.45 per share. XD date – 31.03.2023.

SCRIP DIVIDENDS

Sampath Bank PLC (SAMP) - Scrip dividend of 1 share for 40.3989773996 Shares. XD date – 31.03.2023.

Commercial Bank of Ceylon PLC (COMB) - Scrip dividend of 1 share for 16.9934641119 Shares. XD date – 31.03.2023.

Hatton National Bank PLC (HNB) - Scrip dividend of 1 share for 23.5294128792 Shares. XD date – 31.03.2023.

*Disclaimer - The information contained in this material has not been independently verified. No representation or warranty express or implied is made as to, and no reliance should be placed on, the fairness, accuracy, completeness or correctness of the information or opinions contained herein and nothing in this presentation is, or shall be relied upon as, a promise or representation by the Company.*

## நாணய மாற்று

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 203.45 | 218.35 |
| கனடியன் டொலர் | 223.17 | 239.59 |
| யூரோ | 328.39 | 349.71 |
| ஜப்பான் யென் | 2.2763 | 2.4249 |
| சிங்கப்பூர் டொலர் | 228.62 | 244.11 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 370.07 | 393.49 |
| சுவிஸ் பிராங்க் | 332.65 | 356.98 |
| அமெரிக்க டொலர் | 311.62 | 328.90 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹ்ரின் டினார் | 845.12 | கட்டார் ரியால் | 87.33 |
| குவைத் டினார் | 1,036.67 | சவூதி ரியால் | 84.87 |
| ஓமான் ரியால் | 827.60 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 86.74 |

கிராமமொன்றை நாடாக மாற்றிய,
அந்த நாட்டை உலகுடன் இணையச்செய்த
சிறந்த மனிதனே

# நீடூழி வாழ்க!



ஹோமாகம தேர்தல் தொகுதியின் ஒவ்வொரு அங்குல நிலத்தின் பெறுமதியையும்
ஒரு தசாப்தத்திற்குள் ஆயிரம் மடங்கு உயர்த்திய
'ஹோமா - கம" எனும் நாடொன்றாக்குவதற்கு அளவில்லா அர்ப்பணிப்பைச் செய்த
எமது தலைவர், போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும்
வெகுசன ஊடக அமைச்சர்
கலாநிதி பந்துல குணவர்தன அவர்களுக்கு

**இனிய பிறந்தநாள் நல்வாழ்த்துக்கள்!**

## ஹோமாகமவிற்கான சேவைகளின் சில துளிகள்.....

- தெற்காசியாவின் பெரிய இரண்டாம் நிலை பாடசாலை, ஹோமாகம - மகிந்த ராஜபக்ஷ வித்தியாலயம்

  (சுமார் ஏழாயிரம் மாணவ, மாணவிகள் கல்வி பயில்வதுடன் 300 ஆசிரியர்களைக் கொண்ட, 100% பரீட்சைப் பெறுபேறு சாதனை கொண்ட, மாதிரி தேசிய பாடசாலை)
- பசுமை பல்கலைக்கழகம் NSBM (சுமார் பன்னிரண்டாயிரம் பட்டதாரிகள் கல்வி பயிலும்) - பிட்டிபன
- நெனோ தொழில்நுட்ப நிறுவனம் (சின்டெக்) மற்றும் நெனோ தொழில்நுட்ப பூங்கா
- நெனோ தொழில்நுட்ப பூங்காவில் ஜே. எல். மொரிசன்ஸ் மருந்து உற்பத்தி தொழிற்சாலை
- கொழும்பு பல்கலைக்கழகத்தின், தொழில்நுட்ப பீடம் (பிட்டிபன - மாஹேனவத்த)
- ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்ப பீடம்
- ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீடம் - மத்தேகொட
- மொரட்டுவ பல்கலைக்கழகத்தின், உயர் தொழில்நுட்ப நிறுவனம் - தியகம
- மீகொட விசேட பொருளாதார மத்திய நிலையம் (உறங்கா நகரம்)
- நிறுத்தல், அளத்தல் மற்றும் தரச் சேவை திணைக்களம் - பிட்டிபன
- மகிந்த ராஜபக்ஷ சர்வதேச விளையாட்டரங்கு - தியகம
- டெலிகொம் தரவு சேமிப்பகம் - பிட்டிபன
- பாடசாலைப் புத்தக களஞ்சியசாலை கட்டடத்தொகுதி - (பிட்டிபன - மாஹேனவத்த)
- இராணுவத்தின் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பிரிவு - பிட்டிபன
- விசேட தேவைகளைக் கொண்ட சிறுவர்களுக்கான கல்விக் கட்டடத்தொகுதி - வெனிவெல்கொல
- தெற்காசிய ஆசிரியர் அபிவிருத்தி நிலையம் - மீபே
- ஹோமாகம நகரத்தில், புதிய நீதிமன்றக் கட்டடத்தொகுதி
- ஹோமாகம நகரத்தில், பொதுச் சந்தைக் கட்டடத்தொகுதி
- ஹோமாகம ஆதார வைத்தியசாலை, ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் துணை நிறுவனமாக, போதனா வைத்தியசாலையாக தரமுயர்த்தியமை
- கைதிகளுக்கான ஒரே தேசிய பாடசாலை - வட்டரெக்க திறந்தவெளி முகாமிற்குள் - சுனீத வித்தியாலயம்
- அச்சகக் கூட்டுத்தாபன வளவு - பனாலுவ கைத்தொழில் பேட்டை

அனைத்துப் பல்கலைக்கழக பொருளாதார பட்டதாரிகள் சங்கம் / களனிவெளி வர்த்தக சங்கம் / விசேட பொருளாதார நிலைய வியாபார ஒன்றியம்,
ஹோமாகம பிரதேச சபையின் தலைவர் சம்பத் சமிந்த ஜயசிங்க / உப தலைவர் பந்துல ரஞ்ஜன் இலேபெரும உட்பட
இலங்கை பொதுஜன பெரமுன பாராளுமன்ற உறுப்பினர் குழு மற்றும் முன்னாள் தலைவர் ரங்க அபேசிங்க உட்பட ஐக்கிய தேசியக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் குழு

தினகரன்
THINAKARAN
35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சுபகிருது வருடம் பங்குனி மாதம் 02ஆம் நாள் வியாழக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1444 ஷஃபான் பிறை 23

### குறள் தரும் சிந்தனை



கொடுத்தும் கொளல்வேண்டும் மன்ற அடுத்திருந்து
மாணாத செய்வான் பகை

*தன்னோடு இருந்துகொண்டே தனக்குப் பொருந்தாத காரியங்களைச் செய்து கொண்டிருப்பவனைப் பொருள் கொடுத்தாவது பகைவனாக்கிக் கொள்ள வேண்டும்.*

## நாட்டின் நலனை சீர்குலைக்கும் நோக்குடனான செயற்பாடுகள்!

பொருளாதார நெருக்கடியில் இருந்து முழுமையாக மீட்சி பெறுவதற்குத் தேவையான அனைத்து வேலைத்திட்டங்களையும் அரசாங்கம் முன்னெடுத்துள்ளது. அத்திட்டங்களின் பிரதிபலன்களை ஏற்கனவே நாட்டு மக்கள் அடைந்து கொள்வதற்கு ஆரம்பித்து விட்டனர்.

நாட்டின் பொருளாதார நெருக்கடி படிப்படியாக நீங்கி வருகின்ற இவ்வேளையில், அபிவிருத்தி வேலைத்திட்டங்களில் ஒரு சிலவற்றுக்கு ஆட்சேபனை தெரிவிக்கும் வகையில் தொழிற்சங்க நடவடிக்கையொன்றை முன்னெடுப்பதற்கு சில தொழிற்சங்கங்கள் முயற்சி செய்த போதிலும், அம்முயற்சி முழுமையாகப் பயனளிக்கவில்லை. நாட்டில் நேற்று பயணிகள் போக்குவரத்து சேவைகள் உள்ளிட்ட பெரும்பாலான சேவைகள் வழமை போன்று இடம்பெற்றதைக் காண முடிந்தது.

நாட்டிலுள்ள பெரும்பாலான நிறுவனங்களில் வழமை போன்று மக்கள் சேவைகள் நேற்று இடம்பெற்றதைக் காணக்கூடியதாக இருந்தது. குறிப்பாக இலங்கை மின்சார சபையின் காசாளர்கள் கடமைக்கு வந்திருந்தனர். பெற்றோலிய கூட்டுத்தாபனம், இலங்கை போக்குவரத்து சபை டிப்போக்கள், மக்கள் வங்கி, இலங்கை வங்கி போன்றவற்றின் சேவைகள் பெரும்பாலும் வழமை போன்று இடம்பெற்றுள்ளதாகத் தகவல்கள் தெரிவித்தன. குறிப்பிடத்தக்களவில் ரயில்களும் பயணிகள் சேவையில் ஈடுபட்டன என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. அத்துடன் அந்த நிறுவனங்களின் தலைவர்களை மேற்கோள் காட்டி அத்தகவல்கள வெளியாகியிருந்தன.

நாடு பொருளாதார நெருக்கடியில் இருந்து மீட்சி பெறுவதற்கு முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டங்களை இத்தொழிற்சங்க நடவடிக்கை ஊடாகக் குழப்புவதற்கு எதிர்பாரக்கப்பட்டது. ஆனாலும் அந்த முயற்சியின் நோக்கம் மற்றும் பின்புலத்தை மக்கள் நன்கு அறிவர். தம்மை பணயமாக வைத்து அற்ப நலன்களை அடைந்த கொள்ள மேற்கொள்ளப்படும் முயற்சிகளுக்கு இந்நாட்டு மக்கள் ஆதரவோ ஒத்துழைப்போ நல்க மாட்டார்கள்.

நாடு இருக்கும் நிலையில் தொழிற்சங்க நடவடிக்கையொன்றை முன்னெடுக்க நாட்டின் மீது உண்மையான பற்றுக் கொண்ட எந்தவொரு தொழிற்சங்கமும் முயற்சி செய்யாது. அத்தோடு கடந்த வருடம் முகம்கொடுத்த பொருளாதார நெருக்கடியினால் நாட்டின் மக்கள் முகம்கொடுத்த நெருக்கடிகளின் தாக்கங்கள், பாதிப்புகள் இன்னும் முழுமையாக நீங்கிவிடவில்லை. இவ்வாறான நிலையில், இப்பொருளாதார நெருக்கடியிலிருந்து முழுமையாக மீட்சி பெற முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டங்களைச் சீர்குலைப்பதற்கு எவரும் ஆதரவோ ஒத்துழைப்போ நல்க முன்வர மாட்டார்கள்.

தொழிற்சங்க நடவடிக்கையொன்றை முன்னெடிக்கக் கூடிய சூழலில் நாடு இல்லை. அதனால் தொழிற்சங்க நடவடிக்கையைத் தவிர்த்துக் கொள்ளுமாறு அரச தரப்பில் கேட்டுக் கொள்ளப்பட்டிருந்தது. ஆனால் அந்த வேண்டுதலையும் பொருட்படுத்தாமல் தொழிற்சங்க நடவடிக்கையை முன்னெடுத்து தம் பலத்தை காட்டப் போன தொழிற்சங்கங்கள் மூக்குடைபட்டுள்ளதாக சமூக ஆர்வலர்கள் குறிப்பிடுகின்றனர்.

நேற்று தலைநகர் உட்பட பல இடங்களில் மக்கள் வழமை போன்று நடமாடியதைக் காண முடிந்தது. வழமை போன்ற நிலைமையே காணப்பட்டது.

அதேநேரம் தொழிற்சங்க நடவடிக்கையை முன்னெடுத்து அப்பாவி நோயாளர்களுக்கு சிகிச்சை அளிக்காதிருப்பதாலும், யாதுமறியா அப்பாவி மாணவர்களுக்கு கல்வி அளிப்பதை தவிர்த்து க்கொள்வதாலும் தம் எதிர்பார்ப்பை அடைந்து கொள்ள முடியுமென தொழிற்சங்கங்கள் கருதுவது வேடிக்கையானதாகும்.

நாட்டில் பெரும்பாலான நோயாளர்கள் இலவச சகாதார சேவையை எதிர்பார்த்து நிற்பவர்களாவர். அதனால் அவ்வாறானவர்கள் சுகாதார சேவைக்காக அரசாங்க வைத்தியசாலையையே நாடக் கூடியவர்களாக இருக்கின்றனர்.


அபோன்று நாட்டின் பெரும்பாலான மாணவர்கள் கல்விக்காக இலவசக் கல்வியையே நம்பி நிற்கின்றனர். இவ்வாறான நிலையில் தம் கோரிக்கையை அடைந்து கொள்ளும் நோக்கில் மாணவர்களையும் நோயாளர்களையும் தொழிற்சங்கங்கள் பணயமாகக் கொள்வது எவ்விதத்திலும் நியாயப்படுத்த முடியாத விடயமாகும்.

தொழிற்சங்க நடவடிக்கையை முன்னெடுப்பதற்கு முன்னர் அது தொடர்பில் சம்பந்தப்பட்ட தரப்பினருடன் பேச்சுவார்த்தையை முன்னெடுத்து நியாயமான தீர்வைப் பெற்று க்கொள்ள முயற்சி செய்ய வேண்டும். இதைவிடுத்து நோயாளர்களையும் மாணவர்களையும் பணயமாகக் கொள்வதால் இலவச சுகாதார சேவையும் கல்வி நடவடிக்கைகளும்தான் பாதிக்கப்படும். தொழிற்சங்கங்கள் இதனைக் கருத்தில் கொள்ளத் தவறக் கூடாது.

நாட்டில் பொருளாதார நெருக்கடி நிலவுகின்ற இவ்வேளையில், அரசியல் ஆதாயங்களை அடைந்து கொள்வதற்கு முயற்சிப்பது நல்லதல்ல. நாட்டை பொருளாதார நெருக்கடியிலிருந்து மீட்பது குறித்தே அனைவரும் சிந்திக்க வேண்டும். அதனை விடுத்து நாட்டை சீர்குலைப்பதற்கு முற்படுவது தவறானதாகும்.

editor.tkn@lakehouse.lk

# தமிழகத்திலும் வேகமாக பரவும் எச்3.எச்2 காய்ச்சல்!



இந்தியாவில் 'இன்ப்ளுயன்ஸா ப்ளு' காய்ச்சல் அதிகரித்துள்ள நிலையில், புதுவையில் பாடசாலைகளுக்கு விடுமுறை அறிவித்தது போல் தமிழகத்திலும் விடுமுறை அறிவிக்கப்பட வேண்டுமென்று கோரிக்கை விடுக்கப்படுகின்றது. இந்தியாவில் எச்3.எச்2 எனும் இன்ப்ளுயன்ஸா வைரஸ் காய்ச்சல் வேகமாகப் பரவி வருகிறது. தமிழகத்திலும் சில பகுதிகளில் இன்ப்ளுயன்ஸா வைரஸ் காய்ச்சல் பரவி வருகிறது. இந்த காய்ச்சலுக்கு இதுவரை தமிழகத்தில் இருவர் பலியாகியுள்ளனர்.

எச்3.என்2 என்பது ஒரு திரிபு வைரஸ் என்று மருத்துவர்கள் கூறுகிறார்கள். காய்ச்சல், இருமல், வரண்ட இருமல், தொண்டை வரட்சி, தொண்டைவலி, அதீத உடல் அசதி, உடல் சோர்வு, வயிற்றுவலி, வாந்தி, குமட்டல், வயிற்றுப்போக்கு ஆகியவை அறிகுறிகள் ஆகும். இந்த அறிகுறிகள் பொதுவாக எல்லா ப்ளு காய்ச்சல்களிலும் இருக்கும். ஆனால் இந்த எச்3என்2 காய்ச்சலில் அறிகுறிகள் தீவிரமாக இருக்கின்றன. அதனால் தொற்றுக்குள்ளான மக்கள் அவஸ்தைப்படுகின்றனர்.

இக்காய்ச்சல் வந்தால் சுயமருத்துவம் கூடாது. உடனடியாக அரசாங்க மருத்துவமனைக்கு வருமாறு இந்திய மாநில அரசுகள் அழைப்பு விடுத்துள்ளன. இந்தக் காய்ச்சல் 101 டிகிரிக்கு மேல் 2 அல்லது 3 நாட்களுக்கு மேல் இருக்கும். பின்னர் சிகிச்சை பெற்றால் குறைந்துவிடும் என்கிறார்கள் மருத்துவர்கள். இதற்கு சாதாரண காய்ச்சலுக்கு பயன்படுத்தும் பராசிட்டமோல் எடுப்பதை விட மருத்துவர்கள் பரிந்துரைக்கும் வேறு மருந்துகளை பயன்படுத்தினால் நோயின் தீவிரத்திலிருந்து விடுபடலாம் என மருத்துவர்கள் தெரிவிக்கிறார்கள்.

# முன்னோர் உருவாக்கிய மூலிகைக் குளியலை மக்களிடம் அறிமுகப்படுத்தும் பணியில்' சித்தர்கள் குரல்' அமைப்பு

மூலிகைகளின் மகத்துவம் பற்றி சித்தர்கள் அன்று கூறியிருக்கின்றார்கள். சித்தர்கள்தான் நல்ல மூலிகை, கெட்ட மூலிகை இரண்டையும் உருவாக்கியவர்கள் என்று 'சித்தர்கள் குரல்' அமைப்பின் ஆஸ்தான குரு சிவசங்கர் ஜி கூறுகிறார் .



ஆகவே அத்தகைய மூலிகைகளைக் கொண்டு தயாரிக்கின்ற குளியல் முறைமை மகத்துவமானது. உடல் ஆரோக்கியத்துக்கு முக்கியமானது. அத்தகைய சக்தி வாய்ந்த மூலிகைகளைக் கொண்டு தயாரிக்கின்ற நீரை வெதுவெதுப்பான இளஞ்சூட்டில் உடலிலே ஊற்றும் போது அபூர்வமான சக்திகள் உண்டாகும்.

சித்தர்கள், முனிவர்கள், முன்னோர் அன்று உருவாக்கிய இந்த மூலிகைக் குளியல் இன்னும் தொடர்கிறது. தற்போதைய ஐந்து நட்சத்திர நவீன ஹோட்டல்களிலும் மூலிகைக் குளியல் நடைமுறையில் உள்ளது. ஒருவருக்கு ஒரு குளியலுக்கு 25 ஆயிரம் ரூபா அறவிடப்படும் அளவுக்கு அதன் பெறுமதி, முக்கியத்துவம் மேலோங்கி நிற்கிறது.

உண்மையில் இத்தகைய மூலிகைக் குளியல் என்பது அன்று எமது முன்னோர் இயற்கையோடு இணைந்து, கலந்து உருவாக்கியதாகும்.

'சித்தர்கள் குரல்' அமைப்பின் ஆஸ்தான குரு சிவசங்கர் ஜி தலைமையிலான குழுவினர் 'ஈழத்து பழநி' என அழைக்கப்படும் கிழக்கில் சித்தாண்டி வேலோடும் மலை முருகன் ஆலயத்திற்கு விஜயம் செய்து 'மூலிகைக் குளியல்' மற்றும் மகாயாகத்தை யும் மேற்கொண்டனர்.

மூலிகை குளியல் நள்ளிரவு 12 மணியளவில் இடம்பெற்றது. சுமார் நூறு பக்தர்கள் குளியலில் ஈடுபட்டிருந்தார்கள். குளியலுக்கு பின் உடலைத் துடைப்பதில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

குளியலில் உள்ளடக்க வேண்டிய பொருட்கள் அதிகம். உடலில் உள்ள எதிர்மறை சக்திகளை போக்குவதற்கு இக்குளியல் உதவும். இங்கு 18 வகையான மூலிகைகள் குளியலுக்கு உகந்தன என்று சிவசங்கர் ஜி கூறுகிறார் .

ஆல், அரசு, அத்தி, இத்தி, வன்னி, நாயுருவி, மஞ்சள், சந்தனம், அறுகு, வில்வம், தேவதாரு, கருங்காலி, சந்தனம், அகில் உட்பட 18 மூலிகைகள் இடப்படும். எட்டு வகையான வாசனைத் திரவியங்கள் அங்கு இடப்படும். புனுகு, ஜவ்வாது, குங்குமம், கோரோசனை, பச்சைமஞ்சள், பன்னீர், செஞ்சந்தனம், கஸ்தூரி போன்ற எட்டு வகையான வாசனைத் திரவியங்கள் இடுவார்கள். ஒன்பது கிரகங்களுக்குரிய தானியம் மற்றும் பூக்கள் இடுவது வழக்கம். இதற்கு கோதுமை, அரிசி போன்ற தானியங்களும் தாமரைப்பூ போன்ற பூக்களும் பயன்படுத்தப்படும்.

இதைவிட பால், தயிர், நெய், கோசலம், கோமயம் போன்ற பஞ்சகௌவியங்கள் மற்றும் ஏலம், கறுவா, வால் மிளகு போன்ற திரவியங்கள் எல்லாம் இட்டு எலுமிச்சம்பழம் இட்டு தண்ணீரில் சிலமணி நேரம் சூடாக்க வேண்டும்.

பின்பு இளம் சுடுநீரில் அதனை சேர்த்துக் குளிக்க வேண்டும். சவர்க்காரம் பாவிப்பது தவறு. உடம்புக்கு புத்துணர்ச்சி கிடைக்கும். ஆரோக்கியமான உடம்பை கொண்டு வரும். பொதுவாக வாரம் ஒரு முறை அல்லது மாதம் ஒரு முறை மூலிகைக் குளியல் செய்வது நல்லது என்று சிவசங்கர் ஜி கூறுகிறார்.

தமிழர்கள் அன்று உருவாக்கிய இந்த மூலிகைக் குளியல் இன்று நவீன ஹோட்டல்களிலும் உலா வருவது அதற்குக் கிடைத்த அங்கீகாரம் எனலாம். இன்று பொதுவாக மூலிகைக் குளியல் பொடி இந்தியாவில் மட்டுமன்றி இலங்கையிலும் பயன்படுத்தப்படுகிறது. இயற்கை மூலிகை குளியல் பொடியை தினமும் தேய்த்துக் குளித்துவந்தால் முகப்பருக்கள் மற்றும் முகப்பருவினால் ஏற்படும் கரும்புள்ளிகள், தழும்புகள் மறைந்து முகம் மிருதுவாக மாறும். இக்குளியல் மாவை தினமும் தேய்த்துக் குளிக்கும்போது உடல் பளிச்சென மின்னும், முகமும் உடலும் பொலிவு பெறுவதோடு மனமும் உற்சாகமடையும்.



தோல் நோய்கள், தேமல், வியர்வை நாற்றம், தேவையற்ற முடிகள் போன்றவற்றை நீக்கும். தினமும் இதனை உபயோகித்து குளித்து வரும் போது தோலில் உள்ள சிறுகட்டிகளும் வரிகளும் மறைந்து போகும். வெயில் காலங்களில் வியர்வை நாற்றத்தைப் போக்கி நறுமணத்தையும், உற்சாகத்தையும் தரக்கூடியது. உடல் வெப்பத்தை குறைத்து உடலுக்கு குளிர்ச்சியைத் தருகிறது.

எனவே மூலிகைக் குளியல் மூலம் எமது உடலை தேகாரோக்கியமாக வைத்திருக்கும் அதேவேளை, மனதையும் உறுதியாக வைத்திருக்கலாம் என்கிறார் சிவசங்கர் ஜி.

**வி.ரி.சகாதேவராஜா...**
*(காரைதீவு குறூப் நிருபர்)*

# கம்பிரிகஸ்வெவ மனாருல் உலூம் ம.விக்கு குவைத் பரோபகாரி நிதியுதவியில் கட்டடம்

அநுராதபுரம் மாவட்டம் கம்பிரிகஸ்வெவ மனாருல் உலூம் மகா வித்தியாயத்துக்கு குவைத் நாட்டு பரோபகாரியின் நிதியொதுக்கீட்டில் நான்கு வகுப்பறைகளைக் கொண்ட புதிய கட்டடம் நிர்மாணிக்கப்படவுள்ளது. அதற்கான அடிக்கல் நாட்டுவிழா கடந்த செவ்வாயக்கிழமை கல்லூரி முன்றலில் நடைபெற்றது.

அநுராதபுரம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இஷாக் ரஹ்மானின் வேண்டுகோளின் பேரில் இலங்கைக்கான குவைத் நாட்டுத் தூதுவர் கலாப் எம்.புதையிர் அவர்களின் வழிகாட்டலில் அல் ஹிமா இஸ்லாமிய அமைப்பின் பணிப்பாளர் அஷ்ஷெய்க் நூறுல்லாஹ் (நளீமி) முயற்சியில் குவைத் இஸ்லாமிய கெயார் அமைப்பின் ஊடாக இவ்வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.



இதற்கான முழுநிதியையும் குவைத் நாட்டின் கொடையாளி நதா அப்துல் அசீஸ் பின்த தலாமா வழங்கியுள்ளார்.

இலங்கையில் குவைத் அரசாங்கம் வறுமையில் வாடும் மக்களுக்கும், கல்வி மற்றும் சுகாதாரத்துறைக்கும் உதவித் திட்டங்களை செயற்படுத்தியுள்ளது. இலங்கையில் உள்ள பல்கலைக்கழகங்களின் கட்டடங்கள், பாடசாலைகளுக்கான வகுப்பறைக் கட்டடங்களுக்கும் நிதியுதவி வழங்கி வருகின்றது என்று அஷ்ஷேக் நூறுல்லஹ் மௌலவி அங்கு உரையாற்றும்போது தெரிவித்தார்.

இங்கு உரையாற்றிய பாராளுமன்ற உறுப்பினர் இஷாக் ரஹ்மான், "எதிர்க்கட்சி எம்.பியாக இருந்து கொண்டு என்னால் முடியுமான உதவிகளை எனது மாவட்ட மக்களுக்கு செய்து வருகின்றேன். கொவிட் தொற்று, பொருளாதார



நெருக்கடி வேளைகளில் எல்லாம் எனது மக்களுக்கு உதவிகளை வழங்கியுள்ளேன்" எனக் குறிப்பிட்டார்.

**அஷ்ரப் ஏ. சமத்...**

# தாயின் கருவிலுள்ள குழந்தைக்கு வெற்றிகரமான இதய சத்திரசிகிச்சை!

## இந்திய மருத்துவநிபுணர்கள் நிகழ்த்திய சாதனை!

இந்தியத் தலைநகர் டெல்லியிலுள்ள எய்ம்ஸ் மருத்துவமனையில் 28 வயதான கர்ப்பிணிப்பெண் ஒருவர் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார். இவருக்கு ஏற்கனவே மூன்று முறை கரு கலைந்திருந்தது. 4 ஆவது முறையாக கர்ப்பம் அடைந்த அப்பெண்ணுக்கு நடத்தப்பட்ட பரிசோதனையில் கருவில் உள்ள குழந்தைக்கு இதயத்தில் அடைப்பு இருப்பது கண்டறியப்பட்டது.

இது பற்றி பெற்றோரிடம் மருத்துவர்கள் தெரிவித்தனர். அப்பெற்றோர் இந்தக் குழந்தையை பெற்றெடுக்க விரும்பினர். இதையடுத்து கருவிலேயே குழந்தைக்கு இதய சிகிச்சை அளிக்க டெல்லி எய்ம்ஸ் மருத்துவமனை டொக்டர்கள் முடிவு செய்தனர். இதற்கு பெற்றோரும் சம்மதம் தெரிவித்தனர்.



மிகவும் சவாலான இந்த சத்திரசிகிச்சையை மகப்பேறு மருத்துவத்துறையுடன் இணைந்து இதயவியல் மற்றும் இதய மயக்க மருந்துத்துறை டொக்டர்கள் குழுவினர் செய்தனர். அல்ட்ராசவுண்ட் வழிகாட்டுதலின் கீழ் இந்தச் சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. தாயின் அடி வயிற்றில் துளையிட்டு மெல்லிய குழாய் செலுத்தப்பட்டது. அது கருவில் உள்ள குழந்தையின் இதயத்துக்கு கொண்டு செல்லப்பட்டது. அதிலிருந்து சிறிய பலூன் வடிகுழாயை பயன்படுத்தி, திராட்சை அளவு கொண்ட இதயத்தில் இருந்து அடைப்பு வெற்றிகரமாக நீக்கப்பட்டது. இந்த சிகிச்சையை 90 நிமிடங்களில் செய்து முடித்தனர்.

சத்திர சிகிச்சைக்குப் பிறகு தாயும், குழந்தையும் நன்றாக உள்ளதாக டொக்டர்கள் தெரிவித்தனர். இது தொடர்பாக சத்திர சிகிச்சை செய்த மூத்த டொக்டர் ஒருவர் கூறும்போது, "தாயின் அடிவயிற்றின் வழியாக கருவில் உள்ள குழந்தையின் இதயத்தில் ஒரு ஊசியை செலுத்தி அடைப்பை சரி செய்தோம். குழந்தையின் இதயம் நன்றாக வளரும் என்று எதிர்பார்க்கிறோம். மேலும் குழந்தை பிறக்கும் போது இதயநோய் தீவிரம் குறைவாக இருக்கும். இதுபோன்ற ஒரு செயல்முறை மிகவும் சவாலானது. ஏனென்றால் அது கருவின் உயிருக்குக் கூட ஆபத்தாகலாம். இந்தச் சிகிச்சை மிக விரைவாக செய்யப்பட வேண்டும். ஏனென்றால் இதயத்தின் பெரிய அறையை துளைக்க வேண்டி இருந்தது. ஏதாவது தவறு நடந்தால் குழந்தைக்கு ஆபத்தாக முடியும். இந்த சிகிச்சையை நாங்கள் விரைவாக செய்து முடித்தோம்" என்றார்.

# பலாங்கொடையில் மண்சரிவு அபாயம்

**பலாங்கொடை தினகரன் நிருபர்**

பலாங்கொடை பிரதேசசெயலகப்பிரிவில் பெய்து வரும் கடும் மழை காரணமாக மண்சரிவு ஏற்படும் அபாயம் காணப்படுவதாக பலாங்கொடை பிரதேச செயலக செயலாளர் ஹேமந்த் பண்டார எச்சரிக்கை விடுத்துள்ளார். பலாங்கொடைபிரதேசத்தில் நேற்றுமுன்தினம் பெய்த கடும் மழை காரணமாக மண்சரிவு அபாய நிலைமை உள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார். எகொடவலேபொட, பெட்டிகல,இராசகல,மெத்தகன்த, கவரன்ஹேன போன்ற பகுதிகள் மண்சரிவு அபாயமுள்ள வலயங்களாக இனங்காணப்பட்டுள்ளதால் அந்த வலயங்களில் வாழும் பொதுமக்கள் மிகவும் எச்சரிக்கையாக இருப்பது அவசியம் என அறிவிக்கப்பட்டுள்ளது. நிலத்தில் வெடிப்பு ஏற்படுதல், மரங்கள் சரிந்து விழுவது, மற்றும் சேற்று நீர் வெளியாகுவது போன்ற அறிகுறிகள் தென்பட்டால் தாம் வாழும் இடத்தில் மிகவும் எச்சரிக்கையாக இருப்பது அவசியமென பிரதேச செயலாளர் அப்பகுதி மக்களுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

## சிறு விளம்பரம்

**மோட்டார் வாகனங்கள்**

**113 சுசூகி கார்கள் விற்பனைக்கு**

WP KD-0857 Maruti Suzuki Swift Car அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 077478 9216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 016886



**119 பஸ்கள், லொறிகள் விற்பனைக்கு**

NW GL-2736 Nissan Atlas Truck அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 077478 9216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 016879

SP LJ-1782 Tata 1615 Dump Truck அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 077478 9216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 016878

WP LB-5403 Tata Ace Truck அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 077478 9216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 016877

226-1865 Mazda Titan Truck அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 077478 9216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 016888



**124 டிராக்டர்கள், விவசாய உபகரணங்கள் விற்பனைக்கு**

NP LJ-5572 Tata LPK 1615/ 36 Box Tipper அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 077478 9216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 016882

**வேலைவாய்ப்பு**



**309 வெற்றிடங்கள் கணக்கியல்/ நிதி**

கொழும்பு05இல் உள்ள ஓர் நிறுவனத்திற்கு 01 02 வருட அனுபவமுள்ள அடிப்படை ஆங்கில அறிவுடைய கனிஷ்ட கணக்காளர் உடனடியாகத் தேவை. தயவு செய்து உடனடியாக அழைக்கவும். 0777999682. 016942


ජාතික ලොතරැයි මණ්ඩලය தேசிய லொத்தர் சபை National Lotteries Board

செவ்வாய்க்கிழமை 2023.03.14 உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

**மஹஜன சம்பத** சீட்டிழுப்பு இலக்கம் 5059 அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 14,172,453.00
ஆங்கில எழுத்து U வெற்றி இலக்கங்கள் 5 1 4 9 8 2

**ராசி சுப பலன்** Handahana சீட்டிழுப்பு இலக்கம் 368 அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 3,220,429.20
வெற்றி இலக்கினம் துலாம் வெற்றி இலக்கங்கள் 13 44 49 53 விசேட இலக்கினம் துலாம்

**தன நிதானய** சீட்டிழுப்பு இலக்கம் 1089 அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 80,822,004.00
ஆங்கில எழுத்து Q வெற்றி இலக்கங்கள் 04 14 21 59

**கொவிசெத** Govisetha சீட்டிழுப்பு இலக்கம் 3301 அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 86,901,795.20
ஆங்கில எழுத்து X வெற்றி இலக்கங்கள் 13 22 30 66

**மெகா பவர்** சீட்டிழுப்பு இலக்கம் 1407 அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 307,851,694.00
ஆங்கில எழுத்து Y சுப்பர் இலக்கம் 14 வெற்றி இலக்கங்கள் 53 58 62 63
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

**ஜாதிக சம்பத** சீட்டிழுப்பு இலக்கம் 1514 அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 10,683,504.80
வெற்றி இலக்கினம் ரிஷபம் வெற்றி இலக்கங்கள் 5 1 0 4 3 5


## வாகனங்கள் விற்பனைக்கு

| வாகன இல. | வகை | மாதிரி | வருடம் |
|---|---|---|---|
| **கார்** | | | |
| 301 -1XXX | HONDA | EY7 | 1996 |
| KP -1XXX | HONDA | INSIGHT | 2009 |
| **வெகு** | | | |
| PQ -8XXX | TATA | XENON | 2010 |
| **ஜீப்** | | | |
| KG -9XXX | HYUNDAI | SANTA FE A | 2003 |
| **லொறி** | | | |
| PS -4XXX | DFSK | EQ1020DR | 2011 |
| PR -6XXX | TATA | ACE | 2011 |
| PS -8XXX | MAHINDRA | MAXXIMO | 2012 |
| PV -5XXX | TATA | ACE EX | 2013 |
| DAA -1XXX | TATA | SUPER ACE | 2015 |
| **டிப்பர்** | | | |
| LC -5XXX | LANKA ASHOK LEYLAND | COMET TIPPER | 2006 |
| **முச்சக்கர வண்டிகள்** | | | |
| GM -1XXX | BAJAJ | BAJAJ AUTO | 2001 |
| GY -9XXX | BAJAJ | BAJAJ AUTO | 2002 |
| GZ -3XXX | BAJAJ | BAJAJ AUTO | 2002 |
| HH -5XXX | BAJAJ | AUTO RE 2 STROKE | 2003 |
| QA -6XXX | BAJAJ | AUTO RE 2 STROKE | 2005 |
| QI -6XXX | BAJAJ | AUTO RE 2 STROKE | 2006 |
| QI -6XXX | BAJAJ | AUTO RE 2 STROKE | 2006 |
| QG -0XXX | BAJAJ | AUTO RE 2 STROKE | 2006 |
| QO -1XXX | BAJAJ | AUTO AR4S | 2008 |
| QT -8XXX | BAJAJ | BAJAJ 4 S | 2009 |
| QU -8XXX | BAJAJ | BAJAJ 4S | 2009 |
| YK -8XXX | BAJAJ | RE 205 | 2011 |
| YL -4XXX | BAJAJ | RE 205 | 2011 |
| YL -4XXX | BAJAJ | RE205 | 2011 |
| YR -8XXX | BAJAJ | RE 205 | 2011 |
| YT -9XXX | BAJAJ | RE205 | 2011 |
| AAM -2XXX | BAJAJ | RE 205 | 2013 |
| AAR -9XXX | BAJAJ | RE | 2014 |
| ABE -0XXX | BAJAJ | RE | 2015 |

வாகன பரிசீலித்தல்களுக்கு:
**மெர்கன்டைல் இன்வெஸ்ட்மென்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பீஎல்சீ**
வாகன முற்றம் - இல.176, வாவி வீதி, மஹரகம.
தொ.பேசி : 0112 088 505

**வாகன பரிசீலித்தல்களுக்கான திகதிகள்**

மேற்குறிப்பிட்ட விலாசத்தில் 2023 மார்ச் 16ஆம், 17ஆம், 20ஆம் மற்றும் 21ஆம் திகதிகளில் மு.ப.9.00 முதல் பி.ப.5.00 வரை பரிசீலிக்க முடியும். (கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்படுவது 2023 மார்ச் 21ஆம் திகதி பி.ப.5.00 மணியுடன் நிறைவுபெறும்)

மீளப் பெற முடியாத கட்டணமான ரூ.200/-ஐ செலுத்தி கேள்வி படிவங்களை மேற்குறித்த விலாசத்தில் மெர்கன்டைல் இன்வெஸ்ட்மென்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பீஎல்சீ வாகன முற்றத்தில் இருந்து பெற்றுக்கொள்ளலாம். வெற்றிகரமான கேள்விதாரர் தொலைபேசியூடாக அறிவிக்கப்படுவதுடன் அதனுடன் தொடர்பான வாகனம் அறிவிக்கப்பட்டதிலிருந்து 7 நாட்களுக்குள் அப்புறப்படுத்தப்பட வேண்டும். கேள்வியிலிருந்து எந்தவொரு காரணத்தையும் கூறாமல் எந்தவொரு வாகனத்தையும் விலக்கிக் கொள்ள கம்பனிக்கு பூரண உரிமையுண்டு. அத்தோடு வெற்றிகரமான கேள்விதாரர் வாகனத்தை அதன் தற்போதைய நிலையிலேயே பொறுப்பேற்க வேண்டியதோடு, அதனுடன் தொடர்பான அரச வரி மற்றும் வாகன வருமான உத்தரவுப் பத்திரம் போன்றவற்றின் நிலுவைக் கட்டணங்கள் இருப்பின் அவற்றையும் கேள்விதாரரே பொறுப்பேற்க வேண்டும்.

இக் கேள்விகள் தொடர்பான மெர்கன்டைல் இன்வெஸ்ட்மென்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பீஎல்சீ இன் முடிவுகளே இறுதியானதாகும்.

www.skillsads.com

**மெர்கன்டைல் இன்வெஸ்ட்மென்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பீஎல்சி**

Mercantile Investments and Finance PLC

தலைமை அலுவலகம்
236, காலி வீதி, கொழும்பு - 03
தொ.பேசி: 2343720 - 7 நீட்சி: 210

தொடர்பு:
ஜானக்க - 071 1624559 / மொதித - 071 9530350

## பகிரங்க அறிவித்தல்

2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2) பிரிவின் விதிகளின் கீழ் ஓர் கம்பனியின் கூட்டிணைப்பு இத்தால் அறிவிக்கப்படுகிறது கீழ்க்காணும் கம்பனியின் பெயர் பின்வருமாறு மாற்றப்படுகிறது.

கம்பனியின் பழைய பெயர்:
**லக்ஷித்த மரைன் சேர்விசஸ் (பிரைவட்) லிமிட்டட்**
கம்பனி இலக்கம்: **PV 00260596**
பதிவு அலுவலக முகவரி : லெவல் 35, மேற்கு கோபுரம், உலக வர்த்தக மையம், கொழும்பு-01.
கம்பனியின் புதிய பெயர்:
**மெரிடைம் இன்டர்நெஷனல் டேர்மினல் (பிரைவட்) லிமிட்டட்**
பெயர் மாற்ற சான்றிதழ் திகதி: 2023 மார்ச் 07

## பகிரங்க அறிவித்தல்

**நீதிமன்ற கட்டளை மற்றும் கலைப்பாளரை நியமித்தல்**

**கம்பனியின் பெயர்:** E. PIHL & SON A/S
**பதிவு இல:** FC1002
**பதிவு அலுவலக முகவரி** இல. 585, கோட்டே வீதி, பிட்டகோட்டே
**வழக்கு இல:** HC/(Civil)/46/2019/CO
**கட்டளை திகதி:** 08 ஜுன் 2022
**நீதி மன்றம்:-** வர்த்தக உயர் நீதிமன்றம், கொழும்பு
**கலைப்பாளரின் நியமன திகதி** 2023 ஜனவரி 16
**கலைப்பாளரின் பெயர்** கெட்டவகந்தகே சுதத் குமார்
**கலைப்பாளரின் முகவரி** இல. 46, லும்பினி மாவத்த தளுகம, களனி
**கலைப்பாளரின் அலுவலக முகவரி** 3ஆம் மாடி, யதாமா கட்டிடம் இல. 142, காலி வீதி, கொழும்பு-03

Replies to Classifieds & Casual Advertisements published C/o the Daily News should only be sent by ordinary post. Replies sent under registered cover will not be accepted.

## வென்னப்புவ பிரதேச சபை

# கடை அறை பெறுகை

**வென்னப்புவ பிரதேச சபைக்குச் சொந்தமான லிஹிரியாகம வார சந்தையுடன் இணைந்த புதிய வணிகக் கட்டிடத்தில் மற்றும் லுனுவில வார சந்தை வளாகத்தில் இரு மாடி வணிகக் கட்டிடத்தில் கீழ்க்காணும் கடை அறைகளை மாதாந்த வாடகை அடிப்படையில் 3 வருட காலத்திற்கு, குத்தகைக்கு விடுவதற்காக, தகைமையான விண்ணப்பதாரிகளிடம் இருந்து பொறியிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.**

- அட்டவணையில் தரப்பட்டுள்ளவாறு குறித்த கேள்விப் பிணைத் தொகை மற்றும் ரூ. 500.00 விண்ணப்பப் படிவக் கட்டணத்தை செலுத்தி தலைமையகத்தில் பெற்றுக்கொள்ளப்பட்ட விண்ணப்பத்தின் மூலம் மட்டும் கேள்விகளைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
- கேள்விப் பத்திரங்களை விநியோகித்தல் மற்றும் கேள்விகள் ஏற்றுக் கொள்ளல் 2023.03.16 முதல் 2023.03.30ம் திகதி நண்பகல் 12.00 வரை மற்றும் கேள்வி திறத்தல் 2023.03.30ம் திகதி பி.ப. 3.00 இற்கு பிரதேச சபை தலைமையகத்தில் இடம்பெறும்.
  பொறியிடப்பட்ட கேள்விகள் "செயலாளர், பிரதேச சபை, வென்னப்புவ" முகவரிக்கு பதிவுத் தபாலில் அல்லது கொண்டுவந்து ஒப்படைத்தல் வேண்டும்.
- ஒவ்வொரு கடை அறைக்கும் வேறுவேறாக, கேள்விகள் 2 பிரதிகள் வீதம் சமர்ப்பிக்க வேண்டியதுடன் கேள்வி உள்ளிடும் உறையின் இடது பக்க மேல் மூலையில் "கடை அறை இலக்கம்" மற்றும் மூலப் பிரதி/ நகல் பிரதி என்று குறிப்பிடுதல் வேண்டும்.
- மேலதிக விபரங்களை - தொ.பே. இலக்கம் :- 031-2255276/ 031-2255379/ 0714416916
- இப்பெறுகை கீழ்க்காணும் நிபந்தனைகளுக்கு உட்பட்டது.

**பெறுகை நிபந்தனைகள்.**

1. இப்பெறுகையின் அடிப்படை குத்தகை கால எல்லை ஒப்பந்த தினத்தில் இருந்து 3 வருடங்களாகும்.
2. தேர்ந்தெடுக்கப்படும் குத்தகைதாரர் உத்தேச குறைந்தபட்ச கேள்வித் தொகை (மாதாந்த தவணை) மற்றும் மாதாந்த தவணைகள் 4 இற்கு சமமான பாதுகாப்பு பிணை வைப்பொன்றை 14 நாட்களுக்குள் ஒரே முறையில் செலுத்தி சபையுடன் ஒப்பந்தமொன்றிற்கு வரல் வேண்டும். அவ்வாறு உடன்படிக்கைக்கு உட்பட்ட பின்னர் சகல கேள்விதாரர்களினதும் கேள்விப் பிணை விடுவிக்கப்படும்.
3. குறைந்தபட்ச கேள்விக்கும் குறைவாக சமர்ப்பிக்கப்படும் கேள்விகள் இரத்துச் செய்யப்படும்.
4. கேள்வி விண்ணப்பங்களைப் பெற்றுக்கொண்டு விண்ணப்பிக்காதவர்களின் மற்றும் விண்ணப்பித்து தேர்ந்தெடுக்கப்பட்டு. குறித்த தினத்திற்கு முன் குறித்த கட்டணங்களைச் செலுத்தி உடன்படிக்கைக்கு உட்படாத கேள்விதாரர்களின் கேள்வி வைப்பு சபைக்கு உரிய தாக்கப்படும்.
5. விண்ணப்பதாரி அல்லது அவரால் பெயர் குறிப்பிடப்படும். ஒருவருக்கு கேள்வி திறக்கப்படும் வேளையில் சமுகமளிக்கலாம்.
6. படிவங்களைப் பூர்த்தி செய்யும் போது தவறுகள் இடம் பெறின் தனிக் கோட்டின் மூலம் வெட்டி திருத்தி குறுகிய ஒப்பத்தை இடுங்கள். (டிபெக்ஸ் செய்தல் கூடாது)
7. எந்தக் கேள்வியையும் ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமை பிரதேச சபை பெறுகைக் குழுவிற்கு உரியது.

**கேள்வி அட்டவணை**

| கடை அறை | சதுர அடி அளவு | குறைந்த பட்ச கேள்வி (மாதாந்த வாடகை) | மீளளிக்கப்படும் கேள்வி வைப்பு |
|---|---|---|---|
| லிஹிரியாகம கடை அறை இல. 01 | 108 | 2,600.00 | 3,500.00 |
| லிஹிரியாகம கடை அறை இல. 02 | 108 | 2,600.00 | 3,500.00 |
| லிஹிரியாகம கடை அறை இல. 03 | 108 | 2,600.00 | 3,500.00 |
| லிஹிரியாகம கடை அறை இல. 04 | 132 | 2,950.00 | 3,500.00 |
| லிஹிரியாகம கடை அறை இல. 06 | 108 | 2,600.00 | 3,500.00 |
| லுனுவில மேல் மாடி (ஒரு பகுதி) | 1880 | 26,450.00 | 25,000.00 |

செயலாளர்
வென்னப்புவ பிரதேச சபை

# பாகிஸ்தான் உயர் ஸ்தானிகராலயம் கொழும்பு

## ஜின்னாஹ் புலமைப்பரிசில் திட்டம் – 2023

"ஜின்னாஹ் புலமைப்பரிசில்" வடிவத்தில் ஒரு முறை வழங்கப்படும் பண உதவிக்காக விண்ணப்பிப்பதற்கு 2022 இல் க.பொ.த. உயர் தரப் பரீட்சையில் மூன்று பிரதான பாடங்களில் "A" தர சித்தியை பெற்ற தகுதியுடைய இலங்கையின் அனைத்து இனங்களையும் சேர்ந்த அரச கல்வி நிறுவனங்களின் மாணவர்களிடம் இருந்து கொழும்பில் உள்ள பாகிஸ்தான் உயர் ஸ்தானிகராலயம் விண்ணப்பங்களுக்கு அழைப்பு விடுக்கிறது.

விண்ணப்பப் படிவங்களை இல. 42, புல்லர்ஸ் ஒழுங்கை, கொழும்பு–7 என்ற முகவரியில் உள்ள பாகிஸ்தான் உயர்ஸ்தானிகராலயத்தில் பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பப் படிவங்களை http://www.pakistanhc.lk என்ற எமது உத்தியோகபூர்வ இணையதளத்தில் இருந்தும் தரவிறக்கம் செய்ய முடியும்.

புலமைப்பரிசிலுக்காக முறையாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தை பின்வரும் மின்னஞ்சல்/ தபால் முகவரிக்கு அனுப்ப வேண்டும்.

**மின்னஞ்சல் முகவரி** : pahiccolombo@mofa.gov.pk

**தபால் முகவரி** : பாகிஸ்தான் உயர் ஸ்தானிகராலயம்,
இல. 42–44, புல்லர்ஸ் ஒழுங்கை, கொழும்பு–7

**விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதி :**
31 மார்ச் 2023

**தூதரகத் தலைவர்**
**பாகிஸ்தான் உயர் ஸ்தானிகராலயம்**
**42-44, புல்லர்ஸ் ஒழுங்கை, கொழும்பு,**
**தொலைபேசி : 011-2055681-2**

## University of Kelaniya

## Invitation for Bids

1. The Chairman, Departmental Procurement Committee on behalf of the University of Kelaniya invites sealed bids from eligible and qualified bidders as described below.

| Item No. | Contract Number | Contract Name | Estimated Cost (LKR) | Amount of the Bid Security Guarantee | Minimum CIDA registration | Tender Document Fee (LKR) |
|---|---|---|---|---|---|---|
| 01. | UK/GA/GA3/2022/74 | Proposed construction of the 1st and 2nd floor in Newly constructed building for Department of Linguistics, Faculty of Humanities - Stage II | 8,200,000.00 | LKR 8,200.00 | SP 4, C7 & C6 | 3,000.00 |

2. Bidding will be conducted through National Competitive Bidding (NCB).
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and the CIDA registration shall be as indicated in the above table.
4. Interested bidders may obtain further information from the office of the **Works Engineer (Tel: 0112903164)**, Works Department, University of Kelaniya and inspect the bidding documents from **Assistant Registrar/General Administration, University of Kelaniya from 9.00 a.m. - 11.30 a.m. and 1.30 p.m. - 2.30 p.m**. on working days from **16th March 2023 to 05th April 2023.**
5. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on submission of a written request to the **Assistant Registrar, General Administration Branch**, University of Kelaniya, Dalugama, Kelaniya from **16th March 2023 to 05th April 2023** on working days from 9.00 a.m. - 11.30 a.m. and 1.30 p.m. - 2.30 p.m. upon payment of a non- refundable fee as mentioned in the above table to the Shroff of the University or **A/c No. 055-100110667549 - Bursar University of Kelaniya, People's Bank, Kelaniya.**
6. Bids shall be deposited in the tender box of the General Administration Division placed near the office of the Chief Security Officer, University of Kelaniya, Dalugama, Kelaniya, at or before **10.30 a.m. on 06th April 2023.**
7. Bids will be opened at **10.30 a.m. on 06th April 2023** in the presence of the bidders or their authorized representatives who choose to attend the bid opening. Late bids will be rejected.
8. All bids shall be accompanied by a Bid Security issued by a bank operating in Sri Lanka (registered under the Central Bank of Sri Lanka) using the form of bid security included in tender document or a cash deposit to the Shroff of the University.

**Chairman,**
**Departmental Procurement Committee,**
**University of Kelaniya,**
**Dalugama, Kelaniya.**
16/03/2023

# சஹ்ரானின் மனைவி நிபந்தனைகளுடன் பிணையில் விடுதலை

கல்முனை மத்திய தினகரன் நிருபர்

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைதாகி கடந்த நான்கு வருட காலமாக வழக்கு விசாரணையை எதிர்கொண்டிருந்த சஹ்ரான் ஹாசிமினுடைய மனைவியை நேற்று (15) கடும் நிபந்தனைகளுடன் பிணையில் விடுவிக்க கல்முனை மேல் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்தது.

இவருக்கு எதிரான வழக்கு விசாரணைகள் கடந்த நான்கு ஆண்டுகளாக இடம்பெற்று வந்த நிலையில் இந்த உத்தரவு நேற்று (15) பிறப்பிக்கப்பட்டது.

சுமார் நான்கு வருட காலமாக விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதை விசேட காரணியாக ஏற்றுக்கொண்டும் மற்றும் இதர காரணங்களை முன்வைத்தும் பிணை வழங்கப்பட வேண்டும் என பிரதிவாதியின் சட்டத்தரணிகளால் சுட்டிக் காட்டப்பட்டதையடுத்து, பிணை கோரிக்கை மன்றில் ஏற்றுக் கொள்ளப்பட்டு கடும் நிபந்தனைகளுடன் பிணை வழங்கப்பட்டுள்ளது.

இங்கு 25 ஆயிரம் ரூபாய் ரொக்கப் பிணை மற்றும் 25 இலட்சம் ரூபாய் பெறுமதியான இரு சரீர பிணையிலும் செல்ல அனுமதித்த நீதிபதி, பிரதிவாதி மற்றும் பிணையாளர்கள் வெளிநாடு செல்வதற்கும் தடை உத்தரவு பிறப்பித்தார். மேலும் ஒவ்வொரு மாதமும் கடைசி ஞாயிற்றுக்கிழமை குற்றப் புலனாய்வுப் பிரிவு அலுவலகத்தில் இவர் ஆஜராகி கையொப்பமிடல் வேண்டுமெனவும் உத்தரவிட்டார்.

## கோட்டை முதல் மாலபே...

புகையிரதத் திட்டம் அமைக்கப்படவுள்ளது. கொழும்பு மாலபே உள்ளிட்ட புறநகர் பகுதிகளின் ஆயிரக்கணக்கான அரச ஊழியர்கள் பணிபுரிவதால், இந்த ரயில் சேவையின் மூலம் நேரத்தையும் பணத்தையும் மிச்சப்படுத்த முடியுமென அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார். இதற்கென நிலத்தை கையகப்படுத்திய பிறகு, ஆரம்பமாகி, 2024 நடுப்பகுதியில் முடிக்கப்படவுள்ளது.

இந்தத் திட்டத்துக்கான நிதி மற்றும் தொழில்நுட்ப உதவியை ஜப்பானின் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனம் (JICA) வழங்குகிறது. இதற்கென, ஜப்பான் 1,850 மில்லியன் அமெரிக்க டொலர்களை கடனாக வழங்கவுதற்கு இணக்கம் தெரிவித்திருந்தது.

ஆனால், கடந்த காலத்தில் நாடு எதிர்கொண்ட பொருளாதார மற்றும் சமூக நெருக்கடிகள் காரணமாக இந்த இலகு புகையிரதத் திட்டம் நிறுத்தப்பட்டது. இந்நிலையில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஜப்பானுக்கான கடந்த உத்தியோகபூர்வ விஜயத்தின் போது, நடைபெற்ற இருதரப்பு கலந்துரையாடலின் விளைவாக இத்திட்டம் மீள ஆரம்பமாகவுள்ளது. 16 கிலோமீற்றர் நீளம் மற்றும் 16 நிறுத்தும் நிலையங்களுடன் நிர்மாணிக்கப்படவுள்ள இந்த புகையிரத சேவையின் ஊடாக மாலபேயில் இருந்து கொழும்பு கோட்டைக்கு 30 நிமிடங்களில் பயணிக்க முடியும். நெரிசல் நேரங்களில் 04 நிமிடங்களுக்கும், சாதாரண நேரங்களில் 10 நிமிடங்களுக்கும் ஒரு ரயில் நிலையத்தில் ரயில்களை நிறுத்துவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

## போராட்டத்தில் பங்கேற்காத டாக்டர்கள்...

நிலையில், நோயாளிகளை பணயம் வைத்து மேற்கொள்ளப்படும் இத்தகைய வேலைநிறுத்தப் போராட்டம் அடிப்படையற்றது என்றும் அவர் தெரிவித்தார். பல்வேறு தொழிற்சங்கங்கள் மற்றும் சுகாதார சேவைத் துறையினர் பெருமளவிலானோர் வழமைபோன்று கடமைகளை நிறைவேற்றிவருவதாகக் குறிப்பிட்டுள்ள அமைச்சர், இவர்களை பாராட்டுவதாகவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். அதற்கிணங்க, தொழில் ரீதியாக பெற்றுக் கொடுக்க முடிந்த பாராட்டுக்கள் தொடர்பிலும் ஆராய்ந்து அதுதொடர்பில் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல அமைச்சின் செயலாளருக்கு அறிவுறுத்தியுள்ளார்.

## மடகஸ்காரில் கோர விபத்து;...

இரு வர்த்தகர்கள் காயமடைந்தனர். இலங்கை நேரப்படி நேற்று முன்தினம் 5.30 மணியளவில் இக்கார் விபத்து இடம் பெற்றது.இரு பிள்ளைகளின் தந்தையான முஹம்மத் ரஹ்ம் முஹம்மத் ரிலா என்ற இரத்தினக்கல் வர்த்தகரே இவ்விபத்தில் உயிரிழந்தார். சீனன் கோட்டையைச் சேர்ந்த முஹம்மத் இப்ராஹிம் முஹம்மத் ஹூஸைன், முஹம்மத் இக்பால் முஹம்மத் இஸ்ரத் ஆகிய இருவருமே காயமுற்று மடகஸ்கார் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இரத்தினக்கல் வர்த்தக நடவடிக்கைக்காக வாடகை காரில் பயணம் செய்த சமயம், இன்னொரு காருடன் மோதி இவ்விபத்து நேர்ந்துள்ளது. விபத்தில் மரணமான முஹம்மத் ரிலாவின் ஜனாஸா அன்றைய தினம் நள்ளிரவு மடகஸ்காரில் நல்லடக்கம் செய்யப்பட்டது. விபத்தில் பலியான வர்த்தகர் கடந்த நான்கு வருட காலமாக மடகஸ்காரில் தங்கியிருந்து இரத்தினக்கல் வியாபாரத்தில் ஈடுபட்டு வந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

**கம்பனி பெயர் மாற்றல் அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2) பிரிவின் கீழ் பின்வரும் கம்பனி தனது பெயரை (8ம் இல. சட்டத்தின் பிரகாரம்) 2023 பெப்ரவரி 23ம் திகதி முதல் மாற்றியுள்ளது என்பதை அறிவித்தருகிறோம்.

**கம்பனியின் முந்தைய பெயர்:**
எஸ்.ஏ.நொலேஜ் சர்விசஸ் (பிரைவட்) லிமிட்டட்

**கம்பனியின் இல : பீவி 84389**

**முகவரி:**
5ம் மாடி, இல. 275, நாவல வீதி, நாவல.

**கம்பனியின் புதிய பெயர்:**
வொரசிட்டி சோர்விசஸ் (பிரைவட்) லிமிட்டட்

எஸ்ஜே கோப்பரேட் சேர்விசஸ் (பிரைவட்) லிமிட்டட
கம்பனி செயலாளர்கள்
இல 20/A, வல்பொல வீதி, அங்கொடை.

## இலங்கை கடன்...

அரேபியா, பாகிஸ்தான், ஹங்கேரி, குவைத் ஆகிய நாடுகள் இலங்கை சார்பில் சர்வதேச நாணய நிதியத்துக்கு நிதி உத்தரவாதம் வழங்கியுள்ளதாக சுட்டிக்காட்டியுள்ள அமைச்சர் அலி சப்ரி, இது குறித்து நன்றியும் தெரிவித்துள்ளார். மேலும், இலங்கைக்கு நிதி உத்தரவாதம் வழங்கிய இந்தியா, பெரிஸ் கிளப் மற்றும் சீனாவுக்கும் மீண்டும் ஒருமுறை அவர் நன்றி தெரிவித்துள்ளார்.

## தொழிற்சங்க போராட்டத்துக்கு...

வங்கியின் தலைமை அலுவலகம் உள்ளிட்ட நாடு முழுவதும் செயற்படும் 265 கிளைகள் நேற்று வழமைபோன்று செயற்பட்டதாக இலங்கை வங்கியின் பொது முகாமையாளர் ரசல் பொன்சேக்கா தெரிவித்தார். அத்துடன் இலங்கை வங்கியின் அனைத்துப் பிரிவுகளும் நேற்று வழமைபோன்று மக்களுக்கான சேவையை பெற்றுக் கொடுத்ததாகவும் அவர் தெரிவித்துள்ளார். மக்கள் வங்கியின் பதில் பிரதம நிறைவேற்று அதிகாரி க்ளரிவ் பொன்சேக்கா, அது தொடர்பில் தெரிவிக்கையில்,

நாடு முழுவதுமுள்ள 340 மக்கள் வங்கி கிளைகளும் நேற்று முழுமையாக செயற்பட்டதாகவும் தெரிவித்துள்ளார். அத்துடன் எரிபொருள் மொத்த விநியோக நடவடிக்கைகள் வழமை போன்று நேற்றும் இடம்பெற்றதாக பெற்றோலியக் கூட்டுத்தாபன மற்றும் கொலன்னாவை முனையத்தின் தலைவர் எம்.யூ.மொஹம்மட் தெரிவித்தார். எரிபொருள் விநியோக மற்றும் விற்பனை நடவடிக்கைகளை முறையாக முன்னெடுக்கும் வகையில் 6,600 லீற்றர் டீசல் மற்றும் பெற்றோல் 300 பவுசர்களில் விநியோகிக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில், ரயில்வே துறையின் அனைத்து சேவைப் பிரிவுகளுக்குமான விடுமுறைகள் நேற்று முன்தினம் முதல் ரத்துச்செய்யப்பட்டுள்ளதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்திருந்தது.

ரயில்வே பொதுமுகாமையாளர் டபிள்யூ.ஏ.டி.எஸ். குணசிங்க இதுதொடர்பில் நேற்றுத் தெரிவிக்கையில்,

2321/7 ஆம் இலக்க அரசாங்கத்தின் அதிவிசேட வர்த்தமானியின்படி கடந்த (27) இல், ரயில் சேவை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் அத்தியாவசிய சேவையாக பிரகடனப்படுத்தப்பட்டிருந்தது.1979 இலக்கம் 61 அத்தியாவசிய பொதுச்சேவை சட்டத்தின் இரண்டாம் சரத்தின் கீழ், அத்தியாவசிய பொதுச் சேவையாக பிரகடனப்படுத்தப்பட்ட ரயில் சேவையின் சகல உத்தியோகத்தர்களினதும் விடுமுறைகள் முதல் ரத்துச்செய்யப்படுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

அந்த அறிவித்தலுக்கிணங்க (15) கடமைக்கு சமுகமளிக்காத சகல உத்தியோகத்தர்களும் அதுதொடர்பில் விளக்கமளிக்க வேண்டுமென்றும் இது குறித்த அறிக்கையை தமக்கு கையளிக்கவேண்டுமென்றும் ரயில்வே திணைக்களம் அறிவுறுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## வேலைநிறுத்தம்; மொத்த...

அவர் தெரிவித்தார். இச்சந்தர்ப்பத்தில் செய்ய வேண்டியது வேலை நிறுத்தத்தை விட வேலை செய்யும் நாட்டை உருவாக்கி, மீண்டும் நாட்டை வழமையான நிலைமைக்கு கொண்டு வருவதாகும் எனவும் அவர் தெரிவித்தார்.

தற்போது காணப்படும் அனைத்து சவால்களுக்கும் முகம் கொடுத்து ஒரு நாடாக, மெல்ல மெல்ல எழுச்சி பெற்று வரும் சந்தர்ப்பத்தில், இவ்வாறான அடிப்படையற்ற வேலை நிறுத்தத்தை மேற்கொண்டால் நாடும் பொருளாதாரமும் மீண்டும் வீழ்ச்சி அடைவதை தடுக்க முடியாதெனவும் அவர் தெரிவித்தார். கடந்த காலம் முழுவதும் பல அழிவுகள் ஏற்பட்டாலும் அரச சேவைக்கு வழங்கும் எதனையும் குறைக்கவில்லை. அவர்கள் முகங் கொடுக்கக்கூடிய அனைத்து சலுகைகளையும் முதற் சந்தர்ப்பத்திலேயே பெற்றுக் கொடுத்துள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

"மொத்த தேசிய உற்பத்தி வருடத்திற்கு16,669 பில்லியன் ரூபாவாகும் . அதனை 365 ஆல் பிரித்தால் 46 பில்லியன் ரூபா ஒருநாள் மொத்த தேசிய உற்பத்தி. ஒரு நாள் முழுவதும் செயலிழக்கச் செய்தால் நாளொன்றுக்கு மொத்த தேசிய உற்பத்தியில் 46 பில்லியன் ரூபாய் இழக்கப்படுகிறது. கல்வி, இதில் கணக்கிடப்படவேயில்லை. அதை கணக்கிட முடியாது. அதனை நாளைய தினம் உருவாக்க முடியாது போனால், எழுச்சி பெற்று வரும் நாட்டுக்கு இந்த நடவடிக்கைகள் பொருத்தமானதா இல்லையா என நாம் சிந்திக்க வேண்டும் " என அவர் தெரிவித்தார்.



இணைப்பு - 01

**2011 இல. 40 சட்டத்தின் திருத்தப்பட்ட 2006இல் 5 நிதி மோசடியைத் தவிர்க்கும் சட்டத்தின் 8(3) பிரிவின் பிரகாரம் விடுக்கப்படும் சொத்து செயற்பாடற்றதாக்கும் அறிவித்தல்**

இலக்கம் 43/29, சங்கானந்த மாவத்த, நல்லூருவ, பாணந்துறை என்ற முகவரியில் குளத்தி தமிது சாமேந்ர பெரேரா பெயரில் உள்ள கீழ்க்காணும் சொத்துக்களை மேற்படி சட்டத்தின் 35ஆம் பிரிவின் பிரகாரம் சட்ட விரோத செயற்பாடொன்றின் மூலம் அல்லது ஏதேனும் சட்ட விரோத செயற்பாட்டின் மூலமான பணத்தின் மூலம் பெறப்பட்டது அல்லது உரிமையாக்கப்பட்டதாக உறுதி செய்யப்பட்டுள்ளதால் மேற்படி சட்டத்தின் 7 மற்றும் 8 பிரிவின் பிரகாரம் 2022.12.06 முதல் ஹோமாகம உயர் நீதிமன்ற HC/SPL/02/2022 இன் கீழ் செயற்பாடு அற்றதாக்கப்பட்டுள்ளது.

(i) சட்டத்தரணி மற்றும் பகிரங்க நொத்தாரிசு பி.டி. சந்ரகீர்த்தியினால் எழுதி உறுதி செய்யப்பட்ட 2021.10.11ம் திகதிய இல. 13935 எனும் கொள்வனவுப் பத்திரத்தின் மூலம் கொள்வனவு செய்யப்பட்டுள்ள. துன் அதஹேன இல. 488 எனும் கிராம அதிகாரி பிரிவில் அமைந்துள்ள தொடல்லவத்தே, தெனிய எனும் காணி உத்தரவுபெற்ற நில அளவையாளர் கே.டி.ஜீ. வீரசிங்ஹவினால் அளந்து தயாரிக்கப்பட்ட 2003.06.23ம் திகதிய இல. 2445 வரைபடத்தின் துண்டு இல. 19 கொண்ட 15 பேர்ச் காணி மற்றும் வீடு, வீட்டில் உள்ள சகல வீட்டுத் தளபாடங்கள் மற்றும் மின் உபகரணங்கள்.

மேற்படி சொத்து சம்பந்தமாக தமது உரிமை கோருதலை நீதிமன்றத்தில் உறுதி செய்வதற்கு, முன்றாம் தரப்பினருக்கு வாய்ப்புகளை வழங்கும் முகமாக இத்தால் பகிரங்கப் படுத்துகிறேன்.

**நீதிமன்றத்தின் கட்டளைப் பிரகாரம்,**

**பதிவாளர்,**
**ஹோமாகம உயர் நீதிமன்றம்.**



## மடகஸ்காரிலிருந்து தப்ப முயன்ற...

செய்யப்பட்ட மேற்படி இருவரையும் அங்கிருந்து நாடு கடத்துவதற்கு, அந்நாட்டு அரசாங்கம் தீர்மானித்தது. இதையடுத்தே, இலங்கையிலிருந்து சென்ற குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் அவ்விருவரையும் பொறுப்பேற்று நேற்று நாட்டுக்கு கூட்டி வந்தனர்.

இவ்விருவரும் மடகஸ்காரில் உள்ள இவாடோ சர்வதேச விமான நிலையத்திலிருந்து நாட்டை விட்டு வெளியேற முயற்சித்த போது, இன்டர் போல் பணியக அதிகாரிகள் மற்றும் மடகஸ்காரின் சட்ட அமுலாக்கல் அதிகாரிகள், அந்நாட்டின் சுங்க அதிகாரிகள் ஆகியோர் இணைந்து நடத்திய கூட்டு நடவடிக்கையில் கைதாகினர்.இது குறித்து.இலங்கையின் வெளிவிவகார அமைச்சுக்கு கடந்த (08) உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டது.

மேற்படி இருவரும் தனிப்பட்ட ஜெட் விமானம் மூலம் மடகஸ்காருக்கு தப்பிச் சென்றிருந்த போது அந்நாட்டின் பாதுகாப்புப் படை அவர்களை கைது செய்தது.

மடகஸ்காரிலிருந்து இலங்கைக்கு கொண்டுவரப்பட்டுள்ள போதைப்பொருள் வர்த்தகத்தில் ஈடுபட்டுவரும் ஹரக் கட்டா மற்றும் குடு சலிந்து ஆகிய இருவரையும் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் குற்றத்தடுப்பு விசாரணை பிரிவு திணைக்களத்தின் பொறுப்பில் வைத்து விரிவான விசாரணைகளை மேற்கொள்வதற்கு அதிகாரிகள் தீர்மானித்துள்ளனர்.

அதுதொடர்பில் குற்றத்தடுப்பு விசாரணைத் திணைக்களத்தில் பிரதி பொலிஸ் மா அதிபர் பிரசாத் ரணசிங்க மற்றும் அந்தத் திணைக்களத்தின் பணிப்பாளர் காவிந்த பியசேகர ஆகியோருடனும் பொலிஸ்மா அதிபர் விசேட பேச்சுவார்த்தை நடத்தியுள்ளதாகவும் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

எனினும், எந்த விசாரணைக்குழுவும் அந்த விசாரணை சம்பந்தமாக குற்றத்தடுப்பு விசாரணை திணைக்களத்திடம் கலந்து தாழ்த்தாது நேரத்தைப் பெறுவது அவசியமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் அத்தகைய விசாரணைகள் குற்றத்தடுப்பு விசாரணைத் திணைக்களத்தின் அதிகாரிகளின் கண்காணிப்பிலேயே இடம்பெறவேண்டும் என்றும் அந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. ஹரக் கட்டா மற்றும் குடு சலிந்து ஆகியோரின் பாதுகாப்பு தொடர்பில் விசேட கவனம் செலுத்துவதற்கும் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். ஹரக் கட்டா மற்றும் குடு சலிந்து ஆகியோருக்கு மோசமான பொலிஸ் அதிகாரிகள் சிலருடன் நெருங்கிய தொடர்பிருப்பதாக புலனாய்வு பிரிவினருக்கு தகவல்கள் கிடைத்துள்ளதாலே, இவர்களின் விடயத்தில் கூடுதல் கவனம் எடுக்கப்பட்டுள்ளது.

மேற்படி இருவரிடமும் முன்னெடுக்கப்படும் விசாரணைகளில் வெ ளிவருகின்ற தகவல்களை வைத்து அந்த அதிகாரிகள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளவும் பொலிஸார் கவனம் செலுத்துவர். தனிப்பட்ட ஜெட் விமானமொன்றின் மூலம் கடந்த பெப்ரவரி 12 ஆம் திகதி மடகஸ்காருக்கு சென்றுள்ள மேற்படி இருவருடன் பாதாள உலக குற்றவாளிகள் அறுவர் மடகஸ்கார் பாதுகாப்புப் பிரிவினரால் கடந்த முதலாம் திகதி கைதுசெய்யப்பட்டிருந்தனர்.

அவர்கள் மடகஸ்காரிலிருந்து மீண்டும் வெ ளியேறுவதற்கு செயலிழக்கப்பட்ட விமான நிலையத்திற்கு சென்றபோதே கைதுசெய்யப்பட்டுள்ளனர். கைதுசெய்யப்பட்டவர்களுள் ஹரக் கட்டாவின் மனைவி என கூறப்படும் வெ ளிநாட்டு பெண்ணொருவரும் அவரது தகப்பன் என்று கூறப்படும் நபரும் உள்ளடங்குகின்றனர். அவர்கள் அந்த நாட்டில் பாதுகாப்புப் படையினரின் பொறுப்பில் வைக்கப்பட்டு அதுசம்பந்தமாக இலங்கைக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. அங்கு சர்வதேச பொலிஸார் மூலம் சிவப்பு அறிக்கை விடுக்கப்பட்டிருந்ததுடன் அவர்களிருவரையும் சர்வதேச சட்டத்துக்கிணங்க, இலங்கையிடம் ஒப்படைப்பதற்கு மடகஸ்கார் பாதுகாப்புப் படையினர் இணக்கம் தெரிவித்திருந்தனர். அதன்படி கடந்த 11 ஆம் திகதி சனிக்கிழமை இலங்கையிலிருந்து மடகஸ்காருக்கு குற்றத்தடுப்பு விசாரணைத் திணைக்களத்தின் விசேட செயலணி அதிகாரிகள் ஐந்து பேர் சென்றிருந்தனர்.



**தென் மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம்**

**பாவனைக்கொவ்வாத வாகனங்களை பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்தல்**

தென் மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தின் கீழ் உள்ள பதிவு இரத்துச் செய்யப்பட்டுள்ள பின்வரும் பாவனைக்கொவ்வாத வாகனங்களை பாவித்த வாகன உதிரிப்பாகங்களாக பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

| தொ. இல. | வாகனத்தின் வகை | எண்ணிக்கை | உற்பத்தி வருடம் |
|---|---|---|---|
| 01 | டாடா மோட்டார் அம்பியூலன்ஸ் | 01 | 1988 |
| 02 | மிட்சுபிஷி மோட்டார் கார் | 01 | 1988 |

**வாகனத்தைப் பரீட்சித்துப் பார்க்கும் இடம் மற்றும் நேரம்**

காலி மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம், உனவட்டுன, காலி எனும் முகவரியில் 2023-03-20ஆம் திகதி முதல் 2023-03-29ஆம் திகதி வரையான வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.00 மணி வரைக்கிடையில்.

**ஏலவிற்பனை திகதி மற்றும் நேரம்**

2023-03-30ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு மேற்கூறப்பட்ட இடத்தில் ஏலவிற்பனை இடம்பெறும்.

இந்த ஏலவிற்பனை தொடர்பிலான இறுதித் தீர்மானம் தென் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரினால் தீர்மானிக்கப்படும்.

மேலதிக விபரங்களுக்கான தொலைபேசி இலக்கம்: 0912224609/0912233085/0707012836

**தென் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர்.**

2023.03.13.



## வேலைநிறுத்த...

(02ஆம் பக்கத் தொடர்)

தொழிற்சங்கக் கூட்டமைப்பினருக்கு வழங்கப்பட்டுள்ள யோசனைகளை கவனத்திற்கொண்டு, மேற்படி தீர்மானத்தை மேற்கொண்டுள்ளதாக அந்த அதிகாரி மேலும் தெரிவித்துள்ளார்.

## 'குடு சலிந்து'...

(02ஆம் பக்கத் தொடர்)

மனுவின் நிலைப்பாடு தொடர்பில் எதிர்வரும் 20ஆம் திகதி அறிவிக்குமாறு மேன்முறையீட்டு நீதிமன்றம் சட்ட மாஅதிபருக்கு உத்தரவிட்டுள்ளது. கைது செய்யப்பட்ட இலங்கைக்கு அழைத்துவரப்பட்டுள்ள 'குடு சலிந்து'வின் தாயாரினால் தாக்கல் செய்யப்பட்டுள்ள ரிட் மனுவை கவனத்திற் கொண்டதையடுத்து மேன்முறையீட்டு நீதிமன்ற தலைவரான நீதிபதி நிஸ்சங்க பந்துல கருணாரத்ன மற்றும் ஏ.மரிக்கார் ஆகிய மேன்முறையீட்டு நீதிபதிகள் உள்ளடங்கிய குழாம் மூலம் மேற்படி உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

## மோட்டார்... (02ஆம் பக்கத் தொடர்)

இந்த திட்டத்தின் மூலம்160 க்கும் மேற்பட்ட நேரடி வேலை வாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன. உள்நாட்டுப் பொருளாதாரத்தை மீண்டும் கட்டியெழுப்புவதற்கான சக்தியாக இது மாறவுள்ளது. இதனைப்பலப்படுத்தவே,உள்நாட்டு தொழில் முயற்சியாளர்களுக்கு புதிய ஆற்றலை வழங்கி SENARO GN 125 மோட்டார் சைக்கிள், இலங்கை சந்தைக்கு அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

## பொலிஸாருக்கு...

இந்நன்கொடை தொடர்பான ஆவணங்கள், இலங்கைக்கான சீனத் தூதுவர் சி ஷென் ஹொன்னினால் ஜனாதிபதி முன்னிலையில் பொதுமக்கள் பாதுகாப்பு தொடர்பான அமைச்சர் டிரான் அலஸிடம் கையளிக்கப்பட்டது.

## உள்ளூராட்சி நிறுவனங்களின்...

வந்ததன் பின்னர், முன்னெடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் ஆளுநர்களுக்கு தெளிவுபடுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சர் என்ற வகையில் பிரதமர் தினேஷ் குணவர்த்தனவின் தலைமையில் ஆளுநர்களுடன் மேற்கொள்ளப்பட்ட பேச்சுவார்த்தையின் போதே, இது தொடர்பில் ஆராயப்பட்டுள்ளது.

எதிர்வரும் (19) பின்னர் 340 உள்ளூராட்சி சபை நிறுவனங்களின் ஆணையாளர்களின் நிர்வாகத்துக்குள் உட்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. அத்தகையையில், மாநகர சபைகளின் நிர்வாகம் நகர ஆணையாளர்களிடமும் மற்றும் நகர சபை, பிரதேச சபை நிர்வாகங்களை அவற்றின் செயலாளர்களுக்கு கீழும் கொண்டுவருவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அரசாங்கம் மேற்கொள்ளும் தீர்மானங்கள் உள்ளூராட்சி சபை மட்டத்தில் நடைமுறைப்படுத்தப்படும் போது, மக்களின் எதிர்பார்ப்பு நிறைவேற்றப்படும் வகையில் செயற்படுவதன் முக்கியத்துவம் தொடர்பில், இதன்போது பிரதமர் தினேஷ் குணவர்த்தன சகல ஆளுநர்களுக்கும் விளக்கியுள்ளார். அத்துடன், உள்ளூராட்சி சபை நிறுவனங்களின் செயற்பாடுகள் தொடர்பில் தொடர்ச்சியாக ஆராய்வது ஆளுநர்களினால் மேற்கொள்ளப்படவேண்டும் என்பதையும் பிரதமர் தெளிவுபடுத்தியுள்ளார். அதற்கு மேலதிகமாக உள்ளூராட்சி சபை நிறுவனங்கள் மூலம் தற்போது மேற்கொள்ளப்பட்டுவரும் சேவைகளை அதேபோன்று தொடர்ந்தும் செய்யப்படுத்துவதற்கு சம்பந்தப்பட்ட நகர ஆணையாளர்கள் மற்றும் செயலாளர்களின் செயற்பாடுகள் தொடர்பிலும் இந்த பேச்சுவார்த்தையின் போது கவனம் செலுத்தப்பட்டுள்ளது. அதேவேளை, எதிர்வரும் (19) முன்பதாக அனைத்து உள்ளூராட்சி நிறுவனங்களினதும் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள் பயன்படுத்தும் வாகனங்கள், அரச வளங்களை மீள ஒப்படைக்கவேண்டும் என்றும் இதன்போது அறிவுறுத்தப்பட்டுள்ளது.

## தொல்பொருள் திணைக்களத்தின்...

முன்வைக்கப்பட்டுள்ளன. இந்நிலையில், கன்னியா வெந்நீர் ஊற்று தொல்பொருள் தளத்தை, அநுராதபுர காலத்தைச் சேர்ந்த பௌத்த விஹாரைகளைக் கொண்ட தனித்துவமான இடமாக அடையாளம் காண முடியுமென, தொல்பொருள் திணைக்களத்தின் ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

2010ஆம் ஆண்டு முதல் கன்னியா வெந்நீரூற்று, தொல்பொருள் திணைக்களத்தின் கட்டுப்பாட்டிலுள்ளது. 2011 ஒக்டோபர் (09) திகதியிட்ட அரச வர்த்தமானியில் இது, பாதுகாக்கப்பட்ட நினைவுச் சின்னமாக அறிவிக்கப்பட்டுள்ளது. நீண்ட காலமாக திருகோணமலை, பட்டினமும் சூழலும் பிரதேச சபை, திருகோணமலை மாவட்ட செயலகம் என்பன கன்னியா வெந்நீர் ஊற்றின் வருமான முகாமைத்துவம் மற்றும் பராமரிப்பு பணிகளை மேற்கொண்டு வந்தது. இந்நிலையில், தொல்பொருள் திணைக்களம் தலையிட்டு கன்னியா வெந்நீர் ஊற்றின் மூலமாக கிடைக்கும் வருமானத்தை, திணைக்களத்தின் கணக்கிலூடாக அரச வருமானத்துடன் சேர்க்கும் நடவடிக்கையை முன்னெடுத்துள்ளதாகவும் தெரிய வருகின்றது. கடந்த முதலாம் திகதி தொடக்கம் திருகோணமலை பிரதேச தொல்பொருள் திணைக்களம் வருமான முகாமைத்துவம் மற்றும் பராமரிப்பு பணிகளை ஆரம்பிக்கவுள்ளதாக தொல்பொருள் திணைக்களத்தின் ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தப் பணிகள் தொல்பொருள் பணிப்பாளர் நாயகம் பேராசிரியர் அனுர மனதுங்க உள்ளிட்ட அதிகாரிகளின் தலைமையில் இடம்பெறவுள்ளதாகவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## 24ஆம் திகதிக்கு பின்னர்...

கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது. மேலும், ஆசிரியர் நியமனம் தொடர்பான உரிய அறிவுறுத்தல்கள் எதிர்வரும் (24) வரை மாகாண மற்றும் பிராந்திய பணிப்பாளர்களுக்கு முறையான கடிதம் மூலம் அறிவிக்கப்படுமெனவும் அமைச்சு குறிப்பிட்டுள்ளது.



**வீதிகளுக்கிடையிலான போக்குவரத்து சேவை அதிகார சபை**
**வடமத்திய மாகாணம்**

**கேள்விக்கான அழைப்பு**

வடமத்திய மாகாண வீதிகளுக்கிடையிலான போக்குவரத்துச் சேவை அதிகார சபையின் பெறுகைக்குழுவின் தலைவர் மற்றும் வடமத்திய மாகாண வீதிகளுக்கிடையிலான போக்குவரத்துச் சேவை அதிகார சபையின் தலைவரான என்னால் இவ் அதிகார சபையின் கீழ் 2023ஆம் ஆண்டிற்கு குறித்த கெக்கிராவ பஸ் நிலையத்தில் அமைந்துள்ள மலசலகூட அமைப்புகள் 02இன் துப்புரவேற்பாட்டு வசதிகளை நடத்திச் செல்வதற்கு 2023/2024ஆம் ஆண்டிற்கு குத்தகைக்கு வழங்குவதற்கு பொறுப்பிடப்பட்ட கேள்விகள் தகைமை கொண்ட தகுதியான வடமத்திய மாகாணத்திற்குள் வசிக்கும் கேள்விதாரர்களிடமிருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| விபரம் | கேள்வி ஆவணக் கட்டணம் | | மாதாந்த குறைந்த பட்ச கேள்வி | உடன்படிக்கைக் காலம் |
|---|---|---|---|---|
| | மீளளிக்கப்படாத கேள்வி ஆவணக் கட்டணம் | மீளளிக்கப்படும் கேள்விப் பிணை வைப்பு | | |
| கெகிராவ பஸ் நிருத்தும் நிலைய மலசல கூட அமைப்பு | 1000.00 | 10000.00 | 85000.00 | 2023.04.01 முதல் 2024.03.31 வரை |

01. கேள்வி விண்ணப்பங்கள் மற்றும் அறிவுறுத்தல் பத்திரங்களை 2023.03.17 முதல் 2023.03.27 வரை மு.ப. 3.00 வரை அநுராதபுரம் கல்லூரி மாவத்தையில் அமைந்துள்ள வீதிகளுக்கிடையிலான போக்குவரத்து சேவை அதிகார சபையின் தலைமையகத்திற்கு வருகை தந்துபெற்றுக்கொள்ளலாம்.
02. விலைமனுக்களை ஒப்படைத்தல் 2023.12.28 பி.ப.2.30 இற்கு முடிவடைவதுடன், அன்று அல்லது அதற்கு முன் கிடைக்குமாறு சகல கேள்விதாரர்களும் கேள்விகளை சமர்ப்பித்தல் வேண்டும். கிடைக்கப்பெறும் கேள்விகள் 2023.12.28 பி.ப. 2.30 இற்கு வீதிகளுக்கிடையிலான போக்குவரத்து சேவை அதிகார சபையின் தலைவரின் உத்தியோகபூர்வ அறையில் திறக்கப்படும். அவ்வேளையில் கேள்விதாரருக்கு அல்லது அவரது பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம்.
03. விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கு குறித்த மேலதிக விபரங்கள் மற்றும் கேள்வி நிபந்தனைகள் விண்ணப்பத்துடன் விநியோகிக்கப்படும்.
04. மேலதிக விபரங்களை 025-2227956 தொலைபேசி இலக்கத்திற்கு அழைத்துப் பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர்,**
**வீதிகளுக்கிடையிலான போக்குவரத்து சேவை அதிகார சபை**
**வடமத்திய மாகாணம்**



## அஸ்கிரி, மல்வத்து... (02 ஆம் பக்கத் தொடர்)

கேட்டுக்கொண்டுள்ளனர். மல்வத்து அஸ்கிரி மகாநாயக்க தேரர்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு கடிதம் ஒன்றின் மூலம் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளனர். மல்வத்துபீட மகாநாயக்க தேரர் திப்பட்டுவாவே ஸ்ரீ சித்தார்த்த சுமங்கல மகாநாயக்க தேரர் மற்றும் அஸ்கிரி பீடத்தின் மகாநாயக்க தேரர் வரக்காகொட ஸ்ரீ ஞானரதன மகாநாயக்க தேரர் ஆகியோரின் கையொப்பத்துடன் மேற்படி கடிதம் ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அக்கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, உள்ளூராட்சி சபைத் தேர்தலை காலம் தாழ்த்துவ மக்கள் மத்தியில் அதிருப்தி உருவாவதற்கு காரணமாகியுள்ளது. ஜனநாயகத்தை பாதுகாத்து சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தல் மூலம் மக்களின் இறைமையை உறுதிப்படுத்தவும் அத்துடன் மக்களின் எதிர்பார்ப்புக்கு கௌரவமளிப்பதும் ஜனநாயக அரச தலைவரின் பொறுப்பாகும். அதற்கிணங்க, உள்ளூராட்சி சபைத் தேர்தலை உரிய காலத்தில் நடத்துவது அரசாங்கத்தின் பொறுப்பாகும் என்றும் மகாநாயக்க தேரர்கள் அந்தக் கடிதம் மூலம் ஜனாதிபதிக்கு தெரிவித்துள்ளனர்.

## பொதுநலவாய தின... (02 ஆம் பக்கத் தொடர்)

பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் தங்கள் நாட்டு கொடிகளை ஏந்திய இளைஞர்கள் அணிவகுப்பும் நடைபெற்றது. தேஜானி மஹதியல் வெவ என்ற யுவதி இலங்கைக் கொடியை ஏந்திய வாறு இதில் கலந்துகொண்டார். பொதுநலவாய தினத்தையொட்டி பக்கிங்ஹாம் அரண்மனையில் மன்னர் மூன்றாம் சார்ள்ஸ் வழங்கிய வரவேற்பு நிகழ்விலும் வெளியுறவுத்துறை அமைச்சர் அலி சப்ரியும் கலந்து கொண்டார். இதற்கு முன்னைய நாள், வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி, வெஸ்ட் மின்ஸ்டர் அரண்மனையில் பாராளுமன்ற சபாநாயகர் சேர்.லின்ட்சே ஹோயில் தலைமையில் நடைபெற்ற பொதுநலவாய தினத்தின் சம்பிரதாய கொடியேற்றும் நிகழ்வில் பங்கேற்றார். அதனைய டுத்து முதலாம் மற்றும் இரண்டாம் உலகப் போரின் போது முப்படைகளிலும் பணியாற்றிய 05 மில்லியன் படைவீரர்கள் மற்றும் பெண்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் மார்ல்பரோ மாளிகையில் அமைக்கப்பட்டுள்ள பொதுநலவாய நினைவு வாயிலில் மலர்வளையம் வைத்து கொடியேற்றும் நிகழ்விலும் அமைச்சர் பங்கேற்றார். பிரித்தானியாவுக்கான இலங்கை உயர்ஸ்தானிகர் சரோஜா சிறிசேனவும் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரியுடன் பொதுநலவாய தின கொண்டாட்டங்களில் கலந்துகொண்டார்.

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## மில்கோ (பிறைவட்) லிமிட்டட்

(அரசுரிமை தொழில் முயற்சி)

இலங்கையில் ''ஹைலண்ட்'' என்ற வர்த்தக நாமத்தின் கீழ் பாற்பண்ணை உற்பத்திகளை தயாரிக்கும் முதன்மையான பால் பதனிடல் மற்றும் சந்தைப்படுத்தல் நிறுவனமே மில்கோ (பிறைவட்) லிமிட்டெட் ஆகும். பொல்கஹாவெல கால்நடை உணவு வழங்கும் தொழிற்கூடத்திற்கு பின்வரும் அம்சங்களை வழங்கல் மற்றும் ஒப்படைத்தல் ஆகியவற்றிற்காக உற்பத்தியாளர்கள்/ வழங்குநர்களிடமிருந்து மில்கோ (பிறைவட்) லிமிட்டெட் இன் கேள்விக் குழுத் தலைவரினால் முத்திரையிடப்பட்ட விலைமனுக்கோரல்கள் இத்தால் கோரப்படுகின்றன.

| அம்சம்/விளக்கம் | | மாதாந்த தேவைப்பாடு | முத்திரையிடப்பட்ட விலைமனுக்கோரல் இலக்கம் | ஆவணக் கட்டணம் (மீளளிக்கப்படாதது) (ரூபாவில்) | மூடும் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|---|
| 1. | தேங்காய் புண்ணாக்கு வழங்கல் மற்றும் ஒப்படைத்தல் | 62,775 கிகி | SQ/2023/P/67 | 1,000.00 | 2023.03.30 ஆம் திகதியன்று பி.ப. 3 மணிக்கு |
| 2. | அரிசி தவிடு வழங்கல் மற்றும் ஒப்படைத்தல் | 59,737.5 கிகி | SQ/2023/P/68 | 1,000.00 | 2023.03.30 ஆம் திகதியன்று பி.ப. 3 மணிக்கு |
| 3. | பருப்பு பொலிஷ் வழங்கல் மற்றும் ஒப்படைத்தல் | 30,375 கிகி | SQ/2023/P/69 | 1,000.00 | 2023.03.30 ஆம் திகதியன்று பி.ப. 3 மணிக்கு |
| 4. | கோதுமை தவிடு வழங்கல் மற்றும் ஒப்படைத்தல் | 30,375 கிகி | SQ/2023/P/70 | 1,000.00 | 2023.03.30 ஆம் திகதியன்று பி.ப. 3 மணிக்கு |
| 5. | டை-கல்சியம் பொஸ்பேட் வழங்கல் மற்றும் ஒப்படைத்தல் | 1,012.5 கிகி | SQ/2023/P/71 | 1,000.00 | 2023.03.30 ஆம் திகதியன்று பி.ப. 3 மணிக்கு |

பொதுவான நிபந்தனைகள் :

(1) முத்திரையிடப்பட்டட விலைமனுக்கோரல்கள் முழுமையான அளவுக் குறிப்புக்கள்/விபரங்களுடன் கொழும்பு-03, காலி வீதி, 5ஆம் மாடி, 345ஆம் இலக்கத்திலுள்ள மில்கோ (பிறைவட்) லிமிட்டெட்டின் பெறுகைப் பிரிவிலிருந்து சாதாரண வேலை நாட்களில் 2023.03.29ஆம் திகதி வரையும் மு.ப. 9.30 மணிக்கும் பி.ப. 4 மணிக்குமிடையில் மேலே குறிப்பிட்டுள்ளவாறான மீளளிக்கப்படாத ஆவணங்கள் கட்டணத்தை ரொக்கப் பணத்தில் செலுத்தி, அவற்றை இலவசமாக பெற்றுக் கொள்ளலாம். முத்திரையிடப்பட்ட விலைமனு ஆவணங்கள் கோரிக்கைக் கடிதமொன்றில்லாமல் வழங்கப்பட மாட்டாது.

(2) 2023.03.30 ஆம் திகதியன்று பி.ப. 3 மணிக்கு மில்கோ (பிறைவட்) லிமிட்டெட்டின் கொள்வனவுப் பிரிவில் முத்திரையிடப்பட்ட விலைமனுக்கோரல்கள் மூடப்பட்டு திறக்கப்படும்.

(3) கொள்வனவுப் பிரிவில் முத்திரையிடப்பட்ட விலைமனுக்கோரல் ஆவணங்கள் இலவசமாக பரீட்சிக்கப்படலாம்.

(4) காரணங்களை முன்வைக்காமல் அனைத்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்கோரல்களையும் ஏற்றுக் கொள்வதற்கு அல்லது நிராகரிப்பதற்கான உரிமையை கேள்விக் குழுவானது கொண்டுள்ளது.

(5) இக்கேள்வியில் மில்கோ ஊழியர்கள் மற்றும் அவர்களின் நெருங்கிய உறவினர்கள் பங்குபெற இயலாது.

011 4500530-4 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாக மில்கோ (பிறைவட்) லிமிட்டட்டின் கொள்வனவு முகாமையாளரிடமிருந்து எந்தவொரு மேலதிக விபரங்கள், தகவல் அல்லது தெளிவுறுத்தல்களை தேவைப்படின், பெற்றுக் கொள்ளலாம்.

**தலைவர் - கேள்விக் குழு,**
**மில்கோ (பிறைவட்) லிமிட்டெட்,**
**5 ஆம் மாடி, இல. 345, காலி வீதி,**
**கொழும்பு-03.**

# இலங்கை துறைமுக அதிகார சபை

## விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

1. பின்வரும் பொருட்களுக்காக தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை இலங்கை துறைமுக அதிகார சபையின் சார்பில் திணைக்கள பெறுகைக் குழுவின் தவிசாளர் கோருகிறார்.

| கேள்வி இல. | கேள்வியின் பெயர் | கேள்விப் பிணைத் தொகை (ரூபா) | ஆவணக் கட்டணம் (VAT உள்ளடக் கப்பட்டுள்ளது) | முடிவுறுத்தல் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|
| CES/FP/06/PT/6443(MP) | Trolley Wire Ropes for 41T IHI STS Crane at UCT | 44,000.00 | 1,000.00 | 18-04-2023 மு.ப. 10.00 மணி |
| CMS/LP/22/PT/16/062 | 10 Nos. Mild Steel Plates LR Grade " A" ( 6000MM X 1500MM X 10MM) | 105,000.00 | 3,500.00 | 06-04-2023 பி.ப. 1.30 மணி |
| CES/LP/23/PT/01/051 | 04 Nos. General Overhaul Kits (551529 ) – Scania DSI 1474 Engines | 30,000.00 | 1,000.00 | 06-04-2023 பி.ப. 1.30 மணி |
| CES/LP/23/PT/08/051 | 03 Nos. Oil Cooler for Cummins, NTA – 855 Engines of RTG Cranes | 15,000.00 | 1,000.00 | 06-04-2023 பி.ப. 1.30 மணி |
| CES/LP/23/PT/03/051 | 20 Nos. Sealed Type Battery 12V 150 AMPH ( Semi – Maintenance ) | 20,000.00 | 1,000.00 | 10-04-2023 பி.ப. 1.30 மணி |
| CES/LP/23/PT/14/052 | 25 Nos. Motor Tyres 1100 X 20 16 PLY | 28,000.00 | 1,000.00 | 10-04-2023 பி.ப. 1.30 மணி |
| CES/LP/23/PT/13/53 | Sealed Type Battery 12V 150AMPH ( Semi – Maintenance ) -40 Nos | 20,000.00 | 1,000.00 | 10-04-2023 பி.ப. 1.30 மணி |
| CES/LP/23/PT/16/053 | 1000 Liter Caterpillar Radiator Coolant | 18,000.00 | 1,000.00 | 11-04-2023 பி.ப. 1.30 மணி |

2. 5 மில்லியன் ரூபாவிற்கு மேற்படும் கேள்விகளுக்கு 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் ஏற்பாடுகள் பிரயோகிக்கப்படும் என விலைமனுதாரர்கள் இத்தால் அறிவுறுத்தப்படுகிறார்கள். இதற்கமைய சகல தரப்பினரும் மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு கேள்வியின் பொருட்டும் ஒப்பந்தக் காலப்பகுதியில் கூறப்பட்ட சட்டத்தை கண்டிப்பாக பின்பற்றுதல் வேண்டும். மேலும் யாராவது விலைமனுதாரர் ஒரு முகவராகவோ, உப முகவராகவோ, ஒரு பிரதிநிதியாகவோ அல்லது யாராவது வெளிநாட்டு உற்பத்தியாளரின் சார்பில் பெயர் குறிப்பிடப்பட்டவராகவோ அல்லது வழங்குநரோ தம்மை பொது ஒப்பந்தங்கள் பதிவாளரிடம் பதிவு செய்து கொள்ளும்படி வேண்டப்படுவதோடு முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட பதிவுச் சான்றிதழை கேள்வி ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
3. விலைமனுதாரர்கள் மேற்குறிப்பிட்டவைகளுக்கு நிகரான பொருட்களை வழங்கும் வியாபாரத்தில் ஆகக் குறைந்தது ஐந்து (5) வருடங்கள் ஈடுபட்டிருத்தல் வேண்டும்.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிகத் தகவல்களை பிரதான முகாமையாளர் (வழங்கல்) அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் விலைமனு ஆவணங்களை பின்வரும் முகவரியில் அலுவலக நேரங்களில் பரீட்சித்துப் பார்க்கலாம்.
5. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 4ம் நிரலில் குறித்துரைக்கப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்தியதன் பின் 2023 மார்ச் 17ஆம் திகதி தொடக்கம் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையான நேரத்தில் முடிவுறுத்தப்படும் திகதிக்கு முதல் நாள் வரை பின்வரும் முகவரிக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவுகள் காசாகச் செலுத்தப்படல் வேண்டும்.
6. விலைமனுக்கள் பின்வரும் முகவரிக்கு இறுதி நேரம் அல்லது அதற்கு முன்னர் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. விலைமனுக்கள் பின்வரும் முகவரியில் முடிவுறுத்தப்படும் வேளையில் நேரடியாகச் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும். அனைத்து விலைமனுக்களுடனும் மேற்குறிப்படப்பிட்ட விலைமனுப் பிணையொன்று இணைக்கப்படல் வேண்டும்.

**பிரதான முகாமையாளர் (வழங்கல்கள்),**
**வழங்கல்கள் பிரிவு,**
**இலங்கை துறைமுக அதிகார சபை,**
**இல. 45, லேடன் பஸ்தியன் வீதி, கொழும்பு-01.**
**தொலைபேசி எண்கள்: 2482231, 2483338, 2482499, 2482832, 2482409, 2482652, 2483024, 2482638**
**தொலைநகல் எண்: 2381652, 2470443**

# பெறுகை அறிவித்தல்

ஹம்பாந்தோட்டை மாவட்ட சுகாதார சேவை பணிப்பாளர் பணிமனையினால் 2023ஆம் ஆண்டின் செயற்றிட்டங்களின் கீழ் கீழ்க்காணும் உபகரண வகைகளை கொள்வனவு செய்தல் சார்பாக பொறியிடப்பட்ட கேள்விகள் அழைக்கப்படுகின்றன

| தொடர் இல | உபகரணம் | அளவு | மீளளிக்கப் படாத வைப்புத் தொகை (ரு) | தொடர் இல | உபகரணம் | அளவு | மீளளிக்கப் படாத வைப்புத் தொகை (ரு) |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | எழுத்து மேசை | 74 | 2,000.00 | 08 | Bedhead tables | 25 | 1,000.00 |
| 02 | சுழல் கதிரை | 40 | 1,000.00 | 09 | Multi Monitors (Ward type) | 07 | 2,000.00 |
| 03 | குசன் கதிரை | 80 | 1,000.00 | 10 | Pulse Oximeters | 03 | 1,000.00 |
| 04 | நிறைவேற்ற தர கதிரை | 08 | 1,000.00 | 11 | ECG Machines | 03 | 1,000.00 |
| 05 | பிளாஸ்டிக் கதிரை | 80 | 1,000.00 | 12 | Nebulizers | 05 | 1,000.00 |
| 06 | போட்டோப் பிரதி இயந்திரம் | 03 | 1,500.00 | 13 | Patient Screens | 05 | 1,000.00 |
| 07 | வளிச்சீராக்கி இயந்திரம் | 12 | 3,000.00 | 14 | Android BP | 15 | 1,000.00 |
| | | | | 15 | Spot Lamps | 03 | 1,000.00 |

கேள்விப் பத்திரங்கள் மற்றும் குறித்த தகவல்களை 2023.03.20 முதல் 2023.04.06 வரை அலுவலக நேரங்களில் மு.ப. 9.30 முதல் பி.ப. 2.00 வரை இவ் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

பொறியிடப்பட்ட கேள்விகள் 2023.04.10 திங்கள் மு.ப. 11.00 வரை பதிவுத் தபாலில் அல்லது கொண்டுவந்து ஒப்படைக்க முடியும் அத்துடன் அந்த நேரத்தின் பின்பு உடனடியாக கேள்விதாரர்கள் முன்னிலையில் கேள்விகள் திறக்கப்படும்.

தாமதமாகக் கிடைக்கும் கேள்விப் பத்திரங்கள் நிராகரிக்கப்படுவதுடன், குறித்த விசாரணைகள் 047-2220381 ஊடாக மேற்கொள்ளப்படலாம்.

பெறுகைச் சபையின் தீர்மானம் இறுதியும் உறுதியுமான தீர்மானமாகும்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**மாவட்ட சுகாதார சேவை பணிப்பாளர் பணிமனை.**
**ஹம்பாந்தேட்டை.**

# பெறுகை அறிவித்தல்

## மாவட்ட பொது வைத்தியசாலை - நீர்கொழும்பு

01. கீழே அட்டவணையில் குறிப்பிடப்படும் நிர்மாண வேலைகளுக்காக பெயர் பெற்ற கேள்விதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட கேள்விப் பத்திரங்கள் மாவட்ட பொது வைத்தியசாலை பிரதேச பெறுகைக்குழுவின் தலைவரால் ஏற்கப்படும். நிர்மாண விடயங்களுக்காக மதிப்பிடப்பட்ட தொகை மற்றும் நிர்மாண காலம் அட்டவணையில் தரப்பட்டுள்ளது.

02. தேசிய போட்டி கேள்வி கோரல் முறைமையில் செயற்படுத்தப்படும்.

03. ஒப்பந்த வழங்கலுக்காக தேர்ந்தெடுக்கப்படும் கேள்விதாரர் நிர்மாண பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிருவனத்தில் (ICTAD) கீழ்க்காணும் அட்டவணையில் தரப்பட்டுள்ள தரம் அல்லது அதற்கு மேல் தரத்தில் பதிவு செய்திருத்தல் வேண்டும்.

04. கேள்வி ஆவணங்களை சாதாரண வேலை நேரங்களில் மாவட்ட பொது வைத்தியசாலை அலுவலகத்தில் பரீட்சித்துப் பார்க்கலாம்.

05. 2023.03.20 முதல் 2023.04.03 வரை எந்த அலுவலக நாட்களிலும் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை கீழே அட்டவணையில் குறிப்பிடுமாறு மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்தி கேள்விப் பத்திரங்களை சமர்ப்பித்த பின்னர் கேள்வி சமர்ப்பிக்கும் அட்டவணையை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

06. பூர்த்தி செய்யப்பட்ட கேள்வி ஆவணங்களை பணிப்பாளர், மாவட்ட பொது வைத்தியசாலை, நீர்கொழும்பு இற்கு 2023.04.04 மு.ப. 10.00 இற்கு முன் சமர்ப்பித்தல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் கேள்வி ஆவணங்கள் நிராகரிக்கப்படும். கேள்விகள் ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்தவுடன் அவ்வேளையில் வருகைதந்துள்ள கேள்விதாரர்கள் அல்லது அவர்களது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் முன்னிலையில் அவை திறக்கப்படும். பெறுகைச் சபையின் தீர்மானம் இறுதித் தீர்மானம் ஆகும்.

| உருப்படி | நிர்மாணத்திற்காக மதிப்பிடப்பட்ட தொகை (ரு. மில்லியன்) | கேள்விப் பிணை (ரு) | ஒப்பந்த காலம் | குறைந்த பட்ச பதிவு | மீளளிக்கப்படாத தொகை |
|---|---|---|---|---|---|
| எல்லை மதில் பழுதுபார்த்தல் | 4.7 | 45,000.00 | 50 நாட்கள் | C5, C6, C7, C8, C9 | 2500.00 |

**தலைவர்,**
**பிரதேச பெறுகைக்குழு,**
**மாவட்ட பொது வைத்தியசாலை - நீர்கொழும்பு.**

# அறிவித்தல்

## கேள்விக்கான அழைப்பு

### இலங்கை மின்சார (தனியார்) கம்பனி

**கேள்வியின் பெயர் : பாதுகாப்பு சேவை பெறுகை.**
**கேள்வி இலக்கம் : GL/ADM/SVS/01**

இலங்கை மின்சார தனியார் நிறுவனத்தின் காலி கிளை அலுவலகத்தின் பெறுகைக் குழுவின் தலைவரால் கீழ்க்காணுமாறு 2023/ 2024 ஆண்டிற்காக பாதுகாப்புச் சேவை பெறுகைக்காக தகைமையான மற்றும் தகுதியுள்ள கேள்விதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

| சேவை நிலையம் | முகவரி | ஊழியர் எண்ணிக்கை | | |
|---|---|---|---|---|
| | | பகல் | | இரவு |
| கிளை அலுவலகம் - காலி | இல. 182, ரிச்மன்ட் மேடு வீதி, காலி. | 01 | 01 | 02 |
| பாவனையாளர் சேவை நிலையம் (காலி) | இல. 02, வெக்குனுகொட வீதி, காலி | - | 01 | 01 |
| பாவனையாளர் சேவை நிலையம் (ஹிக்கடுவ) | இல. 48/09, பத்தேகம வீதி, ஹிக்கடுவ. | - | 01 | 01 |
| பாவனையாளர் சேவை நிலையம் (அம்பலங்கொடை) | இல. 48, மஹா அம்பலங்கொடை அம்பலங்கொடை | - | 01 | 01 |

01. உத்தேச சேவை காலம் கேள்விகள் வழங்கப்படுகின்ற நாள் முதல் இரண்டு வருடங்களாகும்.
02. தேசிய போட்டி கேள்விகோரல் முறைமை (NCB) இன் மூலம் கேள்விகள் மேற்கொள்ளப்படும்.
03. இதற்காக ஆர்வம் காட்டுகின்ற கேள்விதாரர்கள் மேலதிக தகவல்களுக்கு காலி, ரிச்மன்ட் மேடு வீதி, இல. -182 இல் அமைந்துள்ள காலி கிளை அலுவலகத்தில் இன்றைய தினம் முதல் 07 நாட்களுக்குள் அலுவலக நாட்களில் (மு.ப. 9.00 முதல் பி.ப. 4.30 இற்கு இடையில்) கேள்வி ஆவணங்களைப் பரீட்சித்து பார்க்கலாம்.
04. மீளளிக்கப்படாத ரூ. 1,500.00 கட்டணத்தை செலுத்திய பின்னர் கேள்வி ஆவணத் தொகுதியொன்றை காலி கிளை அலுவலகத்தில் கொள்வனவு செய்யலாம். குறித்த கொடுப்பனவுகளை காலி கிளை அலுவலகத்தில் கணக்குப் பிரிவிற்கு காசாக மேற்கொள்ளல் வேண்டும்.
05. கேள்விகள் 2023.03.23 பி.ப. 3.00 அல்லது அதற்கு முன்பு கீழ்க்காணும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அல்லது கிளை அலுவலகத்திற்கு கொண்டு வந்து ஒப்படைத்தல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் கேள்விகள் நிராகரிக்கப்படும்.
06. கேள்வி கோரல் 2023.03.23 பி.ப. 3.30 இற்கு கிளை அலுவலகத்தில் பெறுகைக் குழுவினால் திறக்கப்படுவதுடன், அவ் வேளையில் சமுகமளிப்பதற்கு வாய்ப்பு உண்டு.
07. கேள்விகளை ஒப்படைப்பதற்காக குறித்த இறுதித் தினத்திலிருந்து 60 நாள் காலத்திற்கு கேள்விகள் செல்லுபடியாதல் வேண்டும். பிரதம பொறியியலாளர். (பொது முகாமையாளர் சார்பாக).

**இலங்கை மின்சார (தனியார்) நிறுவனம்,**
**கிளை அலுவலகம், காலி,**
**இல. 182, ரிச்மன்ட் மேடு வீதி, காலி.**
**091-2232216**

* Trusted Marketplace of Classified Advertisers...
SUNDAY OBSERVER adz it's what you want Classified
Call :- 077 7 278 948/ 011 2 429 347 | Piyumi - 011 2 429 383 | Gayani - 011 2 429 342/ 343
077 7 270 067 E-mail - classified@lakehouse.lk
Green Light for Online Transfer
For 15 Words Rs. 500/-
(Additional each word Rs. 20/-)
Lake House Branch Acc. No. 000000377

## பாத்தஹேவாஹெட்ட பிரதேச சபை

# கேள்வி அறிவித்தல்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்படும் கடை அறைகளில் வர்த்தக உரிமையை கீழக்காணும் கால எல்லைக்கு குத்தகைக்கு விடுவதற்காக கேள்விகள் கோரப்படுகின்றன.

| | |
|---|---|
| கேள்விப் படிவங்கள் விநியோகித்தல் | - (தலாத்துஓய தலைமையகம்) 2023.03.16 முதல் 2023.04.04 மு.ப.9.00 முதல் பி.ப.3.00 வரை (அலுவலக நாட்களில்) |
| கேள்விப் படிவங்கள் ஏற்றுக்கொள்ளல் | - (தலாத்து ஓய தலைமையகம்) 2023.04.06 மு.ப.10.00 இற்கு முடிவடையும் |
| கேள்விப்படிவங்கள் திறத்தல் | - 2023.04.06 மு.ப.10.00 இற்கு |
| கேள்விகள் திறக்கப்படும் இடம் | - பாத்தஹேவாஹெட்ட பிரதேச சபையின் தலாத்து ஓய தலைமையகத்தில் கேள்வி நிபந்தனைகள் கேள்வி விண்ணப்பத்துடன் விநியோகிக்கப்படும் |

மேலதிக விபரங்களை பாத்தஹேவாஹெட்ட பிரதேச சபையின் தலாத்து ஒரு தலைமையகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**தொடர்புகள் : தொ.பே.இல - 081-2404175**

| தொடர் இல | வியாபாரத்தின் தன்மை | மீளளிக்கப்படும் கேள்விப் பிணை வைப்புத்தொகை ரூ. சதம் | விண்ணப்பப் படிவக் கட்டணம் ரூ. சதம் | குறைந்த கேள்வி (மாதாந்த கட்டணம்) ரூ. சதம் | கேள்விகள் ஏற்கப்படும் கால எல்லை |
|---|---|---|---|---|---|
| 01 | தலாதுஓய முருகதெனிய வீதி, இல.03, கடை அறை | 5000.00 | 1000.00 | 8200.00 | 2023.05.01 முதல் மூன்று வருட காலத்திற்கு |

**வை.எம்.ரணசிங்க யாபா பண்டார**
**தலைவர்,**
**பாத்தஹேவாஹெட்ட பிரதேச சபை**
**2023.03.16ம் திகதி**

**பாத்தஹேவாஹெட்ட பிரதேச சபை அலுவலகம்**
**தலாத்துஓய.**

---

## கொழும்பு மாநகர சபை

# விலைக்கோரல்களுக்கான அழைப்பு

கொழும்பு மாநகர சபையின் மாநகர ஆணையாளரால் பின்வரும் சேவைகளை வழங்குவதற்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த கேள்விதாரர்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

| தொ. இல. | கேள்வி இலக்கம் | விபரம் | மீளளிக்கப் படாத கட்டணம் ரூபா | விலைக்கோரல் பிணை முறியின் பெறுமதி | விலைமனுதாரர் / கேள்விதாரரின் தகுதிகள் | மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ளும் நபர் |
|---|---|---|---|---|---|---|
| 1 | ME/ME/ML/42/2022 | கொழும்பு நகரத்தின் வீதியோர வாகனத் தரிப்பிடக் கட்டண அறவீட்டுச் செயற்பாடுகள் மற்றும் முகாமைத்துவத்தை குத்தகைக்கு வழங்குதல் - படிநிலை XXV | 5,750.00 | வரிகள் இன்றி மொத்த விலைக் கோரல் தொகையின் 5% நிபந்தனையற்ற உடன் பணம் பெற்றுக்கொள்ள முடியுமான உத்தரவாதம் | செல்லுபடியாகும் வியாபாரப் பதிவுச் சான்றிதழ் சகிதம் தனி நபர்கள் மற்றும் பங்குதாரர்களைப் பயன்படுத்தும் பொறுப்பு வரையறுக்கப்பட்ட நிறுவனங்கள் | பொறியியல் பணிப்பாளர் செயற்றிட்டம் தொலைபேசி: 0112-692403 |

விலைமனு ஆவணங்களை (மூலப் பிரதி மற்றும் நகல் பிரதி) இரண்டு முறைகளில் பெற்றுக்கொள்ளலாம்.

**முறை 01 - கொழும்பு மாநகர சபையின் இணையதளத்திலிருந்து** (www.colombo.mc.gov.lk) **தரவிறக்கம் செய்துகொள்ளலாம்.**

அ) மேற்குறிப்பிடப்பட்ட மீளளிக்கப்படாத விலைமனு ஆவணக் கட்டணத்தை பின்வரும் வகையில் செலுத்துதல் வேண்டும்.

1) எந்தவொரு மக்கள் வங்கிக் கிளையிலும் மக்கள் வங்கி நகர மண்டப கிளையில் பேணப்படும் 167-1-001-6-3169425 எனும் கணக்கிலக்கத்திற்கு வரவு வைக்கலாம்.

2) கொழும்பு மாநகர சபை எல்லைக்குள் அமைந்துள்ள பின்வரும் கொடுப்பனவு கருமபீடங்களில் வார நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை செலுத்தலாம்.

- **வட்டார அலுவலகம் 04,**
  இல. 147, ஹைலெவல் வீதி, கிருலப்பனை,
  கொழும்பு 06.
- **வடிகாலமைப்பு மற்றும் நீர் வழங்கல் பிரிவு,**
  மாளிகாகந்த, கொழும்பு 10.

* பற்றுச்சீட்டு / வங்கி வரவுத் துண்டை விலைமனு ஆவணங்களுடன் கட்டாயம் இணைத்தல் வேண்டும்.

* இணைய தளத்திலிருந்து விலைக்கோரல் ஆவணங்களைப் பெற்றுக்கொண்ட விலைமனுதாரர்கள் பின்வரும் விபரங்களை dirproj@Colombo.mc.gov.lk எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அறிவித்தல் வேண்டும்.

1. நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி
2. தொடர்புகொள்ளும் தொலைபேசி இலக்கம் மற்றும் மின்னஞ்சல் முகவரி

**முறை 02 - நகர மண்டப வளவில் பெற்றுக்கொள்ளலாம்.**

* ஒவ்வொன்றிற்கும் மீளளிக்கப்படாத விலைமனுக்கோரல் ஆவணக் கட்டணத்தை வேலை நாட்களில் மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 3.30 மணி வரையும் 2023-04-04ஆம் திகதி மு.ப. 10.00 மணி வரையில் நகர மண்டப காசாளர் கருமபீடத்திற்கு செலுத்தி மற்றும் எழுத்து மூலமான கோரிக்கையொன்றை சமர்ப்பிப்பதன் மூலம், கொழும்பு-07, நகர மண்டபம், கொழும்பு மாநகர சபை, மாநகர பொறியியலாளர் திணைக்களத்தின் செயற்றிட்ட முகாமைத்துவப் பிரிவிலிருந்து விலைமனுக்கோரல் ஆவணங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

அ. கொடுப்பனவுகளை 2023-04-04ஆம் திகதி மு.ப. 10.00 மணி அல்லது அதற்கு முன்னர் செலுத்துதல் வேண்டும்.

இ. நிபந்தனையற்ற கோரும்போது பெறத்தக்கதான விலைமனு முறி/ பிணை விலைமனுக்கள் மூடப்படும் திகதியிலிருந்து 210 நாட்கள் வரை செல்லுபடியாதல் வேண்டும். விலைமனு முறி/ பிணை 2023.11.02ஆம் திகதி வரை செல்லுபடியாதல் வேண்டும். விலைக்கோரல்கள் 2023.10.03ஆம் திகதி வரை செல்லுபடியாதல் வேண்டும்.

ஈ. உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்டு முத்திரையிடப்பட்ட விலைமனுக்கோரல் ஆவணங்களை மூலப் பிரதி மற்றும் நகல் பிரதிகளில் கொழும்பு-07, நகர மண்டபம், செயலாளரின் திணைக்களத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் 2023-04-06ஆம் திகதி மு.ப. 10.00 மணி அல்லது அதற்கு முன்னர் உள்ளிடல் வேண்டும்.

உ. 2023-04-06ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு விலைமனுக்கள் ஏற்றுக்கொள்வது முடிவுறுத்தப்படும் என்பதுடன் இறுதி நேரத்திற்கு பின் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும் என்பதோடு அதன் பின்னர் விலைமனுக்கள் உடன் திறக்கப்படும். இந்த நாள் பொது விடுமுறை தினமாக அறிவிக்கப்பட்டால், அடுத்து வரும் வேலை நாளில் 10.00 மணிக்கு விலைமனுக்கள் முடிவுறுத்தப்படும். விலைமனுக்கள் திறக்கப்படும் நிகழ்வில் பங்கேற்பதற்கு விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகள் அனுமதிக்கப்படுவர்.

**ஜே.எம். பத்ராணி ஜயவர்தன,**
**மாநகர ஆணையாளர்**
**கொழும்பு மாநகர சபை.**

---

CSIAP THE WORLD BANK

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## இலங்கை சனநாயக சோசலிச குடியரசு

### கமத்தொழில் அமைச்சு

## தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல்

### காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாய திட்டம் (CSIAP)

### செயற்றிட்ட பிரதிப் பணிப்பாளரின் அலுவலகம் - ஊவா மாகாணம்

**IDA Credit No.: P163742**

1. கமத்தொழில் அமைச்சின் காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாயத்திட்ட (CSIAP) ஆகுசெலவிற்காக சர்வதேச அபிவிருத்தி சங்கத்திடமிருந்து(IDA) – உலகவங்கி - கடனொன்றை இலங்கை சனநாயக சோசலிச குடியரசானது பெற்றுள்ளதுடன் இக்கடன் பெறுகைகளின் பாகமொன்றை கீழே வழங்கப்பட்டுள்ள அட்டவணையின் ஒப்பந்தங்களின் கீழான தகுதியுள்ள பணக்கொடுப்பனவுகளுக்காக செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

2. கீழேயுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டவாறான நிர்மாண வேலைகளுக்காக காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாயத்திட்டத்தின் சார்பாக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து ஊவா மாகாண சிறியளவிலான செயற்றிட்ட பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார்.

**1.0 ஒப்பந்தத்தின் பெயர்**

உலக வங்கியினால் நிதியிடப்பட்ட CSIAP செயற்றிட்டத்தின் கீழ் ஊவா மாகாணத்தில் 2022 இல் சிறிய நீர்ப்பாசன திட்டத்தின் கீழ் 20 எண்ணிக்கையுள்ள நீர்ப்பாசன தெளிப்பான்கள் (1/2 Ac), 120 எண்ணிக்கையான நீர்ப்பாசனத் துளிகளை விசிறுபவை (1/4 Ac),18 எண்ணிக்கையான துளிகளை விசிறுபவை (1/2 Ac) மற்றும் சூரிய ஒளியினால் இயங்கும் நீர் பம்பிகள் ஆகியவற்றின் பெறுகை.

**ஒப்பந்த இலக்கம்:** LK-MOA-333992-GO-RFB/UP/DPDO/Sprinkler(09)/2023/15

| தொகுதி இல. | விளக்கம் | மீளளிக்கப்படாத கட்டணம் (இலங்கை ரூபாவில்) | விலைமனுப்பிணையின் தொகை மற்றும் செல்லுபடியாகும் காலம் |
|---|---|---|---|
| 01. | மிளகாய் பயிர்ச்செய்கைக்காக (1/4 ஏக்கர் அலகுகள்) 30 எண்ணிக்கையான நீர்ப்பாசன துளிகளை விசிறும் முறைமைகளை வழங்கல் மற்றும் நிறுவுதல் | 5,000 | 250,000 இ.ரூபா - 2023.08.31 ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் காலம். |
| 02. | பெரிய வெங்காய பயிர்ச்செய்கைக்காக (1/4 ஏக்கர் அலகுகள்) 30 எண்ணிக்கையான நீர்ப்பாசன துளிகளை விசிறும் முறைமைகளை வழங்கல் மற்றும் நிறுவுதல் | | 300,000 இ.ரூபா - 2023.08.31 ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் காலம். |
| 03. | 18 எண்ணிக்கையான சூரிய ஒளியினால் இயங்கும் நீர் பம்பிகளின் வழங்கல் மற்றும் நிறுவுதல் | | 540,000 இ.ரூபா - 2023.08.31 ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் காலம். |

**2.0 ஒப்பந்தத்தின் பெயர்**

உலக வங்கியினால் நிதியிடப்பட்ட CSIAP செயற்றிட்டத்தின் கீழ் ஊவா மாகாணத்தில் 2022 இல் Agronomic Intervention programe இன் கீழ் 32,500 எண்ணிக்கையான பாரசூட் ட்ரேகள், 100 பூச்சிகள் தடுப்பு வலைகள் (150M), 30 Yellow Sticky band, 06 எண்ணிக்கையான poly tunnel (1000 ச.அடி) ஆகியவற்றின் பெறுகை.

**ஒப்பந்த இலக்கம்: LK-MOA-333993-GO-RFB/UP/DPDO/Parachute Trays/(14)/2023/16**

| தொகுதி இல. | விளக்கம் | மீளளிக்கப்படாத கட்டணம் (இலங்கை ரூபாவில்) | விலைமனுப்பிணையின் தொகை மற்றும் செல்லுபடியாகும் காலம் |
|---|---|---|---|
| 01. | 32,500 எண்ணிக்கையான பரசூட் ட்ரேகளை வழங்கல் | 5000 | 100,000 இ.ரூபா – 2023.08.31 ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் காலம் |
| 02. | 60 எண்ணிக்கையான பூச்சி தடுக்கும் வலைகளை வழங்கல் | | 135,000 இ.ரூபா – 2023.08.31 ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் காலம் |
| 03. | 6 எண்ணிக்கையான 1000 ச.அடி Poly Tunnels இன் வழங்கல் மற்றும் நிறுவுதல் | | 150,000 இ.ரூபா – 2023.08.31 ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் காலம |
| 04. | 120 எண்ணிக்கையான Poly Mulch Roles இன் வழங்கல் | | 100,000 இ.ரூபா – 2023.08.31 ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் காலம் |

3. விலைமனுக்கோரலானது தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் மூலம் நடாத்தப்படும்.

4. விலைமனுதாரர் ஒரே விலைமனுவில் ஒன்றுக்கு அல்லது மேற்பட்ட தொகுதிகளுக்கு உரித்தான விலைமனுக்கோரல் ஆவணத்தில் கூறப்பட்டிருந்தால் விலைமனுக்களை சமர்ப்பிக்கலாம் ஆனால் விலைமனுதாரரின் திட்டவட்டமாக குறிப்பிட்டுள்ள தகவுத்திறன், நிதியிடல் மற்றும் ஏனைய திறன் மட்டுப்படுத்தல்கள் அடிப்படையிலேயே தெரிவுகள் மேற்கொள்ளப்படும்.

5. ஆர்வமுள்ள விலைமனுதாரர் மேலதிக தகவலை வெல்லவாய, குமாரதாச மாவத்தை, வேவல்வத்த, செயற்றிட்ட பிரதி பணிப்பாளரின் அலுவலகம் (ஊவா மாகாணம்), காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாயத் திட்டம், செயற்றிட்ட பிரதிப் பணிப்பாளரிடமிருந்து பெற்று (தொலைபேசி இல.:/ தொலைநகல் இல.: 055-2280334) 2023 மார்ச் 17 ஆம் திகதியிலிருந்து 2023 ஏப்ரல் 04 ஆம் திகதியன்று வரையும் வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் அதே இடத்தில் இலவசமாக விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.

6. 2023 மார்ச் 17 ஆம் திகதியிலிருந்து 2023 ஏப்ரல் 04 ஆம் திகதியன்று வரையும் வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் மீளளிக்கப்படாத கட்டணத்தை (தொகைக்காக தயவு செய்து மேலேயுள்ள அட்டவணையை பார்வையிடவும்) ரொக்கப் பணத்தில் செலுத்திய பின்னர், மேலேயுள்ள 5 ஆம் பந்தியில் குறிப்பிட்டுள்ள முகவரிக்கு செயற்றிட்ட பிரதிப் பணிப்பாளருக்கு தலைப்புக் கடிதத்தில் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்கள் தகுதியுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம்.

7. ஒப்பந்தத்தைப் பெறுவதற்கான தகுதிக்காக, சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் சேர்க்கப்படாதவராகவும் விலைமனுக்கோரல் ஆவணத்திலுள்ள தேவைப்படுத்தல்களை பூர்த்தி செய்பவராகவுமிருத்தல் வேண்டும். மேலும், சித்திகரமான விலைமனுதாரர் செல்லுபடியாகும் தன்மையிலுள்ள வியாபாரப் பதிவையும் கொண்டிருத்தல் வேண்டும்.

8. சந்தர்ப்பத்தை பொறுத்த வரையில், விலைமனுவுடன் விதித்துரைக்கப்பட்ட உருமாதிரியில் உற்பத்தியாளரின் சட்டபூர்வமான அதிகார கடிதமும் இணைக்கப்படல் வேண்டும். இல்லாவிடின், பதிலிறுக்கப்படாத விலைமனு என கருதப்பட்டு விலைமனுவானது நிராகரிக்கப்படும்.

9. மேலே 5 ஆம் பந்தியில் குறிப்பிட்டுள்ள இடத்தில் 2023 மார்ச் 24 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு விலைமனு முன்னோடிக் கூட்டமானது ஒழுங்கு பண்ணப்படும். வளமுள்ள விலைமனுதாரர்கள் கூட்டத்திற்கு சமுகமளிப்பதற்கு முன்னராக விஷேடமாக விபரக்குறிப்புக்கள், ITB, மற்றும் ஒப்பந்த தரவு ஆகியவற்றுடன் நன்றாக தம்மை பரிச்சயப்படுத்திக் கொள்ளல் வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

10. மேலேயுள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ள பெறுமதி மற்றும் திகதிக்காக விலைமனுக்கோரல ஆவணத்தில் விதிக்கப்பட்ட உருமாதிரியில் நிபந்தனையற்ற விலைமனு உத்தரவாதமொன்றுடன் விலைமனுக்கள் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். குறித்துரைக்கப்பட்டவாறான செல்லுபடியாகும் தன்மையிலில்லாத எந்தவொரு விலைமனுவும் பதிலிறுக்கப்படவில்லையென கருதப்பட்டு எந்தவொரு ஐயவினாவுமின்றி நிராகரிக்கப்படும்.

11. விலைமனுக்கள் மூலப்பிரதி மற்றும் நகல்பிரதியென சமர்ப்பிக்கப்படல் வேண்டும். மூலப்பிரதி மற்றும் நகல்பிரதியானது தனித்தனியான தபாலுறைகளில் சேர்க்கப்பட்டு முறையே ‘‘மூலப்பிரதி’’ மற்றும் ‘‘நகல்பிரதி’’ என அடையாளமிடப்படல் வேண்டும். இவ்விரண்டு தபாலுறைகளும் தனியொரு தபாலுறையில் அடக்கப்பட்டு முத்திரையிடப்பட்டு பண்டங்களின் விளக்கம் மற்றும் ஒப்பந்த இலக்கம் ஆகியன தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிடப்படல் வேண்டும்.

12. பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்கள் 2023 ஏப்ரல் 6 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் தலைவர், சிறியளவிலான செயற்றிட்ட பெறுகைக் குழு (ஊவா மாகாணம்), காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாய திட்டம், செயற்றிட்ட பிரதிப் பணிப்பாளரின் அலுவலகம் (ஊவா மாகாணம்), வேவல்வத்த, குமாரதாச மாவத்தை, வெல்லவாய என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும் அல்லது ஒப்படைக்கப்படல் வேண்டும்.

13. விலைமனுக்கள் 2023 ஏப்ரல் 6 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு மூடப்பட்டு உடனடியாகவே திறக்கப்படும். தாமதமான விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர், சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும்.


**தலைவர்,**
**சிறியளவிலான செயற்றிட்ட பெறுகைக் குழு (ஊவா மாகாணம்),**
**காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாய திட்டம்,**
**செயற்றிட்ட பிரதி பணிப்பாளரின் அலுவலகம் (ஊவா மாகாணம்),**
**வேவல்வத்த,**
**குமாரதாச மாவத்தை,**
**வெல்லவாய.**
**திகதி: 2023.03.15.**

Best way to fulfil your Future Dreams
E-mail your advertisements to, classified@lakehouse.lk
SUNDAY OBSERVER Marriage Proposals
Decades of Trusted Service
Piyumi- 0112 429 383 0112 429 347 | Gayani - 0112 429 343 / 342

# நகர்வலம்



## கலாநிதி ரவூப் ஸெய்னின் நூல் வெளியீடு கொழும்பில்




மேல் மாகாண புத்திஜீவிகள் அமைப்பு ஏற்பாடு செய்துள்ள கலாநிதி ரவூப் ஸெய்ன் எழுதியுள்ள, 'இலங்கை முஸ்லிம்களின் தேசிய பங்களிப்பு நினைவுக்கெட்டிய காலம் முதல் சுதந்திரம் வரை' எனும் நூல் வெளியீட்டு விழா நாளை மறுதினம் 18 ஆம் திகதி சனிக்கிழமை கொழும்பு தபால் தலைமையக கேட்போர் கூடத்தில் காலை 9.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

மேல் மாகாண புத்திஜீவிகள் அமைப்பின் தலைவரும் முன்னாள் மேல் முறையீட்டு நீதிமன்ற நீதியரசருமான எம். எம்.ஏ கபூர் தலைமையில் நடைபெறும் இந் விழாவில் பேராசிரியர் எஸ். எம் மஸாஹிர் பிரதம அதிதியாகவும் பாராளுமன்ற உறுப்பினரும் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவருமான ரவூப் ஹக்கீம் கௌரவ அதிதியாகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

நூல் அறிமுக உரையை எம். நவாஸ் சனூர்தீன் (நளீமி) நடத்தவுள்ளார். 300 பக்கங்கள் கொண்ட இவ் ஆய்வு நூல் ஆறு அத்தியாயங்களைக் கொண்டுள்ளது. இவர் ஏற்கனவே பல்வேறு தலைப்புகளில் 53 நூல்களை எழுதி வெளியிட்டுள்ளவர் என்பது குறிப்பிடத்தக்கது.

### மாவட்ட, பிரதேச செயலாளர்களின் பங்களிப்புடன்

## பெரும்போக நெல் அறுவடையை மேற்கொள்ள அரசு நடவடிக்கை

### அநுராதபுரத்தில் இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க

**அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்**

இம்முறை பெரும் போகத்தின் போது நெல் அறுவடை செய்யும் பொறுப்பை மாவட்ட செயலாளர்கள் மற்றும் பிரதேச செயலாளர்கள் மூலம் மேற்கொள்ள அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தார். அதனூடாக ஒரு கிலோ ஈர நெல் 88 ரூபாவுக்கும் ஒரு கிலோ உலர் நெல் 100 ரூபா விற்கும் கொள்வனவு செய்வதற்கு தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அநுராதபுரம் மாவட்டத்தில் அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்டு வரும் நெல் கொள்வனவு திட்டத்தை பார்வையிடும் நோக்கில் இராஜாங்க அமைச்சர்கள விஜயமொன்றை அதிகாரிகள் சகிதம் மேற்கொண்டார். இதன் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து அவர் கருத்து தெரிவிக்கையில்,

இம்முறை மாவட்ட செயலாளர்கள் மூலம் கொள்வனவு செய்யப்படும் நெல்லின் மூலம் இரண்டு மாதங்களினுள் குறைந்த வருமானமுடைய குடும்பம் ஒன்றிற்கு 10 கிலோ அரிசி வீதம் வழங்குவதற்கும் அரசாங்கம் எதிர்பார்த்துள்ளதாகவும் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு அரசாங்கத்தினால் அரிசி வழங்கவும் சிறிய மற்றும் நடுத்தர ஆலைகளை மேம்படுத்தவும் நெல் கொள்வனவுக்காக 20 பில்லியன் நிதியை ஒதுக்கீடு செய்வதற்கும் நிதி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.



இதன் போது அநுராதபுரம் மாவட்ட மேலதிக செயலாளர் சந்தியா அபேசேகர, தலாவ பிரதேச செயலாளர் அநுராத திஸாநாயக்க உள்ளிட்ட அரச அதிகாரிகள் மற்றும் நடுத்தர சிறிய நெல் ஆலை உரிமையாளர்களும் கலந்து கொண்டனர்.

## உலமாக்களுக்கான சிங்கள மொழி செயலமர்வு

**திறப்பனை தினகரன் நிருபர்**

தற்கால சூழலில் சிங்கள மொழியின் அவசியம் குறித்து ஏற்பாடு செய்யப்பட்டுள்ள உலமாக்களுக்கான சிங்கள மொழி விருத்தி செயலமர்வு (ஆலிம்கள் உலமாக்கள்) எதிர்வரும் 19ஆம் திகதி காலை 8.30 மணிக்கு அநுராதபுரம் மொகிதீன் ஜும்ஆப் பள்ளிவாசலில் நடைபெறவுள்ளது.

அநுராதபுரம் வை.எம்.எம். ஏ.பேரவை, ரஜரட்ட கல்வி அபிவிருத்தி அமைப்பு, அநுராதபுரம் மொகிதீன் ஜும்மா பெரிய பள்ளிவாசல் ஆகியன இணைந்து இச் செயலமர்வை ஏற்பாடு செய்துள்ளனர்.

இச் செயலமர்வில் அஷ்ஷெய்க் ஹசன் முராத் (நளீமி), அஷ்ஷெய்க் வசீம் (நளீமி), அஷ்ஷெய்க் அசீம் (தீனி) ஆகியோர் வளவாளர்களாக கலந்து கொள்ளவுள்ளனர்.

## மாளிகாவத்தை ஜும்ஆ மஸ்ஜிதில் 119ஆவது வருட புர்தா தமாம் வைபவம்

**ருஸைக் பாரூக்**



மாளிகாவத்தை ஜும்ஆ மஸ்ஜித் ரௌலதுஷ் ஷாதுலிய்யா அமைப்பின் 119ஆவது வருடாந்த புர்தா தமாம் வைபவம் கடந்த ஞாயிற்றுக் கிழமை (12) காலை மாளிகாவத்தை ஜும்ஆ மஸ்ஜிதில் நடைபெறவுள்ளது.

அஜ்வாத் அல் பாஸி அரபிக் கல்லூரி அதிபர் கலீபத்துஷ் ஷாதுலி மௌலவி அஹமத் சூபி (மஹ்லரி) அவர்கள் விஷேட பேச்சாளராக கலந்துகொண்டார்.

மாளிகாவத்தை ஜும்ஆ மஸ்ஜித் நிர்வாக சபை மற்றும் ரௌலதுஷ் ஷாதுலிய்யாவின் தலைவருமான மர்ஹூம் எம். இசட். எம். பாஸி இப்ராஹிம் அவர்களின் விசேட கத்தமுல் குர்ஆன் தமாமும் நடைபெற்றது.

இந்நிகழ்வின் இறுதியில் மாளிகாவத்தை ஜும்ஆ மஸ்ஜித் நிர்வாக சபைத் தலைவர் டாக்டர் ரசீன் அன்வர், கலீபத்துஷ் ஷாதுலி மௌலவி அஹமத் சூபி (மஹ்ழரி) ஆகியோருக்கு பாராட்டு சின்னமும் வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் பேஷ் இமாம்களாகிய மௌலவி ஹாபிழ் ஏ. டபிள்யூ. எம். ஆதில், மௌலவி முகத்தமுஷ் ஷாதுலி ஏ.எம்.ஏ. முஸ்ஸாவிர், மௌலவி ஹாபிஸ் எம்.ஏ.எம். இன்பாஸ், உம்மு சவாயாவின் தலைவர் அல் ஹாஜ் மக்கி ஹாஷிம், கொழும்பு மாநகர சபை பிரதி மேயர் எம்.டீ. எம். இக்பால், மற்றும் உலமாக்கள், முகத்தமீன்கள் ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர்.

## நக்கீரன் இதழ் ஆசிரியருடன் சந்திப்பு




தமிழ்நாடு நக்கீரன் இதழின் ஆசிரியர் திரு. நக்கீரன் கோபால் அவர்களை சென்னையில் உள்ள அவரது காரியாலயத்தில் திங்கட்கிழமை (13) புரவலர் ஹாசிம் உமர், தினகரன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் செந்தில் வேலவர் ஆகியோர் மரியாதையின் நிமித்தம் சந்தித்து கலந்துரையாடிய போது எடுக்கப்பட்ட படம்.

(படம்: இன்பாஸ் சலாஹுதீன்)

### ஹம்பாந்தோட்டை பிரதேசத்தில்

## அத்தியாவசிய பொருட்களின் விலைகள் படிப்படியாக வீழ்ச்சி

**ஹம்பாந்தோட்டை குறூப் நிருபர்**



ஹம்பாந்தோட்டை சந்தையில் அத்தியாவசிய பொருட்களின் விலைகள் குறைவடைந்து காணப்படுவதினால் பொதுமக்கள் மகிழ்ச்சி தெரிவிக்கின்றனர்.

கடந்த சில தினங்களாக சந்தையில் டொலரின் விலை குறைவடைந்துள்ளதினால் தற்பொழுது ஹம்பாந்தோட்டையில் அத்தியாவசிய பொருட்களின் விலைகளும் குறைந்து வருவதினால் நீண்டகால இடைவெளிக்குப் பிறகு பொதுமக்கள் நன்மையடைந்துள்ளனர்.

இவ்வாறு சீனி, வெங்காயம், கோதுமை மா, பருப்பு, அரிசி, கருவாடு, செத்தல் மிளகாய் மற்றும் மரக்கறி வகைகளின் விலைகளும் சந்தையில் குறைவடைந்து காணப்படுகின்றன. ரமழான் மாத நோன்பு மற்றும் சிங்கள தமிழ் புத்தாண்டு என்பன மக்களை அண்மித்துள்ள இக்காலப்பகுதியில் அத்தியாவசிய பொருட்களின் விலைகள் குறைவடைந்துள்ளமையினால் பொதுமக்கள் தங்களுக்கு நிவாரணம் கிடைத்துள்ளதாக மகிழ்ச்சி தெரிவிக்கின்றனர்.

அத்தோடு சந்தையில் தற்பொழுது முட்டைக்கு தட்டுப்பாடு நிலவி வருவதினால் தட்டுப்பாடின்றி முட்டையினை வழங்குவதற்கு உரிய தரப்பினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கின்றனர்.

## மருந்துப் பொருட்கள் அன்பளிப்பு



பேருவலை நல்லஹேன ஆதார வைத்திசாலைக்கு ஒரு தொகை மருந்துப்பொருட்களை சீனன்கோட்டையைச் சேர்ந்த இளம் மாணிக்க வியாபாரி பர்ஹான் ரபா, வைத்திய சாலை பிரதம வைத்தியதிகாரியிடம் கையளித்தார். அருகில் சமூக சேவையாளர் நிழார் பாரூக்கும் காணப்படுகிறார்.

## வெலிகம முஸ்லிம் ஆரம்ப பாடசாலையில் பெறுபேறு பெற்ற மாணவர்கள் கௌரவிப்பு





**வெலிகம தினகரன் நிருபர்**

வெலிகம முஸ்லிம் ஆரம்ப பாடசாலையிலிருந்து தோற்றிய (2022) 5ம் தர புலமைப் பரிசில் பரீட்சையில் வெட்டுப் புள்ளியை தாண்டி சித்தியடைந்த மாணவர்களையும், வெட்டுப்புள்ளிக்கு அண்மித்து சிறந்த புள்ளிகளைப் பெற்ற மாணவர்களையும் கௌரவித்து பாராட்டும் நிகழ்வொன்று எதிர்வரும் 19ம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு வெலிகம அறபா மத்திய கல்லூரி வெபா மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

2022 புலமைப் பரிசில் பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களின் பெற்றோர்களால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந் நிகழ்வில் அதிதிகளாக கொழும்பு பெரிய பள்ளிவாசல் கதீப் மௌலவி எம்.ஏ.எம். இப்ழால் (பாரி) மற்றும் நாடறிந்த புலமைப் பரிசில் மாணவர்களுக்கு கற்பிக்கும் ஆசிரியர் எம்.ஆர்.எம். ரனீஸ், வெலிகம முஸ்லிம் ஆரம்ப பாடசாலை அதிபர் திருமதி ஸனூலா மற்றும் வெலிகம அறபா மத்திய கல்லூரி அதிபர் எம்.டீ.எம். முதஹ்ஹர் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இந் நிகழ்வில், சித்தியடைந்த மற்றும் சிறந்த புள்ளிகளைப் பெற்ற மாணவர்கள் பதக்கம் அணிவித்து கௌரவிக்கப்படவுள்ளதோடு, பரீட்சைக்குத்தோற்றி 70 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்களுக்கும் பரிசுப் பொதிகள் வழங்கப்படவுள்ளன. மேலும் அதிபர், ஆசிரியர்களும் பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்படவுள்ளனர்.

பரீட்சையில் சித்தியடைந்தவர்களும், சிறந்த புள்ளிகளைப் பெற்றுக் கொண்டவர்களும் அதிபர், ஆசிரியர்களுடன் எடுத்துக் கொண்ட படம்.

## நாகர்கோவிலில் பெற்றோல் குண்டு வீச்சு

**யாழ். விசேட நிருபர்**

வடமராட்சி கிழக்கு நாகர்கோவில் மேற்குப் பகுதியில் நேற்றைய தினம் புதன்கிழமை அதிகாலை வீடொன்றின் மீது பெற்றோல் குண்டுத்தாக்குதல் நடத்தப்பட்டதில் வீட்டின் ஒருபகுதி மற்றும் மோட்டார் சைக்கிள்கள் இரண்டு என்பன எரிந்துசாம்பலாகியுள்ளன.

அதிகாலை 12.30 மணியளவில் இத் தாக்குதல் சம்பவம் நடத்தப்பட்டுள்ளதாக பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது.

நாகர் கோவில் பகுதியில் மயானமொன்றுக்கு சுற்றுமதில் அமைப்பதற்கு எடுக்கப்பட்ட முயற்சியின் தொடராக ஏற்பட்ட முறுகல் நிலையை அடுத்து கடந்த திங்கட்கிழமை இரவு பொலிஸாருக்கும் மக்களுக்கும் இடையில் மோதல் ஏற்பட்டிருந்தது.

இதன்போது துப்பாக்கிப்பிரயோகமும் தடியடியும் பொலிஸார் மேற்கொண்டதாக மக்கள் குற்றம் சாட்டியிருந்தனர். இந்நிலையில், நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை பகல் இரண்டு தரப்புக்களும் பொலிஸ் அதிகாரிகள் முன்னிலையில் சமரசத்தில் ஈடுபட்டனர். மயானத்திற்கான மதில் அமைக்கும் நடவடிக்கை தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டிருந்தது.



பொலன்னறுவை மாவட்ட காதி நீதவானாக சிரேஸ்ட சட்டத்தரணி அப்துல் காதர் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் அண்மையில் மேன்முறையீட்டு நீதியரசர் ருசித வெலிவத்தை முன் சத்தியப்பிரமாணம் செய்து பதவியேற்ற போது எடுக்கப்பட்ட படம். பொலன்னறுவை மாவட்டத்தில் சட்டத்தரணி ஒருவர் காஸி நீதவானாக நியமிக்கப்பட்ட முதற் சந்தர்ப்பம் இதுவாகும்.





இலங்கையை மையப்படுத்தி செயற்பட்டு வரும் சமூக மேன்பாட்டு அமைப்பான கிரேட் மைன்ட்ஸ் நிறுவனத்தின் ஏற்பாட்டில் சர்வதேச உளவியல் பயிற்றுவிப்பாளர் கலாநிதி ஹுசைன் பாஷா இலங்கை வாழ் உளவியல் மாணவர்கள், உளவியல் ஆலோசகர்களுக்கான 30 மணிநேர தொழில் பயிற்சி வெற்றிகரமாக நிறைவுபெற்றது. இதில் 80 இற்கு மேற்பட்ட பங்குபற்றுனர்கள் பங்குபற்றியதுடன் இந்நிகழ்வின் இறுதியில் IBNLP அங்கீகாரம் பெற்ற NLP MASTER PRACTITIONER சான்றிதமும் தொழில் பயிற்சி சான்றிதமும் வழங்கி கௌரவிக்கப்பட்டது. இந்நிகழ்வில் கௌரவ அதிதியாக இலங்கையின் மூத்த உளவியல் ஆலோசகர் அஸ்மியாஸ் ஷஹீத் கலந்து மாணவர்கள் மற்றும் ஏற்பாட்டுக்குழுவிற்கு வாழத்துக்களை தெரிவித்தார். கொழும்பு மாநகரில் நடைபெற்ற இந்நிகழ்வில் கிரேட் மைன்ட்ஸ் நிறுவனத்தின் பனிப்பாளர் தரபீக் எம் தாஹா மற்றும் உளநல பகுதியின் நிர்வாக தலைவர் பஸ்லான் ஏ காதர் என்போர் கலாநிதி ஹுஸைன் பாஷாவின் சேவையையும், பணியையும் வாழ்த்தி நினைவுச்சின்னம் வழங்கி கௌரவித்தனர். இக்பால் அலி






# மாத்தளை ஆமினா மகளிர் தேசியக் கல்லூரியின் வர்ண விருது வழங்கும் நிகழ்வு





மாத்தளை ஆமினா மகளிர் தேசியக் கல்லூரியின் 60 ஆண்டு வைர விழாவை முன்னிட்டு நடந்த வர்ண விருதுகள் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் கல்லூரியின் கேட்போர் கூடத்தில் வெகு விமர்சையாக இடம்பெற்றது. கல்லூரி அதிபர் எச். எல். சிராஜுதீன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் சுங்கத்திணைக்களத்தின் சிரேஷ்ட அதிகாரியும் பிரதிப் பணிப்பாளருமான எம்.ஏ.எம் நாசிர் பிரதம அதிதியாகவும் மாத்தளை வலையக்கல்வி பணிப்பாளர் ஜே.எம். இக்பால், மத்திய மாகாண கல்வி திணைக்கள உதவிக் கல்வி பணிப்பாளர் எம். ஆரிப் உனைஸ் ஆகியோர் கௌரவ அதிதியாகவும் சப்ரகமுவ பல்கலைக்கழக விரிவுரையாளர் லறீனா ஹக் சிறப்பு அதிதியாகவும் கலந்து கொண்டனர். படங்கள்: சுழற்சி நிருபர் எம் சதுர்தீன்

சமூக விரோத செயற்பாடுகளை

# ஒழிப்பதற்கு அரச அதிகாரிகள் அர்ப்பணிப்புடன் செயற்படல் அவசியம்

## கிளிநொச்சியில் அமைச்சர் டக்ளஸ் வேண்டுகோள்



இளைய தலைமுறையினரை பாதிக்கும் சமூக சீர்கேடுகளையும் சட்ட விரோதச் செயற்பாடுகளையும் கட்டுப்படுத்துவதற்கு, அதிகாரிகள் சமூக சிந்தனையோடு செயற்பட வேண்டும் என்றும் பொலிஸ் மற்றும் பாதுகாப்பு தரப்பினருடன் ஒருங்கிணைந்து செயற்படுமாறும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வலியுறுத்தியுள்ளார்.

சுற்றுச் சூழலுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் மேற்கொள்ளப்படுகின்ற அபிவிருத்தி திட்டங்களை பிரதேசத்திற்கான நன்மைகளாகவும் எமது மக்களுக்கான வாழ்வாதாரமாகவும் உருவாக்கிக் கொள்ள வேண்டும் என்றும் அவர், வலியுறுத்தியுள்ளார்.

கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நேற்று நடைபெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் முன்னாயத்தக் கலந்துரையாடலில் கருத்து தெரிவிக்கும் போதே, கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் பதில் தலைவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேற்கண்டவாறு தெரிவித்தார். கிளிநொச்சி மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்ற இக் கலந்துரையாடலில், மாவட்ட செயலாளர் திருமதி. ரூபவதி கேதீஸ்வரன், பிரதேச செயலாளர்கள், கல்வி மற்றும் சுகாதாரத்துறை அதிகாரிகள், பாதுகாப்புத்துறை உயரதிகாரிகள் மற்றும் துறைசார் உயரதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.

இதில் பிரதானமாக போதைப்பொருள் பயன்பாட்டை கட்டுப்படுத்தல், உணவுப் பாதுகாப்பு, சட்டவிரோத மண் அகழ்வு, கல்வி, சுகாதாரம் இவ்வாறான இம்மாவட்ட மக்கள் எதிர்கொள்ளும்பலவிடயங்கள் இங்கு கலந்துரையாடப்பட்டன.

இதுதொடர்பாக கருத்து தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா,

"போதைப்பொருள் பாவனை, நாடுதழுவிய ரீதியில் இளம் சமுதாயத்தினரைப் பாதித்து வருகிறது.எனவே, இதை ஒழிப்பதற்கு முன்னுரிமை வழங்கிச் செயற்படல் அவசியம். போதையை ஒழிப்பது குறித்து அடிக்கடி கலந்துரையாடுவதும் அவசியம். இதனால், இரண்டு வாரங்களுக்குள் மீண்டும் நாங்கள் கூட உள்ளோம்.

ஒவ்வொரு மாவட்டத்திலும் வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ளவர்களை அடையாளங்கண்டு அவர்களுக்கு ஒரு குறிப்பிட்ட காலம் ஒரு குறிப்பிட்ட தொகை அரிசியை விநியோகிக்க வேண்டும். அந்தவகையில் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு கிலோ நெல்லை 100 ரூபாய் வீதம் கொடுத்து வாங்கும்படி அறிவுறுத்தப்பட்டுள்ளது. இதனடிப்படையில், கிளிநொச்சி மாவட்டத்தில் இதுவரை 5,85,832 கிலோ நெல் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. கிளிநொச்சி மாவட்டத்தில் கிட்டத்தட்ட 30,171 குடும்பங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. அந்த குடும்பங்களுக்கு இவை பகிர்ந்தளிக்கப்படும்.

அதைவிட இந்தப் பிரதேசத்தில் இருக்கக்கூடிய காற்றாலை மின் உற்பத்தி, சூரிய ஒளி மின்சாரம் போன்ற திட்டங்களும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. விஞ்ஞானபூர்வமாக ஆய்வுசெய்த பின்னர் சூழலுக்கு பாதிப்பேற்படாத வகையில் இவ்வாறான திட்டங்களை முன்னெடுப்பதற்கு உத்தேசித்துள்ளோம்.




# அரசின் நெல் கொள்வனவு காரைதீவில் ஆரம்பம்

காரைதீவு குறூப் நிருபர்



அம்பாறை மாவட்டத்தின் காரைதீவு பிரதேசத்தைச் சேர்ந்த விவசாயிகளிடமிருந்து அரசாங்கத்தின் நெல் கொள்வனவு நடவடிக்கை நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை (14) ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், இதன் முதற் கட்டமாக மாவடிப்பள்ளி தனியார் அரிசி ஆலையினால் ஒருதொகுதி நெல் விவசாயிகளிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டது.

காரைதீவு பிரதேச செயலாளர் சிவ ஜெகராஜனின் தலைமையில் காரைதீவு கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் மா.சிதம்பரநாதனின் ஏற்பாட்டில் அம்பாறை மாவட்ட விவசாய பிரதிப் பணிப்பாளர் எஸ்.எம்.கலீஸ் முன்னிலையில் இந்த நெல் கொள்வனவு முன்னெடுக்கப் பட்டு வருகின்றது.

இந்நிலையில், ஈரப்பதன் 1–14 வீதமுள்ள நெல் ஒரு கிலோகிராம் 100 ரூபாவுக்கும் ஈரப்பதன் 14–22 வீதமுள்ள நெல் ஒரு கிலோகிராம் 88 ரூபாவுக்கும் கொள்வனவு செய்யப்பட்டு வருகின்றது.

ஒவ்வொரு விவசாயிடமிருந்தும் உச்சபட்சமாக 5 ஆயிரம் கிலோகிராம் நெல் கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஒரு ஏக்கரில் நெற்செய்கை மேற்கொண்ட விவசாயிகளிடமிருந்து 2 ஆயிரம் கிலோகிராம் நெல்லும் இரண்டு ஏக்கரில் நெற்செய்கை மேற்கொண்ட விவசாயிகளிடமிருந்து 4 ஆயிரம் கிலோகிராம் நெல்லும் கொள்வனவு செய்யப்படுகின்றது. இதனை விடக் கூடுதலான ஏக்கரில் நெற்செய்கை மேற்கொண்ட விவசாயிகளிடமிருந்தே 5 ஆயிரம் கிலோகிராம் நெல் கொள்வனவு செய்யப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## அக்கரைப்பற்று மாவட்ட நீதிமன்ற தீ விவகாரம்; சந்தேக நபர்களுக்கு விளக்கமறியல் நீடிப்பு

ஒலுவில் விசேட நிருபர்

அக்கரைப்பற்று மாவட்ட நீதிமன்ற ஆவணக் காப்பகத்தை தீயிட்டு எரித்த குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள 3 சந்தேக நபர்களுக்கும் மீண்டும் விளக்கமறியல் வழங்கப்பட்டுள்ளது.

இச்சந்தேகநபர்களை எதிர்வரும் 28ஆம் திகதி வரை தொடர்ந்து விளக்கமறியலில் வைக்குமாறு, அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்ற நீதவான் எம்.எச்.எம்.ஹம்ஸா நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை (14) உத்தரவிட்டார்.

கடந்த டிசெம்பர் 21ஆம் திகதி அதிகாலை வேளையில் நீதிமன்ற கட்டடத்தொகுதிக்கு வைக்கப்பட்ட தீயினால், நீதிமன்றத்தின் வழக்குப் பதிவேட்டு அறை மற்றும் திறந்த நீதிமன்றம் போன்ற பல பிரிவுகளிலுள்ள ஆவணக் கோப்புகள் முற்றாக எரிந்துள்ளன.

இது தொடர்பாக பொலிஸாரின் விசாரணையின் போது, நீதிமன்றத்துக்கு அருகிலுள்ள வீடுகளில் பொருத்தப்பட்டிருந்த சி.சி.ரி.வி. கமெராவில் 3 நபர்கள் தமது முகங்களை மூடியவாறு, நீதிமன்ற வளாகத்தினுள் நுழைந்து கட்டடத்துக்கு தீ வைத்து விட்டு தப்பியோடும் காட்சி பதிவாகியிருந்தது.

இச்சம்பவம் தொடர்பாக விசாரணை மேற்கொள்வதற்கு விசேட பொலிஸ் குழுவொன்று நியமிக்கப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்பட்டு வந்த நிலையில், சந்தேகத்தின் பேரில் அக்கரைப்பற்று, கோளாவில் பிரதேசத்தைச் சேர்ந்த 19, 24, 28 வயதுடைய இச்சந்தேக நபர்கள் மூவரும் கைது செய்யப்பட்டனர். கல்முனை, பெரியநீலாவணை பிரதேசத்தில் இவர்கள் மறைந்திருந்த வேளையில் கைது செய்யப்பட்டனர்.

## பெரும்போகச் செய்கையில் நோய் பரவல்; ஆய்வுக்கு மண் மாதிரி

கிண்ணியா தினகரன் நிருபர்

திருகோணமலை மாவட்டத்தின் கிண்ணியா, புளியடிக்குடாவில் கடந்த 2022/2023ஆம் ஆண்டு பெரும்போக நெற்செய்கையில் பரவிய மஞ்சள் நிற நோய்த் தாக்கம் மற்றும் விளைச்சல் குறைவு தொடர்பாக ஆராயும் நடவடிக்கையில் அப்பிரதேச விவசாயத் திணைக்கள உத்தியோகத்தர்களும் விவசாயப் போதனாசிரியர்களும் ஈடுபட்டுள்ளனர்.

மேற்படி பிரதேசத்துக்கு நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை (14) சென்ற விவசாயத் திணைக்கள உத்தியோகத்தர்களும் விவசாயப் போதனாசிரியர்களும், ஆய்வுக்காக மண் மாதிரியைப் பெற்றுக்கொண்டனர்.

தமது நெற்செய்கையில் பரவிய மஞ்சள் நிற நோய்த் தாக்கம் மற்றும் விளைச்சல் குறைவு தொடர்பாக விவசாயிகள் முறைப்பாடு செய்ததைத் தொடர்ந்து, விவசாயத் திணைக்கள உத்தியோகத்தர்களும் விவசாயப் போதனாசிரியர்களும் ஆய்வு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

# ஆலையடிவேம்பில் விவசாயிகளுக்கு இலவசமாக எரிபொருள் விநியோகம்

அட்டாளைச்சேனை தினகரன் நிருபர்



சீன அரசாங்கத்தினால் இலங்கைக்கு நன்கொடையாக வழங்கப்பட்டுள்ள எரிபொருளை விவசாயிகளுக்கு இலவசமாக வழங்கி வைக்கும் வேலைத்திட்டம், அம்பாறை மாவட்டத்தின் அக்கரைப்பற்று மற்றும் ஆலையடிவேம்பு பிரதேசங்களில் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

விவசாய அமைச்சின் மூலம் முன்னெடுக்கப்பட்டு வரும் இந்த வேலைத்திட்டத்துக்கு அமைய, இம்முறை பெரும்போக நெற்செய்கையில் ஈடுபட்ட சுமார் 1,880 விவசாயிகளுக்கு இலவசமாக எரிபொருள் விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அக்கரைப்பற்று கிழக்கு, அக்கரைப்பற்று மேற்கு ஆகிய கமநல சேவைகள் நிலையங்கள் ஊடாக இலவசமாக எரிபொருள் விநியோகத்துக்கான டோக்கன்கள் வழங்கப்பட்டு வருவதுடன், தெரிவு செய்யப்பட்ட எரிபொருள் நிலையங்கள் ஊடாக விவசாயிகளுக்கு எரிபொருள் விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

சீன அரசாங்கம் இலங்கைக்கு விவசாயத் தேவைகளுக்காக 6.98 மில்லியன் லீற்றர் டீசல் எரிபொருளை இலவசமாக வழங்கியுள்ளது.

அரை ஏக்கர் முதல் இரண்டரை ஏக்கர் வரை பெரும்போக நெற்செய்கை மேற்கொண்ட விவசாயிகள், இந்த எரிபொருள் நிவாரணத்தை பெற்றுக்கொள்வதற்குத் தகுதியானவர்களாகக் கொள்ளப்படுகின்றனர்.

இவ்வாறு இலவசமாகக் கிடைக்கும் எரிபொருளைக் கொண்டு விவசாயிகள் பெரும்போக அறுவடையை மேற்கொண்டு வருகின்றனர்.

# 'மாபெரும் போதை ஒழிப்பு' கல்முனையில் மாநாடு

கல்முனை குறூப் நிருபர்

கல்முனை ஹுதா ஜும்ஆ பள்ளிவாசல் மற்றும் ஹுதா அழைப்பு வழிகாட்டல் பணியகம் இணைந்து ஏற்பாடு செய்துள்ள 'மாபெரும் போதை ஒழிப்பு' மாநாடு, கல்முனையில் ஹுதாத்திடலில் நாளை வெள்ளிக்கிழமை (17) மாலை 5.00 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

'போதையற்ற ரமழான்' எனும் தொனிப்பொருளில் நடைபெறவுள்ள இந்த மாநாட்டில், 'போதையற்ற சமுதாயத்தை உருவாக்குவோம்' எனும் தலைப்பில் அஷ்ஷெய்கு அப்துல் ஹமீட் ஷரயீயும் 'பொருளாதாரத்தை ஹலாலாகத் தேடிக்கொள்வோம்' எனும் தலைப்பில் அஷ்ஷெய்கு ரஸ்மி ஷாஹித் அமீனியும் 'அருள் நிறைந்த ரமழானே வருக' எனும் தலைப்பில் அஷ்ஷெய்கு சாபித் ஷரயீ ரியாயும் உரையாற்றவுள்ளனர்.

இந்த மாநாட்டில் பொலிஸ் மற்றும் பாதுகாப்புத் தரப்பினரின் முக்கியஸ்தர்களும் பங்கு பெறவுள்ளதாக, ஹுதா ஜும்ஆ பள்ளிவாசல் நிர்வாகத்தினர் தெரிவித்தனர்.

# கேரள கஞ்சாவுடன் கைதான ஒருவருக்கு விளக்கமறியல்

பாலமுனை தினகரன் நிருபர்

அம்பாறை மாவட்டத்தின் அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மையவாடி நகர் பிரிவில் கேரள கஞ்சாவுடன் கைது செய்யப்பட்ட ஒருவரை எதிர்வரும் 28ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு, அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்ற நீதவான் எம்.எச்.எம். ஹம்ஸா உத்தரவிட்டார்.

இது தொடர்பாக அக்கரைப்பற்று பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் கேரள கஞ்சாவுடன் இச்சந்தேகநபரைக் கைது செய்ததுடன், அவரிடமிருந்து 1,000 மில்லிகிராம் கேரள கஞ்சாவையும் கைப்பற்றினர்

இதனைத் தொடர்ந்து, இச்சந்தேக நபரை நீதிமன்றத்தில் நேற்று புதன்கிழமை (15) முன்னிலைப்படுத்திய போது, இந்த விளக்கமறியல் உத்தரவை நீதவான் வழங்கியுள்ளார்.

# ரமழான் மாதத்தையிட்டு உலர் உணவுப் பொதிகள்

கல்முனை குறூப் நிருபர்



புனித ரமழான் மாதத்தை முன்னிட்டு சாய்ந்தமருதுப் பிரதேச செயலகப் பிரிவில் பெண் தலைமைத்துவத்தைக் கொண்ட சமுர்த்தி உதவி பெறும் குடும்பங்கள் சிலவற்றுக்கு உலர் உணவுப் பொதிகள் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை (14) வழங்கி வைக்கப்பட்டன.

சாய்ந்தமருதிலுள்ள சமுர்த்தி வங்கிச் சங்கக் கூட்ட மண்டபத்தில் வைத்து தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு இவை வழங்கப்பட்டன.

இதில் அம்பாறை மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர் எம்.எஸ்.எம். சப்ராஸ், சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம்.ஆஷிக், சமுர்த்தி தலைமைப்பீட முகாமையாளர் ஏ.சீ. ஏ.நஜீம் ஆகியோர் கலந்துகொண்டு இந்த உலர் உணவுப் பொதிகளை வழங்கி வைத்தனர்.

# அல்ஹிரா பாடசாலையில் புதிய விஞ்ஞானப்பிரிவு

தம்பலகாமம் குறூப் நிருபர்

திருகோணமலை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் தொடர்ச்சியாக முன்னெடுத்த முயற்சியின் காரணமாக கிண்ணியா அல்ஹிரா முஸ்லிம் மகளிர் மகா வித்தியாலயத்தில், உயர்தர விஞ்ஞானப் பிரிவை ஆரம்பிப்பதற்கான அனுமதி உரிய அதிகாரிகளிடமிருந்து கிடைத்துள்ளது. அண்மையில் கிண்ணியா அல்ஹிரா முஸ்லிம் மகளிர் மகா வித்தியாலயத்துக்கு பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹரூப் விஜயம் செய்த போது, இப்பாடசாலையில் உயர்தர விஞ்ஞானப் பிரிவை ஆரம்பிப்பதற்கான அனுமதியைப் பெற்றுத் தருமாறு அப்பாடசாலை அதிபர் வேண்டுகோள் விடுத்திருந்தார். இந்த வேண்டுகோள் தொடர்பாகக் கவனத்தில் கொண்டு, அதற்குரிய நடவடிக்கை எடுத்ததைத் தொடர்ந்து, மேற்படி பாடசாலையில் உயர்தர விஞ்ஞானப் பிரிவை ஆரம்பிப்பதற்கு அனுமதி கிடைத்துள்ளதாக, பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹரூப் தெரிவித்தார்.

## வெருகல் பிரதேசத்தில் இரத்ததான நிகழ்வு

பெரியபோரதீவு தினகரன் நிருபர்

மட்டக்களப்பு மாவட்டத்தின் வெருகல் பிரதேசத்தில் 'உதிரம் கொடுத்து உயிர் காப்போம்' எனும் தொனிப்பொருளின் கீழ் மாபெரும் இரத்ததான நிகழ்வு கடந்த திங்கட்கிழமை (13) நடைபெற்றது.

சர்வதேச மகளிர் தினத்தைச் சிறப்பிக்கும் வகையில், வெருகல் பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் இளைஞர் அபிவிருத்தி அகம் தன்னார்வத் தொண்டு நிறுவனத்தின் அனுசரணையில் இந்த இரத்ததான நிகழ்வு நடத்தப்பட்டது. இதில் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், ஈச்சிலம்பற்று பொலிஸார், பொது மக்கள், வெருகல் பிரதேச வைத்திய சாலை உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டு இரத்ததானம் வழங்கினர். இதன்போது, இரத்த வங்கிக்குப் பொறுப்பான வைத்தியர் எம்.ஐ.இர்பான் தலைமையிலான மூதூர் இரத்த வங்கியின் உத்தியோகத்தர்களும் திருகோணமலை இரத்த வங்கியின் அலுவலர்களும் இணைந்து இரத்தச் சேகரிப்பில் ஈடுபட்டனர். சுமார் 60 பைந்து இரத்தம் சேகரிக்கப்பட்டதாக, ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

## தொழில் பயிற்சி பெற்ற 200 பேருக்கு சான்றிதழ்கள்



கிண்ணியா தினகரன் நிருபர்

தேசிய இளைஞர் படையணியினால் நடத்தப்பட்ட தொழில் பயிற்சி நெறிகளை நிறைவு செய்த இளைஞர்கள் 200 பேருக்கு திருகோணமலை, சேருவில தேசிய இளைஞர் படையணியின் கேட்போர் கூடத்தில் வைத்து நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை (14) சான்றிதழ்கள் வழங்கி வைக்கப்பட்டன.

கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த மேற்படி 200 பேரும் கனரக வாகன சாரதி பயிற்சிநெறி, அலுமினிய பிட்டிங் பயிற்சிநெறி, மற்றும் ஜப்பான், ருமேனியா, தென்கொரிய மொழிப் பாடநெறி உள்ளிட்ட தொழில் பயிற்சிநெறிகளை நிறைவு செய்துள்ளனர். இந்த இளைஞர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கி வைக்கப்பட்டதைத் தொடர்ந்து கலை நிகழ்வுகள் நடைபெற்றன.

# இலகு சேவைகளை வழங்க 'SMART CITY' வேலைத்திட்டம்

புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்



மட்டக்களப்பு மாவட்டத்தின் காத்தான்குடி நகரசபை எல்லையினுள் வசிக்கும் பொதுமக்களுக்கு இலகுவாகவும் விரைவாகவும் வினைத்திறனாகவும் சேவைகளை வழங்கும் நோக்கில் 'SMART CITY' எனும் வேலைத்திட்டம், காத்தான்குடி ஹோட்டல் பீச் வே மண்டபத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை (14) அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

காத்தான்குடி நகரசபைத் தவிசாளர் எஸ்.எச்.அஸ்பர் தலைமையில் நடைபெற்ற இதற்கான நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் எஸ்.பிரகாஷ் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

அத்துடன் நகரசபை உறுப்பினர்கள், யு.என்.டி.பி. பிரதிநிதிகள், பாடசாலை அதிபர்கள், வர்த்தகர்கள், பள்ளிவாசல் தலைவர்கள் உள்ளிட்ட பலர் இதில் கலந்து கொண்டனர்.

அனைத்துச் சேவைகளையும் பொதுமக்கள் டிஜிட்டல் முறையினூடாக உலகின் எப்பாகத்திலிருந்து கொண்டும் பெற்றுக்கொள்ளக்கூடிய வகையில், காத்தான்குடி நகரசபையின் 'SMART CITY' மென்பொருளை Winsoft Max எனும் தனியார் நிறுவனத்தினர், காத்தான்குடி நகரசபையுடன் இணைந்து வடிவமைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கல்முனையில் கவனயீர்ப்பு




கல்முனை மத்திய தினகரன் நிருபர்

கல்முனை பிரதேச ஆசிரியர்கள் தொழிற்சங்க கூட்டமைப்பு, கல்முனை தனியார் பஸ் தரிப்பு நிலையத்துக்கு முன்பாக நேற்று புதன்கிழமை (15) எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

நாடு தழுவிய ரீதியில் தொழிற்சங்கங்களின் கூட்டமைப்புகள் நேற்று புதன்கிழமை (15) முன்னெடுத்த தொழிற்சங்க நடவடிக்கையின் காரணமாக கல்முனைக் கல்வி வலயப் பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்கள், ஆசிரியர்கள் வரவின்மையால் பாடசாலைகள் வெறிச்சோடிக் காணப்பட்டன.

அத்துடன், மூன்றாம் தவணைப் பரீட்சையும் இன்றையதினம் நடைபெறாமல் பிறிதொரு தினத்துக்கு மாற்றப்பட்டுள்ளது.

## இரத்மலானை அணி வெற்றி



**மாளிகைக்காடு குறூப் நிருபர்**

விழிப்புலனற்றோர் சங்கத்தின் 25ஆவது ஆண்டு வெள்ளி விழாவினை முன்னிட்டு கிழக்கு மாகாண பிரிலியண்ட் மற்றும் கொழும்பு ரத்மலானை விழிப்புலனற்றோர் கிரிக்கெட் அணிகளுக்கு இடையில் இடம்பெற்ற ஒலிப்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியில்இரத்மலானைவிழிப்புலனற்றோர்கிரிக்கெட்அணி வெற்றியீட்டியது.

மட்டக்களப்பு சிவாநந்தா விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற இந்த போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாட பணிக்கப்பட்ட கிழக்கு மாகாண விழிப்புலணற்றோர் 94 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலெடுத்தாடிய இரத்மலானை அணி 14.2 ஓவர்களில் வெற்றி இலக்கை அடைந்தது. இப்போட்டியின் ஆட்ட நாயகனாக இரத்மலான அணித் தலைவர் திமுத்த பெரேரா தெரிவு செய்யப்பட்டார்.

## ஆஸி. வலைப்பந்து தொடரில் ஆடுகிறார் தர்ஜினி சிவலிங்கம்




அவுஸ்திரேலியாவில் நடைபெறும் முன்னணி வலைப்பந்தாட்ட தொடர்களில் ஒன்றான விக்டோரியன் வலைப்பந்தாட்ட லீக்கின் வெஸ்ட் சிட்டி பல் கோன்ஸ்அணியில்இலங்கையின் முன்னணி வீராங்கனை தர்ஜினி சிவலிங்கம் இணைந்துள்ளார்.

விக்டோரியன் வலைப்பந்தாட்ட லீக்கின் முன்னணி அணியான வெஸ்ட் சிட்டி பல் கோன்ஸ், 2009ஆம் ஆண்டு இந்த தொடர் ஆரம்பித்ததில் இருந்து 14 தடவைகள் சம்பியனாக முடிசூடியுள்ளது. அதுமாத்திரமன்றி நடப்பு சம்பியனாகவும் இந்த அணி களமிறங்குகிறது.

இந்த தொடரில் கடந்த ஆண்டு விளையாடியிருந்த தர்ஜினி மீண்டும் களமிறங்குகிறார்.

இலங்கை வலைப்பந்தாட்டத்தில் மாத்திரம் இல்லாமல் சர்வதேச வலைப்பந்தாட்ட போட்டிகளில் முன்னணி வீராங்கனையாக இருந்து வரும் இவர், உலகின் சிறந்த ஷூட்டர் என்ற பெருமையை தக்க வைத்துள்ளார்.

இதேவேளை, கடந்த ஆண்டு மாலைத்தீவுகளில் நடைபெற்ற விளையாட்டு விருது வழங்கும் விழாவில் மதிப்புமிக்க 'ஸ்போர்ட்ஸ் ஐகொன்' விருதினை இவர் வென்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## பைனா அணி சம்பியன்

**ஒலுவில் கிழக்கு தினகரன் நிருபர்**



அட்டாளைச்சேனை பைனா விளையாட்டு கழகத்தின் ஏற்பாட்டில் 23 வயதுக்குட்பட்ட 24 கழகங்கள் கலந்து கொண்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் பைனா விளையாட்டு கழகம் வெற்றி பெற்று சம்பியன் கிண்ணத்தை வென்றது.

இதன் இறுதி போட்டி அட்டாளைச்சேனை பொது விளையாட்டு மைதானத்தில் அண்மையில் நடைபெற்றது.

இறுதிப் போட்டியில் பைனா அணியினர் 5 ஓவரில் 57 ஓட்டங்களைப் பெற்றனர். பதிலுக்கு கல்முனை ஸ்கோப்பன்ஸ் அணியினர் 36 ஓட்டங்களை மாத்திரம் பெற்றதால் 21 ஓட்டங்களால் பைனா அணியினர் வெற்றிபெற்றது.

## ரெய்ன்போ ஏ சம்பியன்



**அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்**

அநுராதபுரம் விவேகானந்தா தமிழ் மகா வித்தியாலயத்தின் பவளவிழாவை முன்னிட்டு பழைய மாணவர் சங்கத்தின் ஏற்பாட்டில் பழைய மாணவர்களிடையே நடைபெற்ற மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் ரெய்ன்போ வொரியர்ஸ் ஏ அணி சம்பியன் கிண்ணத்தை கைப்பற்றியது.

இச்சுற்றுப் போட்டியின் இறுதிப்போட்டி அண்மையில் வித்தியாலய விளையாட்டு மைதானத்தில் அதிபர் சத்யதேவி நந்தசேன தலைமையில் இடம்பெற்றது. இதன் போது இறுதிப்போட்டியில் ரெய்ன்போ வொரியர்ஸ் ஏ அணி ரெய்ன்போ வொரியர்ஸ் பி அணியை வீழ்த்தியது.

### ஷெவோன் டானியல் தலைமையில்

## இலங்கை இளையோர் குழாம் அபூதாபி பயணம்

ஐக்கிய அரபு இராச்சியத்தில் நடைபெறவுள்ள முத்தரப்பு மற்றும் ஆப்கானிஸ்தானுக்கு எதிரான ஒருநாள் தொடருக்கான இலங்கை 19 வயதுக்கு உட்பட்ட அணிக்கு தலைவராக ஷெவோன் டானியல் நியமிக்கப்பட்டுள்ளார்.

15 பேர் கொண்ட இலங்கை இளையோர் குழாத்திற்கே புனித ஜோசப் கல்லூரியின் டானியல் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். டானியல் தவிர, கடந்த ஆண்டு நடைபெற்ற 19 வயதுக்கு உட்பட உலகக் கிண்ணப் போட்டியில் பங்கேற்ற டிரவீன் மத்தியூஸ் மற்றும் மல்ஷ தருபத்தியும் அணியில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இலங்கை இளையோர் குழாம் நேற்று (15) அபூதாபியை நோக்கி பயணித்ததோடு அங்கு பங்களாதேஷ் மற்றும் ஆப்கான் அணியுடன் முத்தரப்பு ஒருநாள் தொடரில் ஆடவுள்ளது. இதனைத் தொடர்ந்து இலங்கை இளையோர் அணி ஆப்கானுடன் இரு ஒருநாள் போட்டிகளில் ஆடும்.

இலங்கை குழாம்: ஷெவோன் டேனியல் (தலைவர்), ஹிரான் ஜயசுந்தர, ஹிருன் கபுருபண்டார, டிரவீன் மத்தியூஸ்,



விஹாஸ் தெவ்மிக, விஷேன் ஹலம்ப, விஷ்வ ராஜபக்ஷ, தீரக ரணதுங்க, மனுல குலரத்ன, டினுர கலுபான, விஷ்வ லஹிரு, சினெத் ஜயவர்தன, மல்ஷ தருபத்தி, துவிந்து ரணதுங்க, கருக சங்கீத்

## பி∴பா உலகக் கிண்ண போட்டிகள் 104ஆக உயர்வு




2026 பிஃபா உலகக் கிண்ணத்தில் மொத்த போட்டிகளின் எண்ணிக்கை 64இல் இருந்து 104ஆக அதிகரிக்கப்பட்டுள்ளதாக சர்வதேச கால்பந்து சம்மேளனம் அறிவித்துள்ளது.

அமெரிக்கா, மெக்சிகோ மற்றும் கனடா நாடுகள் இணைந்து நடத்தும் போட்டியில் பங்கேற்கவுள்ள அணிகளின் எண்ணிக்கை 32 இல் இருந்து 48ஆக அதிகரிக்கப்பட்டிருக்கும் நிலையில் நான்கு அணிகளைக் கொண்ட 12 குழுக்களில் ஆரம்ப சுற்றுப் போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

இதில் புதிதாக 32 அணிகள் கொண்ட சுற்று ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதற்கு ஒவ்வொரு குழுவிலும் முதல் இரு இடங்களை பிடிக்கும் அணிகளுடன் மூன்றாம் இடம் பிடிக்கும் சிறந்த எட்டு அணிகளும் தகுதி பெறும்.

இதன்படி இறுதிப் போட்டிக்கு முன்னேறும் அணிகள் மற்றும் மூன்று மற்றும் நான்காவது இடங்களை பிடிக்கும் அணிகள் உலகக் கிண்ணத்தில் மொத்தமாக எட்டுப் போட்டிகளில் ஆடவுள்ளன. நடைமுறையில் உள்ள அட்டவணையில் அது ஏழு போட்டிகளாகவே உள்ளன.

ருவண்டாவில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற பீஃபா குழுக் கூட்டத்தில் இதற்கான ஒப்புதல் வழங்கப்பட்டது.

அடுத்த உலகக் கிண்ணம் அமெரிக்காவில் 11, மெக்சிகோவில் மூன்று மற்றும் கனடாவில் இரண்டு என மொத்தம் 16 நகரங்களில் நடைபெறவுள்ளன.

# சர்வதேச செய்திகள்

## காட்டின் ராஜா கொல்லப்பட்டது



தன்சானியாவில் உள்ள தேசிய பூங்காவான செரன்கெட்டியின் ராஜா என்று அழைக்கப்பட்ட வலிமை மிக்க சிங்கம் ஒன்று அதன் போட்டி சிங்கக் கூட்டத்தால் கொல்லப்பட்டுள்ளது.

பொப் ஜுனியர் என்று அழைக்கப்படும் இந்த சிங்கத்தை அடக்கம் செய்யும் விசேட நிகழ்வு ஒன்றை வனத்துறை அதிகாரிகள் ஏற்பாடு செய்துள்ளனர்.

செரன்கெட்டியில் சாதாரணமாகக் காணக் கிடைக்கும் இந்த சிங்கம் அதிகம் புகைப்படத்திற்கு சிக்கிய சிங்கமாக உள்ளது. இது தனது சகோதரன் டைக்கிவ் உடன் இணைந்து ஏழு ஆண்டுகள் ஆட்சி புரிந்தது.

இந்நிலையில் இளம் போட்டி சிங்கக் கூட்டம் ஒன்றினால் பொப் ஜுனியர் மற்றும் அதன் சகோதரன் கொல்லப்பட்டிருப்பதாக நம்பப்படுகிறது.

## ரஷ்ய விமானத்தில் மோதி அமெ. விமானம் விழுந்தது



ரஷ்யாவின் போர் விமானம் ஒன்று தனது ஆளில்லா விமானத்துடன் மோதியதில் அது விழுந்து நொறுங்கியதாக அமெரிக்க இராணுவம் கூறியுள்ளது. இந்தச் சம்பவம் கருங்கடல் பகுதியில் நடந்தது.

மோதல் ஏற்படுவதற்கு முன், தனது ஆளில்லா விமானம் மீது அந்த ரஷ்யப் போர் விமானம் எரிபொருளைச் சில முறை கொட்டியதாக அது குறிப்பிட்டது.

ரஷ்யாவின் இரு போர் விமானங்கள் ஆளில்லா விமானத்தை ஆபத்தான முறையில் இடைமறித்ததாகவும் அது தெரிவித்தது.

அந்த ஆளில்லா விமானம் கருங்கடல் பகுதியில் வழக்கமான கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்ததாக அமெரிக்க பாதுகாப்பு அமைச்சு கூறியது. ஆனால் ஆளில்லா விமானம் விழுந்து நொறுங்கியதற்குத் தான் காரணம் இல்லை என்று ரஷ்யா குறிப்பிட்டது. சம்பவத்திற்குக் கண்டனம் தெரிவிக்க ரஷ்யத் தூதரை அழைத்திருப்பதாக அமெரிக்க வெளியுறவு அமைச்சு குறிப்பிட்டது.

## இம்ரான் கான் ஆதரவாளர் பொலிஸ் இடையே மோதல்

### கைது முயற்சி முறியடிப்பு



பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் இம்ரான் கானை கைது செய்யும் பொலிஸாரின் முயற்சியை முறியடித்து அவரது ஆதாரவாளர்கள் இரண்டாவது நாளாக நேற்று போராட்டத்தில் ஈடுபட்டனர். தனது ஆதரவாளர்களின் பாதுகாப்புடன் இம்ரான் கான் லாஹூரில் இருக்கும் தனது வீட்டில் உள்ளார்.

நம்பிக்கை இல்லா வாக்கெடுப்பின் மூலம் கடந்த ஆண்டு பிரதமர் பதவியில் இருந்து நீக்கப்பட்ட இம்ரான் கான் முன் கூட்டி தேர்தலை நடத்த தீவிர பிரசாரத்தில் ஈடுபட்டிருக்கும் நிலையில், வழக்கு விசாரணைகளுக்கு முகம்கொடுத்துள்ளார்.

இந்நிலையில் சமன் பூங்காவில் இருக்கும் இம்ரான் கானின் வீட்டுக்கு வெளியில் அவரது தஹ்ரீகே இன்சாப் கட்சியின் ஆதரவாளர்களுக்கும் பொலிஸார் மற்றும் துணைப் படையினருக்கும் இடையே கடந்த செவ்வாய்க்கிழமை இரவு முழுவது மோதல் நீடித்தது.

இதன்போதும் ஆர்ப்பாட்டக்காரர்கள் கற்களை வீசி தாக்குதலில் ஈடுபட்டதோடு பொலிஸார் கண்ணீர்ப்புகைப் பிரயோகம் மேற்கொண்டனர். இந்த நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது தொடக்கம் 35க்கும் அதிகமான பொலிஸார் காயமடைந்திருப்பதாக லாஹூர் பொலிஸ் பேச்சாளர் செயித் முபாஷிர் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் நேற்று சூரியோதயத்திற்கு சற்று முன்னர் கான் வெளியிட்ட வீடியோ ஒன்றில், நிர்வாகத்தினர் சட்டத்துக்கு அப்பால் தம்மை கைது செய்ய முயல்வதாக குற்றம்சாட்டினார்.

பதவியில் இருந்தபோது கிடைத்த பரிசுகளை விற்றதாகவே இம்ரான் கான் மீது குற்றம்சாட்டப்பட்டுள்ளது. இந்த வழக்கு அரசியல் நோக்கம் கொண்டது என்று இம்ரான் கான் குறிப்பிட்டுள்ளார்.

## பாராளுமன்றம் செல்லாத ஜப்பானிய எம்.பி நீக்கம்



ஜப்பானில் பாராளுமன்ற உறுப்பினராகிய யூடியுப் பிரபலம் யொஷிகாசு ஹிகாஷிடானி பதவியிலிருந்து நீக்கப்பட்டுள்ளார்.

பதவியேற்று 7 மாதங்களாகியும் அவர் ஒரு நாள் கூட பாராளுமன்றக் கூட்டங்களில் பங்கெடுத்ததே இல்லை. வேலைக்கே வரவில்லை என்பதால் அவரைப் பதவியிலிருந்து நீக்க பாராளுமன்ற ஒழுங்கு நடவடிக்கைக் குழு முடிவு செய்துள்ளது.

இதுபோன்ற காரணத்திற்காகப் பணி நீக்கம் செய்யப்பட்டிருக்கும் ஜப்பானின் முதல் பாராளுமன்ற உறுப்பினர் இவராவார்.

ஹிகாஷிடானி யூடியுப் தளத்தில் பிரபலங்கள் பற்றிய வதந்திகளைப் பதிவேற்றம் செய்து வருகிறார். அவர் தற்போது ஐக்கிய அரபு இராச்சியத்தில் வசித்து வருவதாக நம்பப்படுகிறது.

மோசடி, அவதூறு ஆகிய குற்றச்சாட்டுகளின் பேரில் கைது செய்யப்படலாம் என்ற அச்சத்தில் அவர் பாராளுமன்றத்திற்குச் செல்ல மறுத்ததாக உள்ளூர் ஊடகங்கள் குறிப்பிட்டன.

## சூறாவளி: மாலாவியில் பலி 200ஐ தாண்டியது



மாலாவி நாட்டை இரண்டாவது முறையாக தாக்கிய பிரெடி சூறாவளியால் உயிரிழந்தவர்கள் எண்ணிக்கை 200ஐ தாண்டியுள்ளது.

சூறாவளியால் ஏற்பட்ட பெரும் வெள்ளத்தில் பல பகுதிகளும் மூழ்கி வீடுகள் அடித்துச் செல்லப்பட்டுள்ளன. வர்த்தகத் தலைநகரான பிளாண்டயரில் பல சிறுவர்கள் உட்பட அதிகம் பேர் உயிரிழந்துள்ளனர். நிலச்சரிவில் சிக்கியே பெரும்பாலானவர்கள் பலியாகியுள்ளனர்.

மோசமாக பாதிக்கப்பட்ட 10 மாவட்டங்களில் அரசு அவசர நிலையை அறிவித்துள்ளது. இந்த சூறாவளியால் அண்டை நாடான மொசம்பிக்கில் 20 பேர் உயிரிழந்துள்ளனர்.

## சீனாவில் புதிய நோய்: முடக்கத்திற்கு சிபாரிசு



சீனாவில் கொவிட்–19 பெருந்தொற்று வீழ்ச்சியடைந்து வருகின்ற சூழலில் நாடு முழுவதும் ஒரு வகைக் காய்ச்சலுக்கு உள்ளாகின்றவர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

இந்த இன்புளுவென்ஸா காய்ச்சலைக் கட்டுப்படுத்தவென முடக்கங்களைப் பயன்படுத்துவதற்கு ஷாங்சி மாகாணத்தின் முக்கிய சுற்றுலா மையங்களில் ஒன்றாக விளங்கும் சியான் நகரம் சிபாரிசு செய்துள்ளது. இதனை அடிப்படையாகக் கொண்டு பாடசாலைகள், வர்த்தக நிலையங்கள் மற்றும் சனநெரிசல் மிக்க இடங்களை அவசர நிலைமையின் போது மூடிவிடத் திட்டமிடப்பட்டுள்ளது.

சீனாவில் கொவிட் 19 பெருந்தொற்று காலம் முழுவதும் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்த கொவிட் பூச்சிய கொள்கை அண்மையில் தான் நீக்கப்பட்டது. இந்நிலையில் மீண்டும் முடக்கங்களுக்காக முன்வைக்கப்பட்டுள்ள சிபாரிசுகளை இட்டு சமூக ஊடகங்களில் கவலைகள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 மார்ச் மாதம் 16ம் திகதி வியாழக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.